


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுதம்

## 200ம் வருட நிறைவு மற்றும் பரிசளிப்பு விழா மலர் 2023

## தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம் திருகோணமலை

1823 - 2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DETAILS OF SCHOOL

| | |
|---|---|
| Name | :- T/T/Peruntheru Vigneswara Maha Vidyalayam |
| Postal address | :- 52,Main street, Trincomalee |
| Phone No | :- 0262221000 |
| Education zone | :- Trincomalee |
| D.S.Division | :- Town & Gravets Trincomalee |
| G.S. Division | :- Peruntheru 244L |
| Email | :- peruntheru1823vigneswara@gmail.com |
| Founded | :- 1823 |
| Elevated to M.V | :- 1979 |
| School No | :- 29147 |
| School ID | :- 1701004 |
| Census No | :- 16055 |
| Category | :- 1 C |
| School colour | :- White, Red,Yellow |
| School day | :- 15th January |
| House | :- Vaitheki (Blue) |
| | Vasuki (Red) |
| | Manimehalai (Green) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

திருகோணமலையினிலே பல்கலை
ஈந்திடும் விக்நேஸ்வரமே

(திருகோணமலையினிலே)

திரு தரும் கல்வியும் திகழ் ஒளி பரப்பிட
மாணவர் மாண்பும் உயர்ந்தே ஓங்கிட
ஒளிதரு நிலையமாம் பெரும்புகழ் ஈட்டிடும்
உருவினில் அமைந்த ஒளி தரும் கூடமாம்

(திருகோணமலையினிலே)

சிவப்பு நிறத்தில் செம்மையும் காட்டி
மஞ்சள் நிறத்தில் மங்களம் போற்றி
வெண்மை ஊட்டி தூய்மை கூட்டி
அன்பும் பண்பும் அறிவும் பெருகும்

(திருகோணமலையினிலே)

நால்வகை சமயமும் நயமுடன் கற்று
நற்றமிழ் அறிவையும் சிறப்புடன் பெற்று
நீதி கற்று நேர்மை ஏற்று
சேவையாற்றும் செந்தமிழ் கூடமாம்

(திருகோணமலையினிலே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Motto
## மகுடவாசகம்

"அன்பும் அறனும் பண்பும் பெறுக"

## Vision
## நோக்கக் கூற்று

"நவீன தொழிநுட்ப உலகிற்கு
முகம் கொடுக்கக் கூடிய
அறிவும், அறனும், சிறந்த பண்பும்
கொண்ட சமூகம்"

## Mission
## பணிக்கூற்று

"நவீன கல்வி உத்திகள் மூலம்
எதிர்காலத்தின் சவால்களுக்கு ஏற்ப
மேம்பாடடைந்த ஓர் சமூகத்தை
அர்ப்பணிப்புடன் உருவாக்குதல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே....

01. உரை - மலர்க்குழு

02. மலர்க் குழு

03. வாழ்த்துச் செய்திகள்

04. அதிபரின் புகைப்படம்

05. அதிபர் அறிக்கை

06. புகைப்படங்கள்

07. பாடசாலை வரலாறு

08. ஆக்கங்கள்

09. புகைப்படங்கள் (பாடசாலைச் செயற்பாடுகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை பிரவாகத்தின் குவி மையம் "அச்சுதம்"

தி/தி பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம் கல்வி வரலாற்றில் இருநூறு வருடங்கள் என்ற மைல் கல்லினை 2023 ஆம் வருடத்தில் கடக்கின்றது. 1823இல் ஆரம்பிக்கப் பட்ட இப் பாடசாலையின் படிப்படியான வளர்ச்சியில் கல்விச் செயற்பாடுகள் மட்டுமல்லாமல் ஏனைய புறக்கிருத்திய செயற்பாடுகளும் வல்லமை பெறுகின்றன.

இந்தவகையில் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் சிந்தனைகளுக்கும் தேடலுக்கும் வழி வகுக்கும் வகையில் "அச்சுதம்" என்ற இந்த சஞ்சிகையானது வெளியிடப்பட்டு வந்துள்ளது.

03.05.2023 அன்று வெளிவரும் இந்த அச்சுதமானது, இருநூறாவது ஆண்டு மலராக வெளிவருவது எமக்கு இரட்டிப்புச் சந்தோசத்தினை அளிக்கின்றது இவ் ஆண்டு மலர் உருப்பெறுவதில் எமக்கு ஆலோசனை வழங்கி ஆற்றுப்படுத்திய பாடசாலை அதிபர் திருமதி.A.V.A. கிருபாகரன் அவர்களுக்கும், நூலுருப்பெற உழைத்த மலர்க்குழுவினருக்கும், ஆக்கங்களை தந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்க்கும், வாழ்த்துச் செய்திகளை வழங்கிய கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர் மற்றும் ஏனையோருக்கும் எங்கள் மேலான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ் ஆண்டு மலரை வெளியிட உதவி வழங்கிய பழைய மாணவர்களுக்கும், பழைய மாணவர் சங்கத்தினருக்கும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் மலரினை அச்சிட்டு தந்த AR Traders அச்சகத்திற்கும் மனமார்ந்த நன்றிகள்.

-மலர்க்குழு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க்குழு

திருமதி.A.V.Aகிருபாகரன்(அதிபர்)
,திரு.தில்லைநாதன் பவித்ரன்,
திரு.அ.அதிஸ்டலிங்கம்,
திரு.ல. நாகலிங்கம்,
திரு.ச.ஜெயகுமார்
செல்வி.த.பிரவாகினி,
திருமதி. லோ.திலீபன்,
திருமதி.ரா.தவராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அவர்களது வாழ்த்துச் செய்தி

தி/தி/பெருந்தெரு விக்னேஸ்வர மகா வித்தியாலயத்தின் 200 வருட பூர்த்தியை நினைவு கூர்ந்து வெளியிடப்படும் இதழுக்காக வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திருகோணமலை கல்வி வலயத்திலே திருகோணமலை நகர மத்தியிலே அமைந்துள்ள இந்தப் பாடசாலை தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்குள் மிகவும் போற்றக்கூடிய ஒரு பாடசாலை எனத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். 1823ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை 2023ஆம் வருடம் இருநூறு வருடங்களை பூர்த்தி செய்யும் இந்தத் தருணத்தில் அந்த இருநூறு வருட காலத்தில் நாட்டிற்கு பயனுள்ள, புத்திசாலி பிரஜைகளை வழங்கியுள்ளதுடன், நல்ல சமூக கலாசார பண்புகளையும் கட்டியெழுப்புவதில் பெரும் பங்காற்றியுள்ளது.

கிழக்கு மாகாணக் கல்வியை இலங்கையிலே முதலிடத்திற்கு கொண்டுசெல்வதற்காக பெரும் வேலைத்திட்டத்திட்டத்தினை மேற்கொண்டுள்ள நாங்கள் வெற்றியின் உச்சத்திற்கு வந்துள்ள இத்தருணத்தில் அதற்காக பங்காற்றுகின்ற கல்விப்புலத்தின் சகலருக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதற்கு இதனை ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொள்கின்றேன். சிரேஷ்ட பாடசாலையான இப்பாடசாலை கடந்த காலத்தில் விசேடமாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த(சா/த), க.பொ.த(உ/த) பரீட்சைகளில் உயர் சித்திகளைப் பெற்றுள்ளதுடன், எதிர்காலத்திலும் பெறவேண்டும் என்பதுடன் ஆளுமையும் நல்ல பண்பாட்டு விழுமியங்கள் நிறைந்த, நாட்டிற்குப் பொருத்தமான பிரஜைகளை உருவாக்க வேண்டும் என்பதுடன் தேசிய ரீதியான சாதனைகளைப் பெற்று மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துகின்றேன்.

இப் பாடசாலையின் ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை இப்பாடசாலைக்குப்பங்களிப்பு செய்த முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், தற்போதைய அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரையும் வாழ்த்துவதுடன் இறைவன் ஆசீர்வதிக்கவும் வேண்டுகிறேன்.

H.E.M.W.G.திஸாநாயக்க
செயலாளர்
கல்வி அமைச்சு
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அவர்களது வாழ்த்துச் செய்தி

ஒரு சமுதாயத்தின் ஒழுக்கத்திற்கும் நல்வாழ்விற்கும் கலாசாரத்தின் பேணுதலுக்கும் அதன் வளர்ச்சிக்கும் பாடசாலைகளே அடிப்படையாக அமைந்துள்ளன. அங்கு விதைக்கப்படும் ஆரோக்கியமான விதைகளே நாளைய சமுதாயத்தினை காக்கும் விருட்சங்களாக விழுதுகளாக உயர்ந்து நிற்கின்றன. ஒரு சமுதாயத்தின் இருப்பினையும் அடையாளத்தினையும் பறைசாற்றி நிற்பன பாடசாலைகளே.

இதனடிப்படையில் திருகோணமலை நகரின் மத்தியில் எழில்மிகு தோற்றத்துடன் அமைந்திருக்கும் தி/ பெருந்தெரு விக்னேஸ்வர மகா வித்தியாலயம் தனது கல்விப் பயணத்தில் இருநூறு வருடங்களை நிறைவுசெய்துள்ளது. நானூற்று ஐம்பத்தாறு மாணவர்களையும் இருபத்தொன்பது ஆசிரியர்களையும் தற்போது உள்வாங்கியிருக்கும் இப்பாடசாலையானது தனது இருநூறு வருட நிறைவினை முன்னிட்டு வெளியிடும் ஆண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் நான் மகிழ்வடைகின்றேன்.

சீரான வகுப்பறைக் கல்வி நடவடிக்கைகளுடன் பிள்ளைகளை பண்புள்ள மனிதர்களாக்குவதற்கான வேலைத்திட்டங்களையும் ஒழுங்கமைப்புக்களையும் கொண்டிருக்கும் போதுதான் ஒரு பாடசாலை சமூகத்தில் வெற்றிபெற முடியும், அத்தகைய நிலைபேற்று நிலையினை அடைய இப்பாடசாலையும் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டுள்ளது என்பதில் ஐயமில்லை.

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் கல்விப் புலத்தில் பல மாற்றங்கள் உட்பாய்ச்சப்பட்டு வருகின்றன. அந்த மாற்றங்களுக்கேற்ப பாடசாலைகளின் கற்றல் - கற்பித்தல் நடைமுறைகளும் கட்டமைக்கப்பட வேண்டும். மேற்படி கல்விச் சீர்திருத்தத்தினை நடைமுறைப்படுத்தும் செயற்தளமாக விளங்கும் பாடசாலைகள் அதற்கேற்ப தம்மை தயார்ப்படுத்திக் கொள்ளாதவிடத்து அதன் உயர் நோக்குகளை அடைய முடியாது.

உயர்ந்த சீலமும் நன்னெறியும் கொண்ட மாணவ சமுதாயத்தை வளர்த்தெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பும் கடப்பாடும் ஒவ்வொரு பாடசாலைக்கும் உண்டு. பாடவிதானச் செயற்பாடுகளுடன் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் அதற்கு உறுதுணையாக நிற்கும். இப் பாடசாலையின் கல்வி மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் கடந்த கால அடைவுகள் திருப்திகரமாக உள்ளதுடன் மேலும் உயர்ச்சி பெறத் தேவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளையும் நுட்பங்களையும் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இப் பாடசாலையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிக் கொண்டிருக்கும் பாடசாலையின் சமூகத்தினை வாழ்த்துவதுடன் கடந்த காலத்தில் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக ஊனையும் உயிரையும் ஊட்டியவர்கள் பலர். அவர்கள் ஒவ்வொருவரும் இத்தருணத்தில் நினைவுகூரப்பட வேண்டியவர்கள்.

இப்பாடசாலையின் வளர்ச்சி கண்டு பெருமிதம் அடைந்து நிற்கும் பாடசாலையின் அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

அ.கனகசூரியம்<br>
மாகாணக் கல்விப் பணிப்பாளர்<br>
மாகாண கல்வித் திணைக்களம்<br>
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களது வாழ்த்துச் செய்தி

தி/தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம் தனது 200ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடத்தி வரும் பல்வேறு நிகழ்வுகளுக்கும் அவற்றின் ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் "அச்சுதம்" சஞ்சிகை வெளியீட்டுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பாடசாலை 1823 ஆம் ஆண்டில் ஒரு ஆரம்ப பாடசாலையாக திருகோணமலை நகரில் உருவாக்கப்பட்டது. ,அதனை அடிப்படையாக வைத்தே இனறு இரண்டாம் நூற்றாண்டு விழாவை இப்பாடசாலை கொண்டாடுகின்றது. இதனடிப்படையில் திருகோணமலை நகரில் முறைசார உருவாக்கப்பட்ட முதலாவது பாடசாலை இதுவாகும். திருகோணமலை நகரின் வீதி உட்கட்டமைப்பு ,இன்று வெகுவாக விருத்தியடைந்துள்ள போதிலும் அக்காலத்தின் நகர பிரதான வீதியில் அமைந்த ஒரு பிரபல பாடசாலையாக இது காணப்பட்டடையால் பெருந்தெரு விக்நேஸ்வர வித்தியாலயம் என அழைக்கப்பட்டது. 1979ல் மகா வித்தியாலயம் எனும் அந்தஸ்தை அடைந்ததுடன் 1981ல் க.பொ.த (உ/த) பாடசாலையாகவும் தரமுயர்த்தப்பட்டது.

பாடசாலையின் 200 வருட பூர்த்தி தற்போது கொண்டாடப்படுகின்ற போதிலும் கி.பி.1200ஆம் ஆண்டளவில் தமிழர் பிரதேசமெங்கும் பரந்து வியாபித்திருந்த திண்ணைக்கல்வி முறையின் முதன்மை நிலையமாக திருகோணமலையில் பிரகாசித்தது இப்பாடசாலையின் அமைவிடமே ஆகும். தமிழ்ப் பண்டிதர்களாலும் வித்துவான்களாலும் வளர்க்கப்பட்டு வந்த திருகோணமலை சமூகம் போர்த்துக்கேயர் காலத்தில் மிகப்பெரும் சவால்களை எதிர்த்து நின்று வெற்றியீட்டியது.

அன்று தொடக்கம் இன்றுவரை கல்வி வளர்ச்சிக்காக தியாகங்களைச் செய்தோரின் எண்ணிக்கையை எம்மால் அறுதியிட்டுக் கூற முடியாது. இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் சிறந்து விளங்குகின்றனர். அந்த வரிசையில் ,இன்றுள்ள பழைய மாணவர் சங்கமும் அதிபர் திருமதி. A.V.A.கிருபாகரன் அவர்களும் பா.அ.ச இப்பாடசாலையை மேலும் வளர்ச்சியடையச் செய்வதற்காக ஒன்று சேர்ந்து முன்னெடுக்கும் பயணம் பாராட்டத்தக்கது.

பாடசாலை என்பது சமாதானத்தின் உறைவிடம். பாடசாலையே அக அமைதியின் பிறப்பிடம். சமநிலை ஆளுமை கொண்ட சமுதாயத்தை ஸ்தாபிப்பதே பாடசாலையின் இலக்கு. ஆகையால் பரீட்சைப் பெறுபேறுகளை மேலும் தரம் வாய்ந்ததாக மாற்ற வேண்டியதுடன் நவீன கால சவால்களை வெற்றி கொள்ளும் இளஞ்சந்ததியை கட்டியெழுப்புவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலையின் தலையாய கடமையாக உள்ளது. அதை இப்பாடசாலை செய்துவருவதாக நம்புகிறேன்.

அதிபர், பழைய மாணவர்கள், ஆசிரிய பெருமக்கள், பெற்றோர், பரோபகாரிகள், விழா ஏற்பாட்டுக் குழுவினர் யாவரையும் இத்தருணத்தில் மிக்க உளநிறைவோடு வாழ்த்துகிறேன். சாமகானம் பாடி இறைவனையே பூமிக்கு கொண்டு வரும் சக்தி பெற்றிருந்த இராவண மன்னன் வழிபட்ட திருக்கோணச்சர ஆலயத்துக்கு வழிகாட்டும் திருகோணமலை பெருந்தெருவில் அமைந்து புகழ் பரப்பும் இப்பாடசாலையானது எல்லாம் வல்ல ஆனை முகத்தானாம் விக்னேஸ்வரப் பெருமான் அருளால் மேலும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் பிரகாசிக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

அன்புடன்
தி.ரவி
வலையக் கல்விப் பணிப்பாளர்
திருகோணமலை கல்வி வலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

திருகோணமலை பெரும் தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம் தனது 200வது ஆண்டு நிறைவினை (1823-2023)ஒட்டி 'அச்சுதம்' சிறப்பு மலரினை வெளியிடுவதில் மிக மகிழ்ச்சியடைகிறேன்.

திருகோணமலை மாவட்டத்தில் நீண்ட வரலாற்றை கொண்ட கல்விக் கூடமாக இயங்கி வரும் இப் பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருவதனை நாம் அவதானிக்கின்றோம்.

கல்வி நடவடிக்கைகள் மட்டுமல்லாமல் புறக்கிருத்திய செயற்பாடுகள் மற்றும் சமூக விடயங்களிலும் இப் பாடசாலையானது, மிக உன்னதமாக வளர்ச்சியை அடைந்து வருகின்றமையை இந்த இடத்தில் நினைவூட்டுகின்றேன். மேலும் வலயத்திற்கு தனது பரிபூரணமான ஒத்துழைப்பினை வழங்கி வரும் இப் பாடசாலையின் மாணவர் சமூகத்தை வழிநடத்தும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டுகின்றேன்.

மாணவர்களின் வளர்ச்சி குறித்து அக்கறையுடன் செயற்படும் அதிபரை இவ்வேளையில் பாராட்ட விரும்புகிறேன்.

தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகாவித்தியாலயம் நூற்றாண்டுகள் கடந்து வரலாற்றில் தனது தடங்களை பதித்துச் செல்ல எனது வாழ்த்துகள்

திரு. M. மோகனேந்திரன்
பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)
கோட்டக்கல்விப் பணிப்பாளர
திருகோணமலை கல்வி வலையம்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி



தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு 200வது அகவையில் காலடி எடுத்துவைத்த இவ்வேளையில் நீண்ட வருடங்களின் பின் எமது பாடசாலையில் பரிசளிப்பு விழா நடைபெறவுள்ளது. அதனை ஒட்டி வரும் 'அச்சுதம்' எனும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியும் இறைவனுக்கு முதற்கண் நன்றியும் தெரிவித்து நிற்கிறேன்.

"வானை அளப்போம்-கடல் மீனை அளப்போம்" என்றெல்லாம் கனவு கண்டான். பாட்டுக்கொரு புலவன் பாரதி. அவனது அன்றைய கனவை இன்றைய நாளில் நனவாக்கிட துடித்தெழுகின்ற சூரியன் போல 200வது ஆண்டுகளை கடந்த நிலையில் பல்வேறு அளப்பரிய சாதனைகளை நிலைநாட்டி இன்று பாரினில் ஒரு புதுப்பூவாய் மிளிர்ந்துள்ளது இப் பாடசாலை.

எமது மாணவர்கள், ஆசிரியர்களின் ஆக்கங்களையும் பரிசு பெறும் மாணவர் விபரங்களையும் தாங்கிய ஒரு வரலாற்று ஆவணமாக இம் மலர் வெளிவருகிறது. நகரத்தில் பெரும் சவால்களிற்கு முகம் கொடுக்கும் எம் பாடசாலையானது ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், நலன் விரும்பிகள் மற்றும் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் சகல துறைகளிலும் முன்னேறி வருகின்றது. ஒழுக்கத்திலும் கல்வியிலும் சிறந்து வளர்கின்ற எமது மாணவர் செல்வங்களை மனமார வாழ்த்துகின்றேன்.

இம் மலரை வெளிக்கொணர்வதற்கு சகல விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், நிறுவனங்கள் எல்லோருக்கும் என் இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன். எதிர்காலத்தில் உண்மையும் உழைப்பும் அர்ப்பணிப்பும் உள்ளவர்களின் உதவியுடன் இப்பாடசாலை மேலும் வளர்ச்சி பெற்று சாதனைகள் புரிய வேண்டும் எனவும் "அச்சுதம்" தொடர்ந்து வெளியாகவும் வாழ்த்துகிறேன்.

திருமதி.A.V.A.கிருபாகரன்
அதிபர்
தி/ பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை பிரதி அதிபரின் உள்ளத்திலிருந்து...........



திருகோணமலை நகரத்தில் சிறப்பாக இயங்கி வரும் பாடசாலைகளில் ஒன்றாக தி/தி/ பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம் விளங்குகிறது. கடந்த காலங்களில் இப்பாடசாலையில் வினைத்திறன் மிக்க பல அதிபர்கள் கடமையாற்றி ஓய்வு பெற்றமையை நான் நன்கு அறிவேன். இவ் வருடம் மாசிமாதம் 27ம் திகதி இப்பாடசாலையின் பிரதி அதிபராக கடமையேற்றுள்ளேன். அன்பும், அரவணைப்பும், கண்டிப்பும் நிறைந்த வினைத்திறன் மிக்க அதிபர் திருமதி.V.கிருபாகரன் அவர்களின் கீழ் பணியாற்றுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அத்தோடு இப்பாடசாலையின் 200வது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடும் பரிசளிப்பு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதிலும் பெருமகிழ்வடைகிறேன்.

ஏட்டுக்கல்வியில் மட்டுமல்லாது, இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் எமது மாணவர்கள் சிறப்பாக இயங்கி வருகின்றனர். ஒவ்வொரு திங்கட்கிழமை காலைக் கூட்ட நிகழ்வினை மாணவர்கள் தலைமை தாங்கி மும்மொழிகளில் நிகழ்த்தி வருதல் சிறப்பானதாகும். இந் நிகழ்வானது மாணவரின் மொழி விருத்தியடையச் செய்வதோடு, பேச்சாற்றல் மிக்கவர்களாகவும், சிறந்த ஆளுமையுடையவர்களாகவும் வளர்த்தெடுக்கும் என்பது நிச்சயமாகும்.

இவ்வருடம் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் மூன்று மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததோடு, 70 புள்ளிக்குமேல் சித்தி நூறு வீதமாகவும் அமைந்தமை பாராட்டுக்குரியதாகும். இவ்வருடம் தரம் ஒன்று அனுமதியும் முன்னைய வருடங்களை விட அதிகரித்துள்ளமை. பாடசாலையின் படிப்படியான வளர்ச்சியினை எடுத்துக் காட்டுகிறது. ஒவ்வொரு பாடத்திலும் அடைவு மட்டம் குறைந்த மாணவர்களுக்காக செயற்றிட்டத்தை தயாரித்து, அவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கு அயராது உழைக்கும் ஆசிரியர் குழாமிற்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு சமூகத்தின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் மிக முக்கியமானதாகும். அந்த வகையில் முன்னின்று உழைக்கும் பழைய மாணவர்கள் பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்து நிற்கிறேன். வசதி வாய்ப்புக்கள் குறைந்த பெரும்பான்மையான மாணவர்கள் கற்கும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் அனைவரும் கைகோர்த்து உழைக்க வேண்டும். அவ்வகையில் முன்வந்து செயற்படும் அனைவரையும் மனதார வாழ்த்துகிறேன்.

திருமதி.C.S.சுனில்குமார் (SLPS II)
பிரதி அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழைய மாணவர் சங்கச் செயலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

திருகோணமலையின் மிகப் பழைமையான பாடசாலை களில் ஒன்றான எமது பாடசாலையாகிய தி/தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகாவித்தியாலயம் தனது 200ஆவது ஆண்டு வெற்றிப்பயணத்தினை (1823-2023) வெகு சிறப்பாக கொண்டாடும் இத்தருணத்தில் பாடசாலை சமூகத்தினரால் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும், மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வில் பழையை மாணவர் சங்கத்தின் அனுசரணையில் "அச்சுதம் பரிசளிப்பு மலர்" ஒன்றை வெளியிடுவதில் பெருமகிழ்சி அடைவதோடு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

200 ஆண்டுகளைக் கடந்து வெற்றிப்பயணத்தில் பயணித்துக் கொண்டிருக்கும் பாடசாலை அதிபர், உப அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதோடு, எமது பாடசாலை மென்மேலும் கல்வியிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும், மேலோங்க வேண்டுமென ஆசி கூறுவதோடு, அதற்கான முழு ஒத்துழைப்பையும் பழைய மாணவர் சங்கம் வழங்கும் என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலையின் வளர்ச்சியில் நிர்வாகத்தோடு இணைந்து செயற்படுகின்ற முக்கியமான இரண்டு அமைப்புக்களான பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் , பழைய மாணவர் சங்கமுமே திகழ்கின்றன. இந்த இரண்டு அமைப்பக்களையும் ஒருங்கமைத்து வழிகாட்டி அமைத்துச்சென்று பாடசாலையின் வளர்ச்சியிலே பங்களிப்புச்செய்ய வைக்கும் அதிபர் அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இக்குறிப்பிட்ட சில காலங்களுக்குள் பாசாலையின் 200வது ஆண்டினை முன்னிட்டு பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து நடத்தி முடித்த மற்றும் இன்னும் பல வேலைத்திட்டங்களை பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், பாடசாலையின் பௌதீக வளர்ச்சிக்ாகவும் முன்னெடுக்கவுள்ள எமது பழையமாணவர்களுக்கும், என்னோடு கைகோர்த்து நிற்கும் பழைய மாணவர் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும், மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலையின் வளர்ச்சியே எமது முழுமுதல் நோக்கமாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு மீண்டும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களை பாடசாலை சமூகத்திற்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

திரு இ.அசோக்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம் - தி/தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகாவித்தியாலயம்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

இந்து சமுத்திரத்தின் கிழக்கே கத்துங்கடலோசைக் காதில் கேட்க வீறு பெற்றெழுந்து நிற்கும் வேங்கை போல திருகோணமலையின் பிரதான வீதியின் கண்ணே தி/பெருந்தெரு விக்நேஸ்வரா எனும் பெருமை கொண்ட நாமத்துடன் கம்பீரமாய் காட்சியளிக்கும் எமது பாடசாலையின் 200ஆவது ஆண்டு நினைவு விழா மலருக்கு வாழ்த்திச் செய்தி கூறுவதில் பேருவகை அடைகின்றேன்.

இத்தனை வருட காலமாக பல கல்வியலாளர்களையும், சமூக சேவையாளர்களையும், அரசாங்க அதிகாரிகளையும் தன் வகுப்பறை எனும் கருவறையிலிருந்து விக்நேஸ்வரா தாய் ஈன்றெடுத்துள்ளாள.

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை
சான்றோன் எணக் கேட்ட தாய் "

என்ற வள்ளுவரின் கூற்றின் படி இத்தாய் இவ் வேளையில் பெருமிதம் கொண்டு திகழ்கின்றாள்.

அத்துடன் கடந்த ஈராண்டு காலத்தில் அதிபர் திருமதி.A.V.A கிருபாகரன் அம்மணி அவர்களின் நேர்த்தியான திறமையான தலைமையின் கீழ் பாடசாலையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும் அவற்றுடன் 5ம் ஆண்டு புலமைப்பரில், க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர்தரம் பரீட்சை பெறுபேறுகளின் அதிகரிப்புக்களும், மாணவர்களின் சிறப்பான ஒழுக்காற்று நடவடிக்கைகளும் சமச்சீரான உயர் கோட்டில் செல்வது இப்பாடசாலைக்கு இன்னும் கூடுதல் சிறப்பைச் சேர்த்துள்ளது.

அப் புகழும் பெருமையும் மென் மேலும் உயர்ந்து வானோங்கு நிலை அடைய அருமை மிக்க அதிபரையும் அவருக்குப் பக்கபலமாக இருந்து உழைக்கும் ஆசிரியர்கள், பிரதி அதிபர்கள், கல்வி சாரா ஊழியர்கள் என அனைவரையும் மனமுவந்து வாழ்த்துவதுடன் மாணவர்களையும் மென்மேலும் வளர வேண்டும் என வெகுவாக பாராட்டி வாழ்த்துகிறேன்.

பா.அ.ச.செயலாளர்
திருமதி.விஜித்தா ஷிசோக்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்




திருமதி. A.V.A.கிருபாகரன் **S.L.P.S 1**
***B.A.Dip in Edu.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர், பிரதி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள்



01) **இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) :** திருமதி மா.சிவகரன், திருமதி.மோ.துரைநாயகம், திருமதி.சா.பார்த்தீபன், திருமதி.C.S.சனில்குமார், (பிரதி அதிபர்) திரு.ம.சச்சிதானந்தம் (உதவி அதிபர்), திருமதி.A.V.Aகிருபாகரன் (அதிபர்), திரு.நா.வசீகரன், திரு.அ.அதிஸ்டலிங்கம், திருமதி.தி.ஜோன்பெற்றிக், திருமதி.இ.காளிராசா

02) **நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) :** திரு.ல.நாகலிங்கம், திருமதி.J.R.மைக்கல், திருமதி.த.அகிலன், திருமதி.சீ.மொகமட் ஜவாத், திருமதி.கி.பெர்ணாண்டோ, திருமதி.க.சிந்துஜா, திருமதி.சி.விக்னேஸ்வரன், திருமதி.ச.ஜெயகுமார், திருமதி.சு.நித்தியானந்தன், திருமதி.பி.சுபன்யா, திருமதி.உ.ஜீவகன், திருமதி.ச.வேணுகா, திருமதி.சி. மொஹமட் சபீக் உம்முல், செல்வி. W.M.N.மதுவந்தி, திருமதி.க.விமலேந்திரன், திரு. தில்லைநாதன் பவித்ரன்

03) **நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) :** செல்வி.யோ.கிரிஜா, திரு.யோ.மதன்குமார், திருமதி.H.F.ராசிதாபர்காத், திருமதி.ரா.தவராஜா, திருமதி.வி.தவராசா, திருமதி.தி.ஜெயசங்கரன், திருமதி.தே.சுனில், திருமதி.சு.மகேஸ்வரன், திருமதி.லோ.திலீபன், திருமதி.E.T. பெர்ணான்டோ, செல்வி.ம.பிராத்தனா, திருமதி.தீ.சாய்பிரணீதா, செல்வி.த.பிரவாகினி, திரு.இ.செந்தூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபர்கள்



திருமதி.C.S.சனில்குமார் S.L.P.S 2



திரு.ம.சச்சிதானந்தம் S.L.P.S 2

# முகாமைத்துவக் குழு



இடமிருந்து வலம் இருப்பவர்கள் : திரு.தில்லைநாதன் பவித்ரன், திரு.ம.சச்சிதானந்தம், திருமதி.A.V.A.கிருபாகரன்(அதிபர்), திரு.நா.வசீகரன், திரு.அ.அதிஸ்டலிங்கம்

இடமிருந்து வலம் நிற்பவர்கள் : திருமதி.சி.மொஹமட் சபீக் உம்முல், திருமதி.மோ.துரைநாயகம், திருமதி.ம.சிவகரன், திருமதி.தி.ஜோன் பற்றிக், திருமதி.இ.காளிராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவி அதிபர்



திரு.நா.வசீகரன்

## பகுதித் தலைவர்கள்



ஆரம்பப்பிரிவு
திருமதி மா. சிவகரன்



இடைநிலை பிரிவு 6-9
திருமதி இ.காளிராசா



இடைநிலை பிரிவு 10-11
திருமதி தி.ஜோன்பற்றிக்



உயர்தரப்பிரிவு
திரு அ.அதிஸ்டலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

மனிதப் பண்பாட்டின் மகத்துவமும் இயற்கை ஈந்த எழிலும் ஒருசேர ஓங்கி நின்று நீலக் கடலின் திரிபடையாத் தன்மையோடு நேர்த்தியான குறிக்கோளோடு குவலையம் போற்ற நிமிர்ந்து நிற்கிறது .எங்கள் விக்நேஸ்வர மகா வித்தியாலயம். திருகோணமலை நகர்புறத்திலே, பிரதான வீதியில் மிகத் தொன்மையான வரலாற்றைக் கொண்டு அழகும் அமைதியும் நிறைந்து, சீரிய கல்விப்பணியினை சிரத்தையுடன் ஆற்றிவரும் கல்விக்கூடம் இதுவாகும்.

தி/விக்நேஸ்வர மகா வித்தியாலயம் என்ற பெயருக்கு ஏற்றாற்போல் பாடசாலை வாயிலில் வழிகாட்டும் முதல்வராக விக்நேஸ்வரப் பெருமானையும் கலைகளை அள்ளிவழங்கும் கலைத்தாயாக சரஸ்வதியை யும் துணையாகக் கொண்டு நாள்தோறும் நாடிவரும் கல்விச் சமூகத்திற்கு ஒளியினை வழங்கிடும் இடமாக எமது பாடசாலை அமைந்துள்ளது.

"அன்பும் அறனும் பண்பும் பெறுக" என்ற மகுட வாசகத்தையும் (Motto) "நவீன கல்வி உத்திகள் மூலம் எதிர்காலத்தின் சவால்க ளுக்கேற்ப மேம்பாடடைந்த ஓர் சமூகத்தினை உருவாக்குல்" என்ற பணிக் கூற்றினையும் (Mission) "நவீன தொழிநுட்ப உலகிற்கு முகம் கொடுக்ககூடிய அறிவும் அறனும் சிறந்த பண்பும் கொண்ட சமூகம் (Vision) என்ற நோக்ககூற்றினையும் கொண்டு எமது பாடசாலை ஒழுக்கத்திலும் கல்வியிலும் புறக்கிருத்திய செயற்பாடுகளிலும் சோராது தளராது சேவையாற்றி வருகிறது.

200வது அகவையில் காலடித்தடம் பதிக்கின்ற இத்தருணத்திலே எமது பாடசாலையில் வெளியிடப்பட்டு வருகின்ற "அச்சுதம்" சஞ்சிகையினை நீண்டதொரு இடைவெளியின் பின்னர் மீண்டும் வெளியிட வரமளித்த இறைவனுக்கு நன்றி கூறி நிற்கின்றேன். கடந்த இரண்டு வருடங்களை இணைத்து பரிசளிப்பு விழாவினையும் 200வது ஆண்டு நிறைவினையும் பெருவிழாவாக கொண்டாடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடை கின்றேன்.

இந்த 200 வருட காலத்தில் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு வித்திட்ட முன்னாள் அதிபர்களையும் ஆசிரியர்களையும் அவர்களது அர்பணிப்பான சேவைகளையும் பெரும் மதிப்போடு இவ்விடத்தில் மனம் நிறைய வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளேன். வைத்தியர்கள், வழக்கறிஞர்கள், கணக்கா ளர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள் போன்ற பலதரப்பட்ட கற்றோர் சமுதாயத் தினை உருவாக்கிய பெருமைக்குரிய இவர்களது சேவைபற்றிய விடயங்களை பாடசாலையிலுள்ள நூல்கள், பரிசளிப்பு விழா மலர்கள் முன்னாள் அதிபர்களின் துணைகொண்டு தொகுத் துள்ளேன்.

மெதடிஸ்த திருச்சபையினால் 1823ல் "ஜோசப் பொட்" அவர்களின் தலைமையின் கீழ் எமது பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இன்றைய தி/ பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியா லத்தின் ஆரம்ப கால அதிபர்கள் பற்றிய விபரங்கள் பூரணமாகக் கிடைக்கப் பெற வில்லை ஆயினும், 1885 இலிருந்து அதிபர்களாக

திரு.மயில்வாகனம் முருகப்பிள்ளை
திரு.பண்டிதர் சபாபதி
திரு.ம.க.சிதம்பரபிள்ளை
திரு.எஸ்.கே.செல்வ நயனார்
திரு.எஸ்.கனகசபை
திரு.எஸ்.மாரக்கண்டு
திரு.சி.நடராஜா
திரு.க.ஜீவரட்ணம்
திரு.எஸ்.பாலசுப்ரமணியம்
திரு.எஸ்.திருச்செல்வம்
திரு.என்.சந்திரகாந்தன்
திரு.கு.கோணாமலை
திரு.நா.இராஜநாதன்
திரு.சீ.மதியழகன்
திருமதி.I.M.முரளிதரன்

ஆகியோருடன் 2021.08.02.தொடக்கம் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை திருமதிA.V.A கிருபாகரன் ஆகிய நான் பாடசாலையின் அதிபராக கடமையாற்றி வருகின்றேன். கிழக்கு மாகாண கல்விச் செயலாளரின் கடிதத்திற்கு அமைவாக அதிபராக இப்பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு, 2021.08.02 பொறுப்பெடுத்தேன். ஏறக்குறைய 2 வருடங்கள் பூர்த்தியடைய இருக்கின்ற நிலையில் கல்வி மற்றும் ஒழுக்கத்திற்கு முன்னுரிமை அளித்துச் செயற்பட்டு வருகின்றேன்.

## கல்வி வளர்ச்சி

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையை நோக்கினால் 2020, 22 மாணவர்கள் தோற்றி வெட்டுப்புள்ளிக்கு மேல் ஒரு மாணவரும், 70 புள்ளிக்கு மேல் 20 மாணவர்களும் 2021ல் 36 மாணவர்கள் தோற்றி, வெட்டுப்புள்ளிக்கு மேல் 01 மாணவரும் 70 புள்ளிக்கு மேல் 26 மாணவர்களும், 2022ல் 23 மாணவர்கள் தோற்றி வெட்டுப்புள்ளிக்கு மேல் 03 மாணவர்களும் 70 புள்ளிக்கு மேல் அத்தனை மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர். அதாவது 100 சதவீத சித்தி கிடைத்துள்ளது.

| ஆண்டு | வீதம் |
|---|---|
| 2020 | 90 |
| 2021 | 72 |
| 2022(2023) | 100 |

இவ் வருடம் 100% சித்தி கிடைத்துள்ளமையால் அதிகளவு மாணவர்கள் தரம் 01ற்கு உள்வாங்கப்பட்டனர். அத்தோடு ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர் வரவும் தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது.

க.பொ.த சாதாரண தரம்

| ஆண்டு | வீதம் |
|---|---|
| 2019 | 77.5 |
| 2021(2020) | 26 |
| 2022 | 73 |

க.பொ.த உயர் தரத்தில்........

| (கலைப்பிரிவு) | | (வர்த்தகம்) | |
|---|---|---|---|
| ஆண்டு | வீதம் | ஆண்டு | வீதம் |
| 2019 | 67% | 2019 | 36% |
| 2020 | 55% | 2020 | 50% |
| 2021/2022 | 55.6% | 2021/2022 | 60% |

பல்கலைக்கழக அனுமதி

| | |
|---|---|
| 2019 | 67% |
| 2020 | 55% |
| 2021 | 55.6% |

கொரோனா மற்றும் நாட்டில் ஏற்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக மாணவர்களின் கல்வி அபிவிருத்தியிலும் மாணவர் எண்ணிக்கையிலும் சற்றுத் தளர்வு நிலை காணப் பட்டாலும் பௌதீக வளங்கள் ரீதியாகவும் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டிய தேவை காணப்பட்டது. இந்நிலையை மாற்றி கல்வி அபிவிருத்தியிலும் மாணவர் எண்ணிக்கை யிலும், ஒழுக்கத்திலும் பௌதீக வளங்க ளிலும் ஒரு வளர்ச்சிப்போக்கில் எமது பாடசாலை சென்றுக் கொண்டிருக்கிறது அந்த அடிப்படையில் இவ்வருடம் O/L, A/L தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைகளுக்கு எமது பழைய மாணவர்களால் செயற்றிட்டங்கள் செய்யப்படுவதுடன் வலுவான பழைய மாணவர் சங்கம் ஒனறினை உருவாக்கி அவர் கள் மூலம் பல சிறப்பான செயத்திட்டங்கள் .நடைபெற்று வருகின்றன. அவர்கள் இப்பாடசாலைக்கு கிடைத்த வரப்பிரசாத மாகவே நான் கருதுகிறேன். (குறைவான புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு இரு ஆசிரியர்களால் செயற்றிட்ட மொன்று செயற்படுத்தப்படுகின்றது)

மாணவர்களின் பெற்றோர்களை தவணை, மாதாந்த, அலகுப் பரீட்சைகள் முடிந்தவுடன் இவ் விரண்டு வகுப்புக்களாக அழைத்து அம்மாணவர்கள் பெற்ற புள்ளிகள் மற்றும் வரவு போன்ற விடயங்கள் பெற்றோருக்கு ஆவணங்கள் மூலம் தெரிய படுத்துகின்ற போது, தங்களது பிள்ளைகளின் உண்மை நிலையினை அவர்கள் அறிந்து கொள்வதுடன் அதீத அக்கறையும் கொள்கின்றனர். நடத்தப்படுகின்ற கூட்டங் களுக்கு அவர்களது வருகை 95%ற்கு மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது என்பதனைன் கூறி நிற்கின்றேன். இவற்றுடன் தரம் 05,O/L, A/L மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக பாடசாலைக்கு வெளியிலிருந்து வளவாளர்கள் அழைக்கப்பட்டு முன்னோடிக் கருத்தரங்கு களும், வழிகாட்டல் செயலமர்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது

**ஆளணி**

460 மாணவர்களை கொண்ட எமது பாடசாலை அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், 29 ஆசிரியர்கள் 3 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் 05 கல்வி சாரா உத்தியோகத்தர்களும் பணியாற்றி வருகின்றனர். எம் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மட்டுமல்ல, பொருளாதாரப் பிரச்சினைகளும் தாராள மனம் கொண்ட ஆசிரியர்கள் பல வழிகளில் உதவி வருகின்றனர். எம் ஆசிரியர்களின் அயராத முயற்சியும், அர்பணிப்பும், குழு உணர்வுமே. எமது பாடசாலையின் வளர்ச்சிக்குக் காரணமாகும் என பெருமையுடன் கூறிக் கொள்கிறேன். எனக்கு பக்க பலமாக நிற்பதுடன் கல்வி, நிர்வாகம், புறக்கிருத்திய விடயங்களிலும் திறமைமிக்கவர்களாக நின்று தோள் கொடுக்கின்றனர். இவர்கள் எனக்கு கிடைத்த அதிஷ்டம் ஓய்வறையில் அவர்கள் சிலவிடும் நேரம் மிகக்குறைவென்றே நான் கூறுவேன். அத்தோடு எமது பாடசாலையி லிருந்து ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள், பதவியுயர்வு பெற்றுச் சென்ற இடமாற்றம் சென்ற ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் என அனைவரின் சேவைக ளையும் அர்பணிப்பையும் மதிப்புடன் இவ்விடத் தில் நினைத்து நன்றி பகிருகின்றேன். அத்துடன் இந்த உலகை விட்டுப் பிரிந்து சென்ற எம் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களையும், நினைவு கூறுகின்றேன்.

## இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

கல்வி தவிர்ந்த ஏனைய நேரங்களில் மாணவர்களின் எண்ணங்கள் சிந்தனைகள், செயற்பாடுகள், நெறிபிறழ்வான முறையில் செல்லாமல்தடுக்க இவ் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் பெரும் பங்கினை ஆற்று கின்றன. ஒவ்வொரு தவணையின் ஆரம்பத் திலும் வகுப்பறைப்போட்டிகள் நடத்தப்படு கின்றன வெளியிடங்களிலிருந்து கல்விமான் களை வரவழைத்து ஆரம்பப்பிரிவு இடைநிலைப்பிரிவு, உயர்நிலைப்பிரிவு என பிரித்து போட்டிகள் நடத்தப்படுகின்றன. கவின் நிலை, விளை திறன், சுத்தம் போன்ற இன்னொரன்னவற்றை மையமாக வைத்து போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங் கப்படுகின்றன.

இவற்றினை விட விவசாயத்தோட்டம், வளாகத்திற்குள் உள்ள சிறிய நிலப்பரப்பிலும் நஞ்சற்ற உணவு உற்பத்தி செய்து, அதனை மாணவர்களின் உணவிற்காகப் பயன் படுத்துகின்றோம். இவற்றுடன் பான்ட் வாத்தியக் குழு, சாரணர் குழு, சுற்றாடல் கழகம், சுகாதாரக் கழகம், என்பனவும் செயற்படுவதுடன் பாடசாலையின் 200வது ஆண்டையொட்டி இல்லங்களுக்கிடையில் விளையாட்டுப்போட்டி, மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்களின் பங்கு பற்றுதலோடு சிறப்பாக நடைபெற்று பரிசில்களும் வழங்கப்பட்டன. 200வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு கடற்கரையோரச் சுத்திகரிப்பு, இரத்த தானம், மர நடுகை, தரம்-05,தரம்-11, மாணவர்களுக்கான பரீட்சைகள், இலச்சினை வெளியீடு, கலாசார போட்டிகள், மற்றும் நடைபவனி என்பன பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர், பழைய மாண வர்கள், நலன் விரும்பிகள் போன்றோரால் மிகவும் சிறப்பாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அத்தோடு மட்டுமல்லாது எமது பாடசாலை மாணவர்களின் தனித்திறமையைக் கண்டறிந்து தமிழ் மொழித் தினப் போட்டிகள், சமூக விஞ்ஞானப் போட்டிகள், மெய்வல்லுனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிகள், போன்ற போட்டி நிகழ்ச்சிகளுக்கு மாணவர்களை தயார்படுத்தி அவர்களை கோட்டம், வலயம், மாவட்டம், தேசிய ரீதியாக பரிசில்களைப் பெறச் செய்வதற்கான வழிகாட்ட ல்களும் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

## பாடசாலையும் பௌதீக வளப் பயன்பாடும்

“எங்கே ஒரு பாடசாலை திறக்கப்படுகிறதோ அங்கே ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன” என்பது மூத்தோர் மொழிந் தவை அந்த வகையில் ஒரு பாடசாலையை பிள்ளை விரும்பும் பாடசாலை யாக மாற்ற வேண்டியது எமது தலையாய கடமையாகும். அந்த அடிப்படையில் முதலில் பௌதீக வளங்கல் ரீதியாக பாடசாலையைப் புணரமைப்புச் செய்துள்ளோம். விஞ்ஞான கூடம், ஆசிரியர் ஓய்வு அறை, விஷேட தேவை யுடைய மாணவர்களுக்கான வகுப்பறை, மலசல கூட புணரமைப்புச் செயற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் பிரதான மண்டபமும் புணரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. மேலும் மாடிக் கட்டிடங்களும் அதன் வகுப்பறைகளும் வர்ணப்பூச்சு பூசி ஒவ்வொரு வகுப்பறைக ளுக்கும் ஒளி வசதிகளும் மின் விசிறி வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலாக பாடசாலையின் தெய்வங் களான இரண்டு விநாயகர் சிலைகள் மற்றும் சரஸ்வதி சிலைகளுக்கும் வர்ணப்பூச்சு ஆச்சாரியர்களை கொண்டு செய்யப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது. எமது பாடசா லையின் மதில்களுக்கு வர்ணப்பூச்சு இடப்பட்டதோடு முன் பக்கச் சுவரில் எமது பாடசாலையின் 200வது ஆண்டு நிறைவை யொட்டி சின்னமும் பதிக்கப்பட்டதுடன் மாணவர்கள் பாடசாலைக்கு நுழைந்தவுடன் கைகளை கழுவுவதற்கு ஏற்ற முறையில் நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புகளும் செய்து கொடுக்கப்பட்டதுடன் எமது பாடசாலையின் பெயர் மூன்று மொழிகளிலும் எழுதப்பட்டது .இதன் மூலம் மாணவர்கள் விரும்பி பாடசாலைக்கு வருவதுடன், மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகியது.

இவற்றறையெல்லாம் செய்து தந்த எமது முன்னாள் வலய கல்வி பணிப்பாளர் புலம் பெயர் நாடுகளிலுள்ள பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் நிறுவனங்களிற்கும் இங்நேரத்தில் மிகுந்த நன்றி கூறுகின்றேன். (எமது மாணவர்களுக்கு தொழிநுட்பத்துடன் கூடிய வசதிகளை ஏற்படுத்த SMART TV ஆளுநர் அலுவலகம் ஊடாக எமக்கு கிடை க்கப்பெற்றுள்ளது. அதன் மூலம் மாணவர்கள் மிகுந்த பயனைப் பெறுகின்றனர்)

## பாடசாலையும் சமூகமும்

ஒவ்வொரு பாடசாலையின் வளர்ச்சியிலும் மிகப்பெரிய பங்களிப்புச் செய்வது சமூகமாகும். S.D.C, O.S.A, அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், வங்கிகள் போன்றவர்களின் பங்களிப்புக்காக இவ்வேளையில் நன்றிகளைச் கூறுகின்றேன். எமது பாடசாலை நகரத்தின் மத்தியில் அமைந்திருந்தாலும் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் பெற்றோர்களின் பிள்ளைகள், காப்பகங்களில் இருந்து வரும் பிள்ளைகளுமே அதிகமாக உள்ளனர். மிகுந்த ஆற்றலும், அறிவும் கொண்ட இம் மாணவர்களுக்கு செய்யும் சேவையே மிகப்பெரிய சேவையாகக் கருதுகின்றேன். பாடசாலையின் சுத்திகரிப்பு, டெங்கு ஒழிப்பு, சிரமதானங்கள் பெற்றோரின் உதவியுடன் நான் அப்பாடசாலைக்கு வந்த நாள் முதல் இன்றளவிலும் சிறப்பாக நடைப்பெற்று வருவதுடன் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பைப் பேணும் வகையிலமைந்த பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டங்களுக்கும் பெற்றார் கூட்டங் களுக்கும் மண்டபம் நிறைந்து வழியும் அளவிற்கு சமூகத்தினரின் பங்களிப்பு காணப்படுகின்றமையும் குறிப்பிடதக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பல வேலைதிட்டங்கள் செயற் பட்டபோதிலும் 200வது அகவையில் கம்பீரமாய் காலடி எடுத்து வைத்துள்ள எமது பாடசாலையில் சில தேவைப்பாடுகளும் மேலெழுந்துள்ளன.

மழைக்காலங்களில் பாடசாலையின் முன் பகுதி நீரினால் நிறைந்து நிற்கின்றது. எனவே, நிலத்தினை உயர்த்தியமைக்க வேண்டி யுள்ளது.

சுத்திகரிப்புத்தொழிலாளி ஒருவரின் தேவையும் உள்ளது

பகல் நேர காவலாளியும் தேவைப்படுகிறது.

## இதர செயற்பாடுகள்

நீண்ட காலமாக எமது பாடசாலை பலதரப்பட்ட பொதுப்பரீட்சைகள் மற்றும் R.C.C நிலையமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எப்பொழுதும் எமது பாடசாலை சமூகம் சார்ந்தவர்களுடனும் பாடசாலைக்கு அப்பாலும் நல்லுறவைப்பேணி அவர்களுக்குப் பல வகைகளில் எனது நிர்வாகம் ஒத்துழைப்பை வழங்கி வருவதுடன் இந் நிலைமையினை என்றும் சிறப்புடன் பேணுவது என் கடமையாகும். இது தவிர பட்டபின் கல்வி டிப்ளோமா பாடநெறியும் எமது பாடசாலை யிலே சனி, ஞாயிறு தினங்களில் நடை பெறுகிறது அதற்கும் ஒத்துழைப்பை வழங்குகின்றோம்.

கல்வியிலும் ஒழுக்கத்திலும், புறக்கிருத்தியச் செயற்பாடுகள் ஒரு நேர்கோட்டுப் பாதையில் பயணிக்கின்ற விக்நேஸ்வர மகா வித்தி யாலயத்திற்கு நான் அதிபராக பொறுப்பேற்று கடமையாற்ற தலைப்பட்ட கடந்த இரண்டு ஆண்டுகளாக இன்று வரையிலும் எதுவித தொய்வும் சரிவும் இல்லாது உயரிய இலக்கை நோக்கியே என் பாதையை திட்டமிட்டுள்ளேன் இதுவரையில் வலராறு காணாத வளர்ச்சியாக தரம் 05 பரீட்சையில் 100 வீத சித்தியினையும் பெற்று என் எண்ணத்தை வலுப்படுத்தியுள்ளேன். இந் நிலையினை தக்க வைத்து எதிர் காலத்தில் எமது பாடசாலை கல்வி , ஒழுக்கம், கலை, கலாசாரம், என்பவற்றில் சிறந்து விளங்கு வதுடன் எம் மாணவச் செல்வங்கள் எதிர்கா லத்தில் சிறந்த தொழில்களில் ஈடுபட்டு நற்பிரஜைகளாகத் திகழ வேண்டும் என்பது எனது பேராவலும் நம்பிக்கையமாகும்

கலைகள் யாவும் கற்று
கறைகள் யாவும் அற்று
நல்லவை சிறக்க நானிலம் போற்ற
நல்லதொரு சமுதாயம் உருவாக

நன்றியுடன் வாழ்த்துகிறேன்

**நன்றி**

திருமதி.A.V.A கிருபாகரன்
அதிபர்
தி/ பெருந்தெரு விக்நேஸ்வர மகா
வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வரலாறு

இலங்கையில் மெதடிஸ்த திருச்சபையின் கிளையினை ஸ்தாபித்து மெதடிஸ்த திருச்சபை சார்பாக பணியாற்றுவதற்காக கலாநிதி தோமஸ் கோக் அவர்களின் தலைமையில் ஆறு பேர் கொண்ட குழுவொன்று 1813ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ம் திகதியன்று தமது கடல் வழிப் பயணத்தை ஆரம்பித்தது. ஆயினும் இலங்கையை அடையுமுன்னரே 1814ம் ஆண்டு மே மாதம் 02ம் திகதி, கலாநிதி தோமஸ் கோக் அவர்கள் கப்பலிலேயே மரணித்து இறைவனுக்குள் அடைக்கலமானார். இறை பணிக்கெனத் தம்மை அர்ப்பணித்த அவரது திருப்பணிக்குழுவினர் இத்துயரெனும் தடையினால் தளர்ந்து விடாது, பயணத்தை தொடர்ந்து 1814ம் ஆண்டு யூன் மாதம் 29ம் திகதி இலங்கையின் காலி கரையோரத்தை வந்தடைந்தனர். அன்றிலிருந்தே இலங்கையில் மெதடிஸ்த திருச்சபையின் வரலாறு தோற்றம் பெற்றது.

மெதடிஸ்த திருச்சபை இலங்கையின் கரையோரப் பகுதிகளிலேயே தனது ஆரம்பக் காலப் பணிகளைச் செயல்படுத்தியது கரையோரப் பிரதேசங்களில் அமைந்துள்ள நகரங்களுள் திருகோணமலை அதிக முக்கியத்துவம் பெற்ற நகரமாக கருதப்படுகின்றது. வரலாற்று முக்கியத்துவம் மட்டுமன்றி உலகப் புகழ் பெற்ற இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டுள்ளமையால் பொருளாதார முக்கியத்துவம் உடையதாகவும் விளங்குகின்றது. கிழக்கிலங்கையின் தலைநகராகக் கருதப்படும் திருகோணமலையில் 1817ம் ஆண்டு "சாமுவேல் பிரோட் பென்ற்"எனும் திருச்சபைக் குருவானவரால் இறைப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மெதடிஸ்த திருச்சபையின் பல்வேறு பணிகளில் மெதடிஸ்த ஆலயங்களை ஸ்தாபித்தமையும் மெதடிஸ்த திருச்சபை பாடசாலைகளை ஆரம்பித்தமையும் தலையாய பணிகளாகக் கருதப்படுகின்றன.

திருகோணமலையில் தற்போது பெரிய கடை என அழைக்கப்படும் பகுதியில் அமைந்துள்ள 179 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மெதடிஸ்த ஆலயத்திற்கான அடிக்கல் 1818 இல் நாட்டப்பட்டு, 1821ம் ஆண்டு கட்டிடப் பணிகள் பூர்த்தியடைந்து முழுமைப்பெற்றன.

1821 ஆம் ஆண்டு, திருகோணமலைக்குரிய திருப்பணியாளராக "றொபர்ட் கார்வர்" அவர்கள் நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து 1822 இல் "ஜோசப் பொட்" அவர்கள் நியமிக்கப்பட்டார். இவர்களது காலத்தில், அதாவது 1820 இற்கும் 1823 இற்கும் இடைப்பட்ட காலத்தில் திருகோணமலையில் மூன்று பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றுள் ஓர் ஆங்கிலப் பாடசாலை, திருச்சபை இயங்கிய வீட்டிலேயே நடாத்தப்பட்டது. ஏனைய இரண்டு பாடசாலைகளில் ஒன்று சின்னக்கடைப் பகுதியிலும் மற்றையது புதுக்கடைப் பகுதியிலும் அமைந்திருந்தன. சின்னக்கடைப் பகுதியில் அமையப்பெற்ற பாடசாலையே இன்றைய தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயமாகும். ஆரம்ப காலத்தில் மெதடிஸ்த திருச்சபையின் மூன்று பாடசாலைகளும் "பெற்றா பாடசாலை", "குறொவ்ற் வீதிப் பாடசாலை", "பெருந்தெருப் பாடசாலை" எனும் பெயர்களால் அழைக்கப்பட்டு வந்துள்ளன. இதனடிப்படையில் சின்னக் கடைப் பகுதியில் பெருந்தெருவில் பாடசாலையின் அமைவிடம் தெளிவாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

ஆரம்பத்தில் "பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலை" எனும் பெயரால் அழைக்கப்பட்ட இந்தப் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்ட சரியான திகதி அறியப்படவில்லை. எனினும் 1820 இற்கும் 1823 இற்கும் இடையில் ஸ்தாபிக்கப் பட்டமைக்குரிய சான்றுகள் உள்ளமையால் பிந்திய காலப்பகுதியான 1823ஆம் ஆண்டே இன்றைய தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயத்தின் ஆரம்ப ஆண்டாகக் கொள்ளப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் ஐரோப்பிய ஆட்சியாளரின் அனுசரனையுடன் இயங்கி வந்த திருச்சபைப் பாடசாலைகள் கிறிஸ்தவ சமயத்திற்கும் ஆங்கில மொழிக்குமே முக்கியத்துவமளித்து வந்தன. பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையும் ஆரம்ப காலத்தில் இந்த அடிச் சுவட்டையே பின்பற்றியது. பாடசாலையின் ஆரம்பகால அதிபர்கள் பற்றிய விபரங்கள் பூரணமாக கிடைக்கப்பெறவில்லை. ஆயினும் 1885ஆம் ஆண்டில் மயில்வாகனம் முருகுப் பிள்ளை எனும் உபாத்தியாயர் பாடசாலை யின் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்ட தாக அறிய முடிகின்றது.

1885இல் யாழ்ப்பாணம் வடமராட்சியில் பிறந்த முருகுப்பிள்ளை அவர்கள், தமது அறுபத் தைந்து வயதளவில் திருகோணமலைக்கு வந்து மெதடிஸ்த திருச்சபையால் நடத்தப் பட்ட கோட்டப் பாடசாலையின் ஆசிரியராக நியமனம் பெற்றார். 1885ம் ஆண்டில் பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலை யின் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். ஓரளவு வளர்ச்சி கண்டு நிலையாகிவிட்ட பாடசாலை இக்காலப் பகுதியில் மேலும் விருத்தியடையத் தொடங்கியது.

சின்னையா உபாத்தியாயர் இரண்டாவது உபாத்தியாயராகவும் வெற்றிவேலு, கோபால ப்பிள்ளை, கதிர்காமர் என்பவர்கள் ஆசிரியர்க ளாகவும் நியமிக்கப்பட்டனர். திருகோணமலை யின் பெரியார்கள் பலர் பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கல்வி கற்று உயர்கல்வியும் பெற்று சமூகத்திலும் சிறப்புப் பெற்றவர்களாக விளங்கியுள்ளனர். இக் காலகட்டத்தில் கல்வி கற்றவர்களில் கிருஸ்ணதாசன், டாக்டர் சித்திரவேல், துரையப்பா, அரசரத்தினம், கிருஸ்ணபிள்ளை போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ம.முருகுப்பிள்ளைக்குப் பின்னர் பண்டித சபாபதி தலைமையாசிரியராக நியமிக்கப் பட்டார். இவரைத் தொடர்ந்து இரத்தின சிங்கம், செபரத்தினம் ஆகியோரும் இன்னும் பலரும் கடமையாற்றியுள்ளார்கள். 1931 தொடக்கம் 1951 வரையான இரு தாசாப்த காலப்பகுதியில் “ஆசிரிய மணி” திரு.ம.க. சிதம்பரப்பிள்ளை அவர்கள் அதிபராகக் கடமை யாற்றிள்ளார். 1952ஆம் ஆண்டளவில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர வகுப்பு பாடசாலையில் ஆம்பிக்கப்பட்டது. 1959 தொடக்கம் 1962 வரையான காலப்பகுதியில் “ஆசிரிய மணி” திரு.ம.க. சிதம்பரப்பிள்ளை அவர்கள் மீண்டும் அதிபராகக் கடமையாற்றி யுள்ளார்.

இக்காலப் பகுதியில் சின்னக்கடை, இலிங்க நகர், சாம்பல் தீவு பகுதிகளில் வாழ்ந்து வந்த தமிழ் மெதடிஸ்த மக்களுக்கு தமிழ் மொழி மூலமான வழிபாட்டுக்கான ஒரு இடத்தின் தேவை உணரப்பட்டது. அதனை நிறைவு செய்யும் முகமாக பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் தமிழ் மொழிமூலமான பிரார்த்தனைகளும் வழிபாடுகளும் வண. போல். ஏகாம்பிரம் போதகர் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த இறைப் பணிக்கான உதவிகளும் ஒத்துழைப்பும் அன்றைய அதிபராகவிருந்த “ஆசிரிய மணி” அவர்களால் வழங்கப்பட்டன.

காலப்போக்கில் பாடசாலையில் மேற் கொள்ளப்பட்ட தமிழ் வழிபாடுகள் வளர்ச்சி பெற்று பெருந்தெருப் பகுதிக்கான மெதடிஸ்த ஆலயம் ஒன்றின் அவசியம் வலியுறுத்தப் பட்டது. 1962 ஆம் ஆண்டளவில் அரசாங்கம் சகல பாடசாலைகளையும் பொறுப்பேற்றுக் கொண்ட சமயம் பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையின் நிர்வாகம், தெடிஸ்த திருச்சபையிலிருந்து இலங்கை அரசின் கைகளுக்கு மாறியது. எனினும் மெதடிஸ்த ஆலயத்தின் தேவையை உணர்ந்த அன்றைய அதிபர் “ஆசிரிய மணி” திரு.ம.க. சிதம்பரப் பிள்ளை அவர்கள் பாடசாலை வளவில் இருந்த வீட்டினை வழிப்பாட்டுத் தலமாக மாற்றியமைத்து பெருந்தெருப் பிரதேசத்தில் மெதடிஸ்த ஆலயம் ஒன்றிற்கு வழி சமைத்தார். வண. எஸ். டீஜ. ஜீலியன் போதகர் அவர்களின் காலத்தில் அத்தி பாரமிடப்பட்டு 1972ஆம் ஆண்டளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயம் பூர்த்தியாக்கப்பட்டது. தற்போது இந்த ஆலயம் தி/விக்நேஸ்வர மகா வித்தியாலய எல்லைக்கு வெளியே இல.80, இராஜவரோதயம் வீதிப் பகுதியில் குரு மனையோடு கூடியதாக அமைந்துள்ளது. இந்த ஆலயத்தைச் சார்ந்ததாகப் பெருந் தெருவுக்கென தனியான மெதடிஸ்த சபையும் உருவாகியுள்ளது.

படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்த பாடசாலை காலப்போக்கில் வேறு பல வளங்களையும் பெற்றுத் தன்னை உயர்த்திக் கொண்டுள்ளது. 24.07.1969இல் இப் பாடசாலைக்கென நூல் நிலையமொன்று திருகோணமலை அரிமா கழகத்தினரால் கட்டப்பட்டு பாடசாலைக்கென வழங்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. நூல் நிலையம் இன்று மாணவர்களுக்குரிய பாடநூல்கள், பொது அறிவு நூல்கள், உயர்கல்வி கற்போருக்குரிய நூல்கள் என்பவற்றைக் கொண்டதாக அமைந்து சிறந்ததொரு சேவையினை வழங்கிக் கொண்டிருக்கிறது.

கிறிஸ்வதப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலை தொடர்ந்து வந்த காலங்களில் பெருமளவில் இந்து சமய மாணவர்களைக் கொண்டதாக மாற்றம் பெற்றது. மாணவர்களில் பெரும் பான்மையானோர் இந்து சயமத்தைச் சார்ந்தவர்களாகக் காணப்பட்டதன் விளைவாக பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலை அரசின் அங்கீகாரத்துடன் தி/பெருந்தெரு விக்நேஸ்வர வித்தியாலயம் எனும் பெயருடன் ஓர் இந்துப் பாடசாலையாக மாற்றப் பட்டது. அனைத்துச் சமயத்தைச் சேர்ந்த மாணவர்களும் எவ்வித வேறுபாடுமின்றி சிறந்த கல்வியைப் பெற்றுக் கொள்ளும் வகையில் பாடசாலையின் பணிகள் தொடர்ந்தன. பாடசாலையின் மாணவர் தொகை அதன் சீரான வளர்ச்சி என்பவற்றைக் கருத்திற் கொண்டு 08.05.1979 தொடக்கம் மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டு தி/ பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம் எனும் தற்போதைய பெயரினைப்பெற்றது.

பாடசாலையின் புதிய இலச்சினையாக கோபுரத்தை உள்ளமைவாகக் கொண்ட யானையின் தலையையும் ஏடுகளையும் தும்பிக்கையில் தீச்சுடரையும் கொண்ட சின்னம் அறிமுகப்படுத்தப்பட்டது. இச் சின்னத்தில் யானையின் தலையினுள் அமைந்துள்ள கோயிற் கோபுரம் திருகோணேஸ்வரத்தைக் குறிக்கின்றது. யானைத் தலை விநாயகரைப் பெயரில் கொண்ட விக்நேஸ்வர மகாவித்தியால யத்தைக் குறித்து நிற்கிறது. (இரண்டும் இணைந்து திருகோணமலை விக்நேஸ்வர மகா வித்தியாலயமாக அமைகிறது.) யானையின் தும்பிக்கையின் நுனியிலுள்ள தீபம் கற்பதன் மூலமாக ஏற்படும் ஞானத்தை யும் குறித்து நிற்கின்றது. பாடசாலையின் மகுட வாசகமாக "அன்பும் அறனும் பண்பும் பெறுக" எனும் வாக்கியம் அமைந்துள்ளது. பாடசாலையில் கற்ற கல்வி மூலம் பெற்ற அறிவைக் கொண்டு அன்பும் அறனும் பண்பும் பெறுக என்னும் கருத்து இதன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் வரையில் வகுப்புக்களைக் கொண்டு சிறந்த தொரு சேவையினை ஆற்றி வந்த பாடசாலை 21.07.81 தொடக்கம் உயர்தர வகுப்புக்களை நடத்தக் கூடிய அனுமதியைப் பெற்று 1சீ தரப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. மாணவர்கள் தொகை அதிகரிப்பிற்கேற்ப வகுப்பறை வசதிகளை வழங்கும் வகையில் புதிய மூன்று மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப் பட்டு 1999ஆம் ஆண்டில் திறந்து வைக்கப் பட்டு இன்று அழகுடன் கம்பீரமாகப் பாடசாலை காட்சி தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதித் தலைவர்கள்



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) :திருமதி.தி.ஜோன்பற்றிக், திரு.நா.வசீகரன், திருமதி.A.V.A.கிருபாகரன்(அதிபர்), திரு.ம.சச்சிதானந்தம், திரு.அ.அதிஸ்டலிங்கம்

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : திருமதி.இ.காளிராசா, திருமதி.மா.சிவகரன்

## ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள்



இருப்பவர்கள் (இடமிருந்துவலம்) : திரு.ரா.செந்தூரன், திரு.நா.வசீகரன், திருமதி.A.V.A.கிருபாகரன்(அதிபர்), திரு.ம.சச்சிதானந்தம், திரு.அ.அதிஸ்டலிங்கம்

நிற்பவர்கள் (இடமிருந்துவலம்) : திருமதி.ம.சிவகரன், திருமதி.சி.விக்னேஸ்வரன், திருமதி.தே.சுனில், திருமதி.ச.ஜெயகுமார், திருமதி.க.விமலேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க் குழு



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்): திரு.ல. நாகலிங்கம், திரு.தில்லைநாதன் பவித்ரன், திருமதி.A.V.Aகிருபாகரன்(அதிபர்), திரு.அ.அதிஸ்டலிங்கம், திரு.ச.ஜெயகுமார்

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : செல்வி.த.பிரவாகினி, திருமதி. லோ.திலீபன், திருமதி.ரா.தவராஜா

## கல்வி சாரா ஊழியர்கள்



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : திரு.துரைசிங்கம் அன்ரன் லியனகே, திரு.நா.வசீகரன், திருமதி.A.V.A.கிருபாகரன்(அதிபர்), திரு.அ.அதிஸ்டலிங்கம், திரு.பா.பாலச்சந்திரன்,

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : செல்வி.யோ.கிரிஜா, திருமதி.த.ஜெயசங்கரன், திருமதி.கி.பெர்னான்டோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயமும் வாழ்வும்

சமயம் வேறு வாழ்க்கை வேறு அன்று. வாழ்க்கையோடு இணைந்தது தான் சமயம். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் பூமி தோன்றிய அன்றே சமயமும் தோன்றிவிட்டது. இதற்குப் பல சான்றுகளும் ஆதாரங்களும் காணப்படுகின்றன. இவ்வுலகனைத்திலும் எண்ணிலடங்காத படைப்புக்கள் இறைவனால் படைக்கப்பட்டுள்ளன என்று நம் முன்னோர் கூறுகின்றனர். இவற்றில் ஒன்று தான் மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரைக்கும் உள்ள வாழ்வினை நம்பிக்கையுடையதும் உண்மையானதுமான வழியில் முன்னெடுத்துச் செல்ல நேசக்கரம் நீட்டுவது சமயமாகும்.

“சமயமும் வாழ்வும்” இணைந்த போது தான் வாழ்க்கையில் ஒளி பிறக்கும். மனிதனின் மனம் தூய்மை பெறும். நம்பிக்கை பிறக்கும், உண்மைகள் புரியும் வாழ்வு என்பது உண்மையாகக்கண்டு தெளிந்தறிந்து அதன் வழி ஒழுகுதலேயாகும்.

சமயம் என்பது மனிதனையும் இவ்வுலகினையும் படைத்த இறைவனை அடையும் பிரதான ஒரு வழியாகும். உண்மையைத் துலங்கச் செய்யும் பாதைகள் இரண்டும் ஒன்றிணையும் போதுதான் உலகம் ஓங்கி நிற்கிறது.

உலகில் எத்தனையோ சமயங்கள் உள்ளன. அவ்வனைத்திலும் உள்ள நூல்கள், சான்றுகள், ஆதாரங்கள் பல காணப்பட்ட போதிலும் அவை ஒரேயொரு பொருளைத்தான் எடுத்தியம்புகின்றன. உண்மை யாதெனில் நம்மைப் படைத்த இறைவனை அடையும் வழியினையே பல கோணங்களிலும் ஆராய்ந்துரைக்கின்றன. “பல கிளையாறுகள் கடலினிடையே சங்கமிப்பது உண்மையே”. இவ்வண்ணமே தான் சமயங்களும் இறுதியாக அடைவது படைப்பின் பரம்பொருளின் திருவடியையே.

சமயமானது மனிதனின் வாழ்விற்குத் தேவையான நம்பிக்கை, நீதி, நியாயம், நாணயம் என்பவற்றைப் பற்றி எடுத்துக்கூறி அறிவுறுத்துகின்றது. இதனால் மனிதனின் இதயமானது நேர்மையான, தூய்மையான வாழ்வினை அரவணைத்துக் கொள்கின்றது. பாவங்களையும், பாதகங்களையும் கண்டு அஞ்சுகிறது. பாவங்களும், பாதகங்களும் விளையா மனிதன் இன்பம் காணுகின்றான். ஒருவன் மற்றவனுக்கு தீங்கிழைக்க எண்ணும் போது அவனைத் துன்பம் அணுகுகிறது. இப்படிப் பல துன்பங்களடைந்து இதயத்திலே வடுக்கள் நிறைந்த ஒருவன் இறைவன் சந்நிதிக்குச் சென்று அத்துன்பங்களையெல்லாம் எடுத்துக்கூறி ஆறுதலடைவானாயின் அதற்கு மூலகாரணமும் சமயம் தான்.

இதுபோலவே “தன் வாழ்வில் சோர்வுற்று வெறுப்புற்று இருப்பவனுக்கு நீரோடும் திசையில் இறந்த மீனாய் இல்லாமல் உயிர் மீனாய் எதிர்நீச்சல் போடு.”என்று எடுத்துக்காட்டுவது தான் சமயம். மக்களிடையே ஒற்றுமையின் அவசியப்பாட்டினை எடுத்துக் கூறுவது சமயம். சமயமானது மக்களைப் பிளவுபடுத்தி வைத்திருக்கிறது, மக்களை மூடர்களாக்குகிறது என்பது விதண்டாவாதமே. துன்பம் வருகிறதே என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தாதே. பாதகங்கள் செய்கிறார்களே என்று கலங்காதே. அவரவர்கள் அனுபவிப்பார்கள். வினை விதைத்தவன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான். இது நம் முன்னோர்கள் கூறிய உண்மை. இறைவன் நின்று ஒறுக்கும் என்பதே யதார்த்தம்.

உண்மையிலேயே ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய வாழ்விற்கு உரமூட்டுவது தான் சமயம். நம்பிக்கை எனும் ஐந்தெழுத்துச் சொல்லுக்கு அச்சாணியும் சமயம் தான். சோர்வுற்று சுருண்டு கிடக்கும் ஒருவன் சமயம் மீது நம்பிக்கை கொள்வானாயின் அச்சமயம் நிச்சயம் அவனுக்கு கை கொடுக்கும். "ஒளி உண்டெனில் இருளுமுண்டு" அது போலவே தான் "பிறப்புண்டானால் நிச்சயம் இறப்புமுண்டு" எனும் நிலையாமையை அறிவுறுத்தி எத்தனை ஜென்மங்களுக்கும் ஈடுகொடுக்கும் நிலையானவற்றைச் செய்யத் தூண்டுவதும் சமயம் தான்.

ஒவ்வொரு சமய நூல்களும் இவற்றையே வலியுறுத்துகின்றன. இவை யாவும் அறம், தர்மம், நியாயம் என்பவற்றையும் நல்வாழ்விற்கு உகந்தவற்றையும் எடுத்துக் கூறுகின்றன. அதனால் மனிதனின் வாழ்வு வளம் பெறுகிறது. எனவே ஒவ்வொரு மனித வாழ்விற்கும் இன்றியமையாத இச்சமயமும் வாழ்வும் பிரிக்க முடியாதவை. அது"நகமும் சதையும் போல" என்று கூறினால் மிகையாகாது. எது எப்படி இருந்தாலும் மனிதன் சமயத்தால் நெறிப்படுத்தப்படுகிறான் எனவே மனிதன் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் தெய்வமாக வைக்கப்படுவதற்கு சமயம் இன்றியமையாத ஒன்று" என்று கூறினால் அதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

தொகுப்பாக்கம்
திருமதி.இ.காளிராசா
பகுதித் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைச் சமூகமும் பிரச்சனைகளும் தீர்வுகளும்.

பாடசாலைச் சமூகம், எனும் எண்ணக்கரு பரந்துபட்ட விதமாக நோக்கப்படுன்றது. குறித்த பாடசாலையில் கல்வி பயிலுகின்ற பிள்ளைகளின் பெற்றோர்களே அப்பாடசாலையின் சமூகம் என முன்னர் கருதப்பட்டது. எனினும் தற்போது பாடசாலைச் சமூகம் என்பதற்குப் பதிலாக பாடசாலையின் பயனாளிகள் என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது. இலங்கை பாடசாலையில் காணப்படும் பிரதான பயனாளிக் குழுக்களாக காணப்படுபவர்களாக,

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், சமூதாயத்தலைவர்கள், அலுவலர்கள், அரசியல்வாதிகள், சமயதாபனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் அங்கத்தவர்கள் போன்றோர் விளங்குகின்றனர். பிள்ளைகளின் கற்றல் தேவைகளை பாடசாலைகளினால் மாத்திரம் திருப்திபடுத்த முடியாது என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மாணவர்களின் முன்பள்ளி, பாடசாலைக் காலங்களிலும், மற்றும் அதற்கு அப்பாலும் அவர்களின் அறிகை மற்றும் சமூக விருத்தியை எண்ணற்ற கற்றல் இணைப்புக்கள் செழுமைப்படுத்துகின்றன. பாடசாலையும் பாடசாலை சாராத கற்றல் அனுசரணைகளான குடும்பங்கள், முன் பிள்ளைப் பருவ நிகழ்ச்சித்திட்டங்கள், பாடசாலை நேரம் தவிந்த மற்றைய நேரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள், உயர் கல்வி, வியாபாரம், நூலகங்கள், சுகநல மற்றும் சமூகசேவை நிறுவனங்கள், அரும் பொருட் காட்சியகம் மற்றும் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள் போன்றனவும் இவ் இணைப்பினுள் உள்ளடங்கப்படுகின்றன. இவ்வாறான பல குழுக்களினால் பிள்ளையின் கற்றலுக்கு வழங்கப்படுகின்ற ஒத்துழைப்பின் வலைப்பின்னலான மிகைநிரப்பு கற்றலானது, பாடசாலை-சமுதாய உறவை வலுப்படுத்தி மாணவர்களின் கற்கும் ஆற்றலையும், கற்றல் பேறுகளையும் மேம்படுத்துதலின் மூலம் பிள்ளைகளின் கற்றலில் பாடசாலையிலும், வீட்டிலும், குடும்பத்தினர் காட்டும் ஈடுபாடானது, அவர்களின் பாடசாலைத் தரங்கள், மற்றும் பரீட்சைப் புள்ளிகளை அதிகரிக்கச் செய்வதுடன் பாடசாலைக்கு ஒழுங்காக வருதல், சமூகதிறன்களை வளர்த்தல், பட்டப்படிப்புக்குச் செல்லும் வீதத்தை அதிகரித்தல் அத்துடன் இடை நிலைக் கல்விக்கு அப்பாலும் கல்வியைத் தொடருதல், ஆகியவற்றிற்கு வழியேற்படுத்திக் கொடுத்துள்ளது.

பாடசாலையுடன் குடும்பத்தின் ஈடுபாடு எனும் போது EPSI செயற்பாடுகளின் மூலமும் தன்னார்வத்துடன் அவர்களாகவே இணைந்து மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளே கருத்திற் கொள்ளப் படுகின்றது. அந்த வகையில் பாடசாலையில் இடம்பெறும் கூட்டங்களுக்குச் சமூகமளித்தல், பாடசாலையில் இடம்பெறும் விளையாட்டுப்போட்டி, வருடாந்த பரிசளிப்பு விழா, இலக்கிய மற்றும் நாடகப் போட்டி, பாடசாலைக் கண்காட்சி, மதரீயான வைபவங்கள், சுற்றுலா, களப்பயணம் போன்ற நிகழ்விற்கு பாடசாலைப் பயனாளிகள் கலந்து கொள்ளுதல் மற்றும் அவற்றிற்குத் தேவையான பௌதீக, நிதி , மனித வள உதவிகளை வழங்குதல், வெளிக்கள பிரயாணங்களின் போது பங்கெடுத்தல், பிள்ளைகளின் கல்விசார் விடயங்கள் தொடர்பாக ஆசிரியருடன் தொடர்பில் இருத்தல், போன்றவற்றின் மூலம் சமூகமானது பாடசாலையுடன் தொடர்புறுகின்றது. பாடசாலைச் சமூகம் என்ற எண்ணக்கரு பாடசாலையோடு தொடர்பிலுள்ளள அனைத்து மனித வளப் பங்காளர்களையும் குறித்து நிற்கிறது.

பாடசாலைகள் தரமான கல்வியை ஒழுக்க விழுமியங்களை வழங்குகின்ற நோக்கோடு சமூகத்தோடு நேரான உறவுகளைப் பேண வேண்டிய கடப்பாட்டில் இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் பௌதீகவள அபிவிருத்தி, வினைத்திறனான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் விளைதிறனான பரீட்சை பெறுபேறுகள் மற்றும் நற்பிரஜை உருவாக்கம் என்பன பாடசாலை சமூகத்துடனான நேரான தொடர்புகள் மூலம் கிடைக்கக் கூடியதுதாக காணப்படும்.

ஒரு பாடசாலை சிறப்பாக இயங்க வேண்டுமானால் அப்பாடசாலை அமைந்துள்ள சமூகத்தினுடைய பங்கானது மிகவும் இன்றியமையாதது. அது நிதி, பாதுகாப்பு, மனித வளம் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் வேண்டப்படலாம். வெறுமனே பாடசாலை நிர்வாகத்தினால் மட்டும் பாடசாலைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. மாறாக இதற்கு சமூகத்தினுடைய தேவை பாரிய அளவில் வேண்டப்படுகின்றது. இதற்கு பாடசாலை சமூகத் தொடர்புகள் சிறப்பாக அமைதல் முக்கியமானதாகும். பாடசாலையில் துரித அபிவிருத்தி ஏற்பட வேண்டுமானால் அங்கு சமூகத்தினுடைய பங்கு அவசியம் என்றே கூறலாம்.

பாடசாலை ஒரு பரந்த பணியைச் செய்யும் நிறுவனமாகும். அங்கே கலைத் திட்டம் , இணைக் கலைத் திட்டம், மறைக் கலைத் திட்டம் எனப் பல்வேறு நடவடிக்கைகளும் நடந்து வருவதைக் காணலாம். கலைத் திட்டம் தவிர ஏனையவை மாணவனின் சமூகமயமாதல் பற்றிய செயற்பாடுகளை மேம்படுத்தும் திட்டங்களாகும்.

மாணவனுக்கு வாழ்வதற்கான வழியை இணை, மறை கலைத் திட்டமே சொல்லிக் கொடுக்கின்றன. எல்லா செயற்பாடுகளுக்கும் ஆசிரியர்களே பொறுப்பாக உள்ளனர். ஒவ்வொரு மாணவனும் அவன் வாழும் சமூகத்தை வழி நடாத்தும் அறிவுப் பலமும், நடத்தைப் பலமும் கொண்ட பூரண ஆளுமைகளாகப் பாடசாலையை விட்டு வெளியேறியே வெளியே வர வேண்டும் என்ற முனைப்புடன் பயிற்றுவிக்கப்படுகிறான்.
எனவேதான் தனியாளின் ஆளுமையை வளர்த்தெடுத்து அதன்மூலம் சமூக முன்னேற்றத்துக்கு இட்டுச்சென்று சமூகமானது அழியாமல் பாதுகாக்கும் கருவியாக கல்வி உள்ளது. பிள்ளைகளை வளப்படுத்தி அவர்களை நற் பிரஜைகளாக சமூகத்தில் புகுத்த வேண்டிய பொறுப்பு பாடசாலைக்கு உண்டு.

ஒரு பாடசாலை சிறப்பாக இயங்க வேண்டுமானால் அப்பாடசாலை அமைந்துள்ள சமூகத்தினுடைய பங்கானது மிகவும் இன்றியமையாதது. இதன் மூலம்,

1. சகல மாணவர்களுக்கும் தரமான கல்வியை வழங்க முடிதல்.
2. வகுப்பறைக் கற்பித்தலை மேற்கொள்ளும் போது மாணவர்களின் பெற்றோர்களை வகுப்பறைக்குள் அழைத்து அவர்களையும் அந்த செயற்பாடுகளில் கண்காணிக்கவும் ஈடுபடவும் செய்வதன் மூலம் பெற்றோர்களுக்கு அறிவு வழங்கப்படுவதோடு மாணவர்களுக்கான வழிகாட்டுதல்களை வீடுகளிலேயே பெற்றோர்களால் மேற்கொள்ளவும் முடியும்.
3. அரசியல்வாதிகள் நண்பர்கள் நலன் விரும்பிகள் மற்றும் வெளிநாட்டில் வசிப்பவர்கள் மூலமாக பாடசாலையின் பௌதீக வள மற்றும் கற்றல் கற்பித்தல் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு உதவிகளைப் பெறுவதற்காக சமூகக் குழுக்களிடையே உள்ள நண்பர்களை நாடி உதவிகளை பெற்றெடுத்தல்.
4. பாட ரீதியாக ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படுகின்ற பொழுது சமூகத்திலுள்ள பாடரீதியான பாண்டித்தியம் உள்ளவர்களை அழைத்து இலவச வகுப்புகளை ஏற்படுத்தி அதன் மூலமான ஆரோக்கியமான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஒன்றுபட்ட கல்வி பரப்பினுள் சகல மாணவர்களுக்குமான மாறுபட்டதான வேறுபட்ட தேவைகளை சரியாக அடையாளம் கண்டு அதன் பிரகாரம் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை விருத்தி செய்ய முடியும்.
6. பாடசாலை உள்ளக செயற்பாடுகளில் நெகிழ்வுத் தன்மையையும் சனநாயக பண்புகளையும் உருவாக்குதல்.
7. மாணவர்கள் ஆசிரியர்கள் அதிபர்கள் மற்றும் சமூகத்திடையே பாடசாலை தன்னுடையது என்ற உணர்வை விருத்தி செய்ய முடிதல்.
8. மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் எதிர்பார்ப்புகளுக்கு அதிகூடிய கரிசனையை வழங்குதல்.
9. பாடசாலையின் சகல கருமங்களுக்கும் நேரடியாக சமூகத்தின் பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.
10. பிரதேச மற்றும் சமூகத்தினுடைய தேவைகளுக்காக பாடசாலையின் பங்களிப்பை வழங்குவதும் முடியும்.
11. பாடசாலைகளில் தீர்மானம் எடுக்கின்ற செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தவும், அதிகபட்ச பொறுப்புக்கூறலை ஏற்படுத்தவும் முடியும்
12. வளப் பாவனையை அதிஉச்ச மட்டத்தில் பேணுதல் மற்றும் வளங்களை உருவாக்க முடியும்.
13. பாடசாலையின் பங்குதாரர்களின் மென் திறன்களை விருத்தி செய்ய முடிதல்.
14. பாடசாலை மட்டத்திலான தொழில்சார் ஆசிரியர் வாண்மையை மேலும் அதிகரிக்க முடிதல்.
15. சமூக இணக்கப்பாட்டினை உறுதி செய்ய முடிதல்.
16. சமூகத்தின் அடித்தட்டில் இருக்கும் இடை விலகல் மாணவர்களுக்கு உட்படுத்தல் கல்வியை வழங்குதல்.
17. தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்குதல்.
18. சமூக தொடர்பினை வலுவூட்டி பாடசாலை மாத்திரமன்றி வீட்டிலும் சிறந்த கற்றல் சூழலை உருவாக்க முடிதல்.
19. பெற்றோரின் பங்களிப்புடன் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை செயற்பாடுகளை ஏற்படுத்த முடியும்.
20. மாற்றங்கள் மற்றும் புதுமைகளை மாணவர் மத்தியில் உட்புகுத்தி சமுதாயத்தில் திருப்பத்தை ஏற்படுத்த முடிதல்.
21. மாணவர்களின் வன்திறன், மென்திறன் என்பவற்றை விருத்தி செய்வதன் வாயிலாக சமூக வாழ்விற்கு அவர்களை இட்டுச் செல்ல முடிதல்.
22. புத்தாக்கங்களை சிறப்பாக சமூக உதவியோடு உருவாக்க முடிதல்.
23. சமூகப் பணிகளை கௌரவித்து ஊக்கப்படுத்த முடிதல்.
24. சமூகக் குழுக்களில் ஒளிந்து இருக்கின்ற திறமைகளை அடையாளம் கண்டு அவற்றை வெளிக்கொணர்தல்.
25. கற்றல் கற்பித்தல் மற்றும் தொழில் வாய்ப்புக்களுக்கு உள்ள தடைகளை நீக்கி வழிகாட்ட முடிதல்.
26. முக்கியத்துவத்தை உணர்த்தி நேரம் தவறாமையை கடைப்பிடிக்க நடைமுறைப்படுத்துதல். போன்ற செயற்பாடுகளை சமூகத்துடன் நேரான தொடர்புகளை பேணுவதன் மூலம் சமகால முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான கல்வியே தரமான சமுதாயத்திற்கு அடித்தளம் என்பதை இரு பாலாரும் உணர்ந்து செயற்படும் போது இத் தொடர்புகள் சிறப்பாக அமையும். சமூகம் சிறப்புற உருவாக பாடசாலையிலிருந்து உருவாகும் மாணவர் சமூகம் மிகவும் முக்கியமானது. அதே போல் பாடசாலை ஒன்று சிறப்பாக செயற்பட சமூதின் தேவை இன்றியமையாதது. என்றால் அது மிகையில்லை. எனவே பாடசாலை சமூகத் தொடர்பு சிறப்பான கல்வி விருத்திக்கு மிகவும் முக்கியமானதாகும்.

ஒரு பாடசாலையின் இயங்கு நிலையை முன் நடத்திச் செல்வதற்கு சமூகத்துடனான நேரான தொடர்பு அவசியமாகின்றது. இதனடிப்படையில் சமூகத்துடன் நேராக தொடர்பினை பெறுகின்ற பொழுது பாடசாலை முகாமைத்துவ செயற்பாட்டிற்கு சில பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது. சமூகமும் பாடசாலையும் இணைந்து தரமான பாடசாலை ஒன்றை உருவாக்க முடியும். என்ற எண்ணத்தின் அடிப்படையில் செயற்படுகின்ற பொழுது சமூகத்தில் சில குழுக்களும், பாடசாலை வளாகத்தில் ஆசிரியர்களில் சில குழுக்களும், மாணவர்களில் சில குழுக்களும் முரணான செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொழுது பாடசாலை நிர்வாகம் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இவ்வாறு பல்வேறு பயன்களை விளைவிக்கின்ற இவ் தொடர்பு முறையானது ஏற்படுவதில் சில சிக்கல் முறைமை தோன்றுவதும் உண்டு. அதற்கு பல்வேறுபட்ட காரணங்கள் காரணமாக அமையலாம் குறிப்பாக சிலரினுடைய புரிந்துணர்வு தவறாக அமையும் போது தொடர்பின் தன்மை பாதிப்படைகின்றது. பாடசாலை தொடர்பாக சமூகம் கொள்ளும் புரிந்துணர்வுகள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினுடைய தன்மை, பாடசாலை மீது சமூகத்தினோர் கொண்டுள்ள எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றமடைதல், பாடசாலை நிர்வாகம் சமூக தொடர்புகளின் முக்கியத்துவம் பற்றி கருத்தில் கொள்ளாமை போன்ற விடயங்களை கூறலாம். அதாவது

- ★ பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்பாடுகளின் போது அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், செயலாளர் என்பவர்களின் தெரிவுகளின் போதும் பக்கச் சார்புகள் இடம்பெற்று பாடசாலை நிர்வாகச் செயற்பாடுகளில் பிரச்சனைகளை ஏற்படுத்தி விடுகின்றனர்.
- ★ தரம் 1 மாணவர்களை சேர்த்துக் கொள்கின்ற போது கொடுக்கப்படுகின்ற விதிமுறைகளை மீறி சில சமூகத்தினர் சில ஆசிரியர்கள் தங்களுக்கான வசதி வாய்ப்புகளைப் பெற வேண்டும் என்ற அடிப்படையில் பாடசாலை நிர்வாகத்துடன் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர்.
- ★ பாடசாலைக்கான நிதி சேகரிப்பில் சில குற்றச்சாட்டுகளை பாடசாலை அபிவிருத்திக் குழு மீது ஏற்படுத்தி அதன் மூலம் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர்.
- ★ ஒரு பிள்ளை ஒழுக்க விழுமியமுள்ள பண்பாட்டு கலாச்சாரத்துடன் வீட்டுச் சூழலில் வளர்க்கப்படுமாயின் பாடசாலையில் ஏற்படும் பண்பாட்டு மாற்றத்தினாலும் சம வயதுக் குழக்களின் அழுத்தங்களினாலும் வழித்தவறிச் செல்வதற்கான சாத்தியக் கூறுகள் குறைவு. ஆனால் சில சந்தர்பங்களில் சம வயதுக் குழுக்களின் அழுத்தங்களுக்கு உள்ளாகி சமூக பிரச்சனைகளை உருவாக்குகின்றனர். உதாரணம் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாவனை.
- ★ பாடசாலையால் வழங்கப்படும் பொருட்களை மாணவர்களுக்கு வழங்க விடாமல் தடுக்கின்ற செயற்பாடுகளிலும் சமூகக் குழுக்கள் தலையிட்டு பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர்.
- ★ கற்றல் இறுக்கம் காரணமாக தற்கொலை முயற்சி, ஒழுக்கமற்ற செயல்களில் ஈடுபடல். உதாரணம் - பாலியல் அல்லது போதைப்பொருள் பாவனை
- ★ இன வர்க்க முரண்பாடுகள் காரணமாக துன்புறுத்தல்(தமிழ்,முஸ்லீம்,சிங்களம்).
- ★ ஆண் பெண் சமூக முறைமைகள் தொடர்பான பிரச்சனை. கலாச்சார சீர்கேடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ விளம்பரங்களினூடாக துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாதல். முறையற்ற ஆடை அலங்காரங்களில் ஈடுபடல்.

★ இணைப்பாடவிதான செயற்பாடுகளின் போது பாடசாலை விழாக்களுக்கு விருந்தினர்களை அழைக்கின்ற செயற்பாடுகளில் சமூகக் குழுக்கள் தங்களுக்கு ஏற்றவர்களை, அரசியல் பிரமுகர்களை அழைப்பதற்கான வற்புறுத்தல்களை வழங்கி பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர்.

★ பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள குழுக்களால் சிறுவர் துஷ்பிரயோக செயற்பாடுகளுக்கும் சில வேளைகளில் முகம் கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

★ பாடசாலைக்குள் காணக்கூடிய நெறிப்பிறழ்தல், பின்னடைதல், கேலிசெய்தல், பேராசைக்கொள்ளல், தனிமைப்படுத்தல், வசைபாடுதல் போன்ற பிரச்சினைகள்

★ ஆசிரியர்களின் பாடசாலைக்கு வருவதிலும் செல்வதிலும் நேரக்கட்டுப்பாட்டை மீறுகின்ற தன்மையும் பிரச்சினையை ஏற்படுத்துகிறது.

★ பரீட்சை பெறுபேறுகள் குறைவடைகின்ற பொழுது அதற்கான மூல காரணத்தை கண்டறியாது பாடசாலை நிர்வாகத்தின் மீது குற்றம் சுமத்தி பாடசாலையினுடைய இயங்கு நிலையில் பிரச்சினைகளை உண்டாக்குவதிலும் சமூகக் குழுக்கள் ஈடுபடுகின்றன.

★ பாடசாலையின் வளாகத்தில் தங்கள் சார்ந்த நிகழ்வுகளை நடத்துவதற்கு எத்தனித்தல் சமூக குழுக்களால் ஏற்படுகின்ற பிரச்சனையாகும்.

★ இது எங்கள் பாடசாலை என்ற நிலையினை மறந்து பாடசாலையின் வளங்களை களவாடுதல் அல்லது சேதமாக்குதல் போன்ற நிகழ்வுகளால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

★ பாடசாலையின் நிர்வாகச் செயற்பாடுகளின் போது முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டு பாடசாலை இயல்பு நிலையை தடுத்து நிறுத்துகின்ற பிரச்சினையை ஏற்படுத்துகின்றனர் இதனை ஆசிரியர்களும் சமூகத்தினரும் தனித்துவமாகவும் கூட்டுச் சேர்ந்தும் மேற்கொள்கின்றனர்.

பாடசாலை மற்றும் சமூகத் தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்கில் காலத்திற்கு காலம் பல்வேறு செயற்திட்டங்கள் அரசு மேற்கொள்ளப்பட்டமையினை காணமுடிகின்றது. இதன் மூலமும் சமூகக் குழுக்களால் எழும் பிரச்சனைகளை தீர்க்க முடிகிறது.

1960 ஆண்டில் கொண்டுவரப்பட்ட வேலை அனுபவம் எனும் திட்டம்.
1972 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட தொழில் முன்னிலை பாடம்.
1984 இல் பாடசாலை மட்டத்தில் அபிவிருத்தி திட்டங்களை உருவாக்க.
1979 பெற்றோர் சாசனம்.
1976 ஆம் ஆண்டு நூறு பிள்ளைகளையும் ஒரு அல்லது இரு ஆசிரியர்களை கொண்ட சிறிய பாடசாலை அபிவிருத்தி திட்டம் போன்ற செயற்பாடுகளை கூறலாம் எனவே பாடசாலையுடன் பின்வரும் சமூகக் குழுக்கள் சட்டங்கள் அடிப்படையில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

யுனெஸ்கோ நிறுவனத்தால் 1970 இல் நியமிக்கப்பட்ட சர்வதேச ஆணைக் குழுவின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட வாழ்க்கைக்கான கல்வி எனும் அறிக்கையில் பாடசாலைகளில் இடம்பெறும் முன்னேற்றமானது பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான வகிபங்கினை கொண்ட செயல்முறை தொடர்புகள் உடனேயே நிகழ்வதாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.எனவேதான் மேற்கூறப்பட்ட சட்டதிட்டங்கள் பின்பற்றப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம், பாடசாலை, மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் நேரான தொடர்பு கொள்வதன் மூலம் ஏற்படுகின்ற பிரச்சனைகளை பாடசாலை நிர்வாகம் என்ற ரீதியில் தீர்ப்பதற்கான சில முன்மொழிவுகளை மேற்கொள்கின்ற போது ஒரு பாடசாலை என்பது மாணவர் தொடர்பான கற்றல் செயற்பாடுகள் மூலம் சிறந்த நற்பிரசைகள் உருவாக்குகின்ற இடமாக காணப்படும். இங்கு பிரச்சினைகள் பயனாளிகளான மாணவர்களை சென்றடையாத வண்ணம் அதற்கான உபாயங்களை கையாண்டு அந்த வழிகளின் மூலம் ஒரு நற்பிரஷையை உருவாக்கும் தீர்வாக அமையவேண்டும்.

★ பாடசாலை உள்ளே இடம்பெறும் மாணவர்களினால் ஏற்படுகின்ற பிரச்சனைகளை தீர்ப்பதற்கு பின்வரும் சில உபாயங்களைக் கையாள முடிகிறது.
★ பாடசாலைக்குள் பிரச்சனைகளைத் தூண்டுகின்ற மாணவர்களை இனங்கண்டு மாணவர்தலைவர்களாகவும், வகுப்புத்தலைவர்களாகவும் பொறுப்புக்களை வழங்கி பிரச்சனைகளில் இருந்து வெளிக் கொண்டுவருதல் வேண்டும்.
★ ஆசிரியர் சமூக இயல்பின் குறியீட்டு வடிவினராக மட்டுமன்றி சமூகத்தின் எதிர் விசைகளுக்கு எதிர் விசை கொடுப்பவராகவும் இருக்கும் பொழுது - எதிர்ப்பின் எதிர்ப்பு - ஆக்க வளர்ச்சிக்கான முன்னோக்கிய பாய்ச்சலாக உருவெடுக்கின்றது. இந்தப் பண்புகள் மாணாக்கருக்கு சிறப்பாக பாடசாலைகளுடாக ஊடு கடத்தப்பட வேண்டும்.
★ ஆசிரயர் மாணவர்களை நாளைய சமூகத்தில் ஏற்படும் பிரச்சனைகளுக்க முகங்கொடுக்கும் வண்ணம் தயார்படுத்த வேண்டும்.
★ பாடசாலையில் பிள்ளைகள் பெறுகின்ற சமூகமயமாக்கல் ஒரே மாதிரியாக இருப்பதில்லை என்பதுடன் கல்வி நடவடிக்கைகளின் போது சில பிள்ளைகள் சிறந்த பெறுபேறுகளையும் வெற்றிகளையும் அடையும் பொருட்டு அவர்களை ஊக்குவிக்கின்றனர் (தரம் 5 புலமைப்பரிசில்)
★ மாணவர் குழுக்களுக்கு பொறுப்புகளை வழங்கல். போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகள் போன்றவற்றில் பங்குபற்ற செய்தல். செயற்பாடுகளில் ஈடுபடுத்தி ஊக்கப்படுத்தல். அவர்கள் வெற்றி அடைய நிகழ்ச்சிகள் மற்றும் செயன்முறைகளை உருவாக்கி கொடுத்தல்.
★ பாடசாலைக்கு உள்ளே ஆசிரியர்களிடமிருந்து ஏற்படுகின்ற பிரச்சனைகளை கையாளுவதற்கு உபாயங்களை நிர்வாகம் தேடிக்கொள்ள வேண்டும் அந்த வகையில்.

பாடசாலைக்கு உள்ளே ஆசிரியர் சார்பாகவும் மாணவர் சார்பாகவும் இருவர் சேர்ந்தும் முறைசாரா குழுக்களை உருவாக்கி பாடசாலையின் நிர்வாக செயற்பாட்டிற்கு பிரச்சனைகளை ஏற்படுத்துகின்ற வேளையில் அவர்களுடைய செயற்பாட்டில் இருந்து திசைதிருப்பி வினைத்திறனான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

பரஸ்பர உதவி தேவைப்படும் ஆசிரியர்கள் ஒன்று கூடுவதை தவிர்து அவர்களின் தேவைகளை அறிந்து அதிபர் என்ற வகையில் நிவர்த்தி செய்தல் வேண்டும்.

அவர்கள் நெருக்கமாக வாழும் சந்தித்திலும் சந்திப்புக்கள் இடம்பெறும் பொழுதும் அந்த நிகழ்வுகளில் பாடசாலையின் அபிவிருத்தி சம்பந்தமான ஏற்பாடுகளை அவர்கள் மேற்கொள்வதற்கான தூண்டுதலையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தி அவர்களுடைய செயற்பாட்டை கல்வி விருத்திக்கு முன் செல்லுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களையும் மாணவர்களையும் கட்டுப்படுத்தி கண்காணித்து அவர்களுடைய சிந்தனைக் கண்கள் பாடசாலையில் உடைய இயங்கு தன்மையை சீர்குலைக்கா வண்ணம் செயற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆசிரியர்களுக்கு தீவு வழங்குவது தாமத வருகை போன்றவற்றுக்கான தீர்வுகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் சில விட்டுக்கொடுப்பு களையும் மேற்கொள்ள வேண்டும்.

பாடசாலையின் பொறுப்புக்களை பகிர்ந்து அளித்து வெளிப்படைத்தன்மை ஆக்கி ஆசிரியர்களை செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற பொழுது ஆசிரியர்களால் வருகின்ற பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படும்.

பாடசாலை நேரங்களில் வேலை இன்றி இருக்கின்ற ஆசிரியர்களுக்கு கடமை ஒழுங்குகளை ஒழுங்காக மேற்கொண்டு அவர்களை ஈடுபடுகின்ற போது முரணான சந்திப்புகளும் சுதந்திரமான கருத்தாடல் குடும்பங்களை சேர்வதும் இருக்காது. அதன்மூலம் பரஸ்பர இணக்கம் சுதந்திர கருத்தாடல் என்பன காணப்படாமல், பாடசாலை முடிய கற்றல்-கற்பித்தல் நடவடிக்கையில் கவனம் செலுத்துவர்.

பாடசாலையில் கற்பிக்கின்ற ஒவ்வொரு ஆசிரியர்களும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை அறிந்து அவர்களுடைய விருப்பு வெறுப்புகள் நியாயமானதாக காணப்படுமிடத்து அதற்கான உதவிகளை மேற்கொள்ள வேண்டும்.

தூர இடங்களில் இருந்து வருகின்றவர்களுக்கு போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்வதோடு தங்குமிட வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் போது அவர்களின் செயற்பாடுகள் பாடசாலையின் பகுதியில் அதிகமாக இருக்கும்.

மாணவர் ஆசிரியர் ஆகியோர் குழுக்கள் சேர்ந்து பாடசாலை நிர்வாகம் பாடசாலை சமூகத்திற்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடா வண்ணம் கண்காணிப்பு இருத்தல் வேண்டும் ஆசிரியர் மாணவர் குழுக்கள் செயல்பாடுகளை கண்காணித்து அதிலிருந்து அவர்களை விலக்கி வைப்பதற்கான உபாயங்களை கண்டறிந்து ஏற்படுத்த வேண்டும்

★ சமூகத்திலிருந்து ஏற்படுகின்ற பிரச்சனைகளை கையாண்டு அதற்கான தீர்வுகளை மேற்கொள்வதற்கான உபாயங்களை நிர்வாகம் தேடிக்கொள்ள வேண்டும் அந்த வகையில்

சமூகக் குழுக்களிடையே பிரச்சனைகளை தோற்றுவிக்கின்ற நபர்களை இனங்கண்டு அவர்களுக்கான பொறுப்புக்களை வழங்குவதன் மூலம் பாடசாலை சம்பந்தமான புரிதலை ஏற்படுத்த முடியும். அவர்களுடனான பிரச்சினைக்கான தீர்வுகளை கண்டுகொள்ள முடியும். பாடசாலையில் அதீத அக்கறை உடைய நபர்களை இனம் கண்டு அவர்கள் மூலமாக கருத்துக்களை மற்றவர்களுக்கு வழங்கி அரசியல் பிரமுகர்களையும் உட்படுத்தி பிரச்சினைகளில் ஈடுபடுகின்றவர்களை பாடசாலையின் நலம் விரும்பிகளாக மாற்றம் பெறச் செய்தல்.

வகுப்பறையிலே ஆசிரியர் மாணவர் இடைவினைகளும், மாணவர் மாணவர் இடைவினைகளும் ஏற்படும் போதே சமூகப் பிரச்சனைகள் நிகழாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுசார்ந்த பேச்சு, உணர்ச்சி சார்ந்த பேச்சு, உடல் மொழியும் அசைவு, என இடைவினை ஏற்படும் போது அது பல வகை சமூக இசைவுக்கு இட்டுச் செல்கிறது.

கற்றலில் மாற்றத்தினை ஏற்படுத்தி ஏனைய துன்பியல் செயற்பாடுகளில் அவர்களின் கவனத்தை ஈடுபடாது திசைதிருப்பி வினைத்திறனான கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் மூலம் சமூகப் பிரச்சனைகளுக்கு உள்ளாகும் மாணவர்களை அதிலிருந்து வெளிக்கொணர முடியும்.

கற்றல் செயற்பாடுகளில் வீட்டு வேலைகளை வழங்கி சமவயது குழுக்கள் இடையே ஏற்படுகின்ற பழக்கத்தினை தவிர்த்து கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நிலையை நாம் உருவாக்க முடியும்.

போதைப்பொருள் விழிப்புணர்வு மூலம் அதனுடைய எதிர்வினைகளை எடுத்துக் கூறி மாணவர்களை அவற்றில் நாட்டம் கொள்ளாது தொழிலில் ஈடுபடுத்த முடியும். இவ் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை இனங்கண்டு சட்டநடவடிக்கைக்குள் ஈடுபடுத்தல்.

ஆசிரிய மாணவ இடைவினைகளுக்கும் சமூக மயமாக்கலுக்குமிடையே நேர்த் தொடர்புகள் காணப்படுகின்றன. இங்கே கூடுதலான இடைவினைக்குட்படும் மாணவன் கூடுதல் சமூக மயமாக்கற் பண்புடையோராக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஆசிரியர்களின் சமூக மயமாதல் மீதான அறிகை ஊடுகடத்தல் மீதுள்ள நலிவுற்ற நிலையே இதற்கான காரணமாகும்.

மாணவர்கள் சமூகப் பிரச்சினைகளை விட்டு அந்நியமாதலுக்கு எதிராக பாடசாலைகள் நடந்து கொள்ள வேண்டும்.

அதுவே சமூகமயமாதலுக்கான ஊக்கியாக அமையும். ஆரிசியர்கள் மாணவருக்கான ஆற்றுப் படுத்துனராக இருக்க வேண்டும் என்பதும் முக்கியமாகும்.

பாடசாலை முக்கிய நிறுவனமாக அமைகின்றது. அத்தோடு பாடசாலைகள் சமூகத்தில் சுதந்திரமாக செயற்பட முடியுமேயானால் ஒரு சிறந்த சமூகத்தை உருவாக்க உறுதுணையாக அமையும் என்பதில் எந்த ஐயமுமில்லை.சிறந்த ஆசிரியர் - மாணவர் இடைத்தொடர்பின் மூலம் சிறந்த சமூகத்தை உருவாக்கலாம்.

வெளிச் சக்திகளால் ஏற்படுகின்ற பிரச்சனைகளை கையாளுகின்ற விதமாக பாடசாலை நிர்வாகம் பின்வரும் பதிலைத் தேடிக் கொள்ளலாம்.

**M.SATCHITHANANTHAM - BA, Dip in SM, SLPS**
**T/Peruntheru Vikneshwara M.V**
**Trincomalee.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட கல்விப் பிரிவு



## பழைய மாணவர் சங்கம்



## பாடசாலை அபிவிருத்திக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவத் தலைவர்கள்



## உயர்தர மாணவர்கள் ஒன்றியம்



## வர்த்தக மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல் குழு



## கலை இலக்கிய மன்றம்



## Band வாத்தியக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துமா மன்றம்



## இஸ்லாமிய மன்றம்



## கிறிஸ்தவ மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணித, விஞ்ஞான மன்றம்



சமூக விஞ்ஞான மன்றம்



ஆங்கில மன்றம்



கபடி - ஆண்கள் அணி



கபடி - பெண்கள் அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Interact Club



சாரணர் குழு - ஆண்கள்



சாரணர் குழு - பெண்கள்



சென் ஜோன்ஸ் பிரிவு



வீதிப் போக்குவரத்துக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரடைப்பு

நமது உடலில் ஓய்வில்லாமல் கடிகாரம் போல் இயங்கும் உறுப்புகளில் இதயமும் ஒன்று. இவ் இதயத்தைத் தாக்கும் மாரடைப்பானது (Heart Attack) உயிரைப் பறிக்கக்கூடிய அபாயகரமான நோயாகும்.

இதயத் தசைக்கான ஒட்சிசன் நிறைந்த குருதியை முடியுரு நாடிகள் வழங்குகின்றன. முடியுரு நாடிகளில் ஏற்படும் கொழுப்பு படிவுகளினாலும், அக் கொழுப்பு படிவுகளில் ஏற்படும் வெடிப்புகளில் குருதிக் கட்டிகள் படிவதாலும் முடியுரு நாடிக்குழாய்கள் முற்றாக அடைக்கப்படும் போது இதயத் தசைக்கான ஒட்சிசன் நிறைந்த குருதி இல்லாது போகிறது. இதனால் இதயத் தசை இறப்படைகிறது இதுவே மாரடைப்பு ஆகும். இதன் போது இதயத் துடிப்பின் சுருங்கி விரியும் செயற்பாட்டை பாதிப்டைகின்றது. இதயத் தசையின் இறப்படையும் பகுதியின் அளவு கூடும் போது இதயத் தொழிற்பாடு குறைவடைந்து இதயப் பலவீனம் ஏற்படுகிறது. இதனால் இறப்பு ஏற்படலாம்

மாரடைப்புக்கான அறிகுறிகள் என்ன?

01. இடது பக்க அல்லது நடு நெஞ்சில் ஏற்படும் இறுக்கிப் பிடிப்பு போன்ற நெஞ்சு வலி.

02. நெஞ்சு வலியுடன் தாடைகள் இறுகுதல் அல்லது தோள்பட்டையில் ஏற்படும் வலி

03. நெஞ்சு வலியுடன் வியர்த்தல், வாந்தி எடுத்தல், மூச்சுவிடச் சிரமம், தலைச்சுற்றுதல் மயக்கம், நெஞ்சு வலி.

04. நடு நெஞ்சில் ஏற்படும் எரிவு அல்லது மேல் வயிற்றுவலி. இது வயிற்றுக் கோளாற்றுடன் சம்பந்தமாக இருக்கலாம் என நோயாளிகள் புறக்கணிப்பதுண்டு.

மேற்கூறிய அறிகுறிகளின்றியும் மாரடைப்பு ஏற்படலாம். இது (Silent Myocardial Infarction) பொதுவாக நீரழிவு நோயாளர்களில் ஏற்படும்.அதைவிட சில நோயாளர்கள் நெஞ்சுப்பகுதியில் ஏற்படும் தசை நோவை தவறாக மாரடைப்பு என்று எண்ணி வைத்தியர் உதவியை நாடுவதும் உண்டு

மாரடைப்பின் போது உங்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் என்ன?

01. இரத்தம் உறைவதை தவிர்க்கக் கூடிய மருந்துகள் வழங்குதல்
உ-ம்: அஸ்பிரின் (Aspirin), குளோபிடோகிறல்(Clopidogrel)

02. நெஞ்சு வலியைக் குறைக்கும் மருந்துகள் வழங்குதல்
உ-ம்: ISMN, GTN

03. இரத்த அழுத்தத்தை சீராக்கும் மருந்துக்களும் இதயத் துடிப்பை குறைத்து இருதயத்திற்கான இரத்த வழங்கலை அதிகரிக்கும் மருந்துகளும் வழங்கல்
உ-ம்: கப்ரோபிறில் (Captopril), அடினலோஸ்(Atenolol)

04. ஒட்சிசன் இருதயப் பலவீனம் ஏற்பட்டவர்களுக்கு பெரிதும் உதவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. இரத்த குழாய்களில் உள்ள இரத்தக் கட்டிகளை கரைக்கும் (Trombolysis) மருந்துகளை வழங்குதல்.
உ-ம்: ஸ்ரெப்ரோகைனேஸ் (Steototeinose),Tenecteplase, இதனால் இரத்தோட்டத்தை இதயத்தசை மீளப்பெறும் வாய்ப்பு ஏற்படுகின்றது. நோயாளி ஒருவர் நெஞ்சு வலி ஏற்பட்டு எவ்வளவு குறுகிய நேர இடைவெளியில் சிகிச்சை பெற வருகிறாரோ அவ்வளவு இம் மருந்துகள் பயன்படுத்த கூடியதாகவும் (12 மணித்தியாலங்களுக்குள்) பலனைத் தருவதாகவும் இருக்கும்

06. ஆரம்ப சிகிச்சையை தொடர்ந்து அஞ்சியோகிராம் பரிசோதனையின் பின்னர் அடைப்புகளுள்ள இரத்தகுழாய்களை விரிவடையச் செய்யும் ஸ்ரெண்ட் (Stent) இடப்படுவதாலோ (Angioplasty),invitesion இருதய சத்திர சிகிச்சை (CBBG) செயற்படுவதாலோ மீள்குருதியோட்டம் பெறப்படும். இதனால் இருதய தசைகளுக்கு ஒட்சிசன் நிறைந்த குருதி வழங்கப்படும்.

## மாரடைப்பின் பின்னர் எமது வாழ்க்கையில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் என்ன

01. உணவுப் பழக்கவழக்கத்தில் ஏற்படும் மாற்றம்
உணவில் கலோரி குறைந்த உணவுகள், காய்கறிகள், விற்றமின்கள், கனியுப்புக்கள், நார்த்தன்மை நிறைந்த உணவுகள், பழங்கள், என்பவற்றை சேர்ந்துக்கொள்ள வேண்டும். கொழுப்புச் சத்து நிறைந்த தாவர எண்ணெய்களை (சூரியகாந்தி எண்ணெய், நல்லெண்ணெய்),ஆடை நீக்கிய பால் என்பவற்றை சேர்த்துக்கொள்ளலாம் மஞ்சட்கரு, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, நண்டு, இறால், கணவாய், பெரிய மீன்கள் என்பவற்றை தவிர்க்க வேண்டும்.

02. மருந்துகளை சரியான அளவில் சரியான முறையில் பாவித்தலும், தவறாது கிளினிக் செல்வதன் மூலம் இரத்த அழுத்தம், இரத்தப் பரிசோதனைகளை கிரமமாகப் பார்த்துக் கொள்வதும் அத்தியாவசியம்.

03. மது பாவனையையும் புகைப்பிடிப்பதையும் நிறுத்திக்கொள்ளவேண்டும்

04. உடற் பருமனை உயரத்திற்கேற்ப குறைக்க வேண்டும்.

திருமதி.மோ.துரைநாயகம்
(விஞ்ஞான ஆசிரியர்)
தி/தி பெருந்தெரு விக்நேஸ்வரா மகா வித்தியாலயம்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரடைப்புக்கு காரணமான புகைத்தலை தடுப்பது உங்கள் கைகளில்.

இருதய நோய்களால் மரணமடைவதற்கு புகைத்தல் ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. புகைப்பவர்கள் மாரடப்பால் மரணமடைவதற்கு புகைத்தல் முக்கிய காரணியாக இருக்கிறது. புகைப்பவர்கள் மாரடைப்பால் மரணமடைவதற்கு வாய்ப்பு புகைக்காதவர்களை விட இரண்டு மடங்காகும்.

ஒருவர் புகைக்கும் சிகரெட்டுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அதிகரிக்க மாரடைப்பு வருவதற்கான வாய்ப்பும் அதிகரிக்கிறது. தினமும் 20 சிகரெட்டுக்களுக்கு மேல் புகைப்பவர்களுக்கு மாரடைப்பு வருவதற்கான வாய்ப்பு புகைக்காதவர்களை விட 5 மடங்கு அதிகமாகும். புகைப்பவர்கள் மரணமடைவதற்கான வாய்ப்பு ( மாரடைப்பால் ) புகைக்காதவர்களை விட இரண்டு மடங்காகும்.

இளவயதில் புகைக்க ஆரம்பிப்பவர்களுக்கும், அதிக சிகரெட்டுக்களைப் புகைப்பவர்களுக்கும், அதிகம் புகையை உள்ளிளுப்பவர்களுக்கும் ஆபத்து மேலும் அதிகமாகும். உயர் இரத்த அழுத்தம், அதிகரித்த குருதி கொலஸ்ரோல் ஆகியவற்றிற்கும் புகைத்தல் காரணமாகிறது. புகைத்தலானது சுவாச நோய்கள், நுரையீரல் புற்றுநோய், சிறுநீரகப் புற்றுநோய் ஆகியவற்றிற்கும் காரணமாகிறது.

புகைத்தலை உடனடியாக நிறுத்துங்கள் அல்லது குறையுங்கள். குறைப்பது பெரும்பாலும் சாத்தியமல்ல. நிறுத்துவதற்கான நடைமுறைகளையும், ஆலோசனைகளையும் வைத்தியருடன் கலந்துரையாடுங்கள். காரம் குறைந்த சிகரட்டுக்களும், சுருட்டு, பைப் ஆகியனவும் தீங்கற்றவை என்பது தவறான கருத்து. நடு அளவிலான ஒரு சுருட்டில் 5 சிகரெட்டில் உள்ள அளவு புகையிலை உள்ளது என்பதை மறந்து விடாதீர்கள். நீங்கள் புகைத்தால் உங்களுக்கு மட்டுமன்றி உங்கள் வீட்டிலுள்ள குடும்ப அங்கத்தினருக்கும், தொழிலகத்திலுள்ள சக ஊழியர்களுக்கும் பாதிப்பு ஏற்படும். பெற்றோர், ஆசிரியர்கள், சுகாதார சேவையாளர்கள் புகைக்காமல் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

**புகைத்தலை நிறுத்துவதால் நன்மைகள்.**

1. 2 மணி நேரத்தில் நிகொட்டின், உங்கள் உடலில் இருந்து அகலும்.
2. 6 மணி நேரத்தில் இரத்த அழுத்தமும், இருதயத் துடிப்பும் குறையும்.
3. 12 மணி நேரத்தில் காபனோர் ஒட்சைட்டு ஆகியன உங்கள் உடலிலிருந்து அகன்று விடுதலால் உங்கள் நுரையீரல் சிறப்பாகச் செயறபடும்.
4. 2 நாட்களில் சுவையும், மணத்தையும் உங்களால் துல்லியமக உணர முடியும்.
5. 2 - 12 வாரங்களில் உங்கள் குருதிச்சுற்றோட்டம் முன்னேற்றம் அடைவதால் நடப்பதும், ஓடுவதும் களைப்பின்றி இலேசாகும்.
6. 3 -9 மாதங்களில் இருமல், இழுப்பு, ஆஸ்த்மா போன்ற அறிகுறிகள் அகலும். நுரையீரல் பலமடையும்.
7. 5 வருடங்களில் மாரடைப்பு வருவதற்கான வாய்ப்பு அரைவாசியாகக் குறைவடையும்.
8. 10 வருடங்களில் நுரையீரல் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு அரைவாசியாகக் குறையும்.

மேலே கூறப்பட்டவற்றை நடைமுறைப்படுத்த முயற்சிப்பதன் மூலம் புகைத்தலற்ற, நோயற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கு எமது பங்களிப்பினை வழங்கி அமைதியான, மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு வழிகாட்டுவோம்.

திருமதி. து.சு. மைக்கல்
(ஓய்வு பெற்றவிஞ்ஞான ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Importance Of English

English is the most widely used language in the world. Nearly two third of the world population use English Language.

In Srilanka it is the second language. English is an International language. It promotes good relation among all the communities. It is a language of every day life.

English can be regarded as the window to the world. English plays an important role as a link language. If we know English we can communicate with other ethnic groups easily.

Today the world is highly advanced in Science and Technology. If we know English we can read and understand the facts given in these books.

At present, the whole world has become a global village through modern methods of communication. English is the main language. That is used in all the media such as Fax, e-mail, Internet and so on.

English is essential for trade and higher studies. Most of the books are written in English. English is used as the official language of communication in all the international organizations. Those who participate in the conference of international organization will be able to contribute effectively, if they have a good command of the English language.

Knowing English will make you more employable. English will help you to become more educated. English will give you more information.

People who know English are respected in our country. If you can speak English you are generally considered trust worthly, intelligent and Educated .

We can achieve our goals in our life easily, if we know English.

Mrs. U. Jeevahan
Teacher
BA(Eng;ish) Englsh Trained (Special)
National Diploma in English



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறேன் வித்தியாலயத்தை

திருமலை நகரின் மத்தியிலே
விடியலைத் தேடி வியாபித்து நிற்கும்
விக்னேஸ்வரர் நாமம் கொண்ட
வித்தியாலயமே
கால் பதித்த நாளிலிருந்து இன்று வரை
பெரும் பகுதியை உன்னுள் கழிக்கிறேன்.
பதித்த காலங்களில் பகிரும் அனுபவங்கள்
ஏராளம் , ஏராளம் ..............................................
திருமதி . முரளிதரன் முதல்
திருமதி . கிருபாகரன் வரை
அன்பையும் பண்பையும் ஆழமாகப் பெறுகின்றேன்.
கலை , நுண்கலை விற்பனர்கள்
முகாமைத்துவ முதுமானிகள்
கணனித்துறையில் கைதேர்த்த சிற்பிகள்
என்ற பட்டங்கள் மட்டுமன்றி,
பல்வேறு துறைகளிலும்
அணிவகுத்துச் செல்ல - வழிகோலுவது
தி/தி/பெருந்தெரு விக்நேஸ்வரா மகா வித்தியாலயமே.
உன் சேவை நிதமும் தொடர
என் மனமார்ந்த வாழ்த்துகளும் ஆசிகளும்.
நீ.......................................................................................................
கல்வித்துறையில் அழியாப் புகழோடு
கலைத்துறையில் கம்பீரமாய் நின்று
விளையாட்டுத் துறையில் வீர நடையோடு
வெற்றி வாகை சூடிட
வாழ்த்துகின்றேன் ..........................................................................
உன் 200 வது ஆண்டை
கொண்டாடுவதை எண்ணி மகிழ்ச்சியுடன்
வாழ்த்துகின்றேன்.

ஆசிரியை
திருமதி . சி . விக்னேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கமும் ஆரோக்கியமும்.

தூக்கம், நித்திரை,உறக்கம்,(Sleep) என்பது மனிதர்களும், விலங்குகளும் ஓய்வுகொள்ளும் ஓர் இயல்பான நிலை. உலகில் வாழும் பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன,ஈருடகவாழிகள், மீன்கள் என பலதரப்பட்ட உயிர்களின் தொடர் இயக்கத்திற்கு நித்திரை அவசியமாகிறது. பொதுவாகவே உயிரினங்கள் படுத்து கண்களை மூடி துயில்கொள்ளும். இவ்வாறு மனிதர்களாகிய எமக்கு ஓய்வு மிகவும் அவசியம். ஓய்வுக்காக தூங்கும் போது சில அறிவியல் சார்ந்த விளக்கங்களை கடைப்பிடித்து தூங்குவதனால் எமது அடுத்த செயற்பாடுகளுக்கு சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தும்.

தூங்குவதற்கு ஏற்ற காலம் இரவு மட்டும் தான் என்பது இயற்கையின் விதிகளில் ஒன்று. பூமியில் தட்ப வெப்ப நிலைகள் மாறி இரவில் குளிர்ச்சி பொருந்திய சூழ்நிலை தான் தூக்கத்திற்கு ஏற்ற காலமாகும். இரவில் அதிக நேரம் விழித்திருப்பதால் பல்வேறு அசௌகரியங்களை எமது மனமும் உடலும் எதிர்நோக்குகின்றன.

''சித்த மயக்கஞ் செறியும் புலத்தயக்க

மெத்தனுக்கமைந்த மென்பவை

களித்தமுற வண்டுஞ் சிலரை

நாயாப்பபன்னோய் கவ்வுமிராக்

கண்டுஞ் சிலரை நம்பிக் காண்''

என்ற பாடல் வரியில்... இரவில் நித்திரை செய்யாதவர்களிடத்தில் புத்தி மயக்கம், தெளிவின்மை, உடலில் சோர்வு, பயம், படபடப்பு, மற்றும் மந்தம், மலச்சிக்கல் போன்றவை எளிதில் பற்றிக்கொள்கின்றது எனக் கூறுகின்றார்.

எத்திசையில் தலை வைத்து உறங்க வேண்டும் என்பதிலும் பல நன்மைகள் உண்டு. கிழக்குத் திசையில் தலை வைத்து உறங்குவது மிகவும் நல்லது. தெற்குத் திசையில் உறக்கம் கொள்வதால் ஆயுள் வாழும். மேற்குத் திசை கனவு, அதிர்ச்சியை ஏற்படுத்தும். வடக்குத் திசையில் ஒருபோதும் தலை வைத்து உறங்கக் கூடாது. இவை விஞ்ஞான ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன. வடக்குத் திசையிலிருந்து வரும் புவிக்காந்த சக்தி தலையில் மோதும் போது அங்குள்ள ஒட்சிசன் சக்தியை இழக்கச் செய்து மூளையை பாதிப்படையச் செய்வதுடன் இதயக் கோளாறுகள், நரம்புத் தளர்ச்சி உண்டாகும் என்பது பலரின் அனுபவ ரீதியான உண்மையாகும்.

மேலும் மல்லாந்து கைகளையும், கால்களையும் அகட்டி வைத்தபடி தூங்கக்கூடாது. இதனால் தேவையான ஒட்சிசன் உடலுக்குக் கிடைக்காமல் போகும். குப்புறப்படுத்தல் கூடாது. இடது கை கீழாகவும், வலது கை மேலாகவும் இருக்குமாறு கால்களை நீட்டி இடது பக்கம் சரிந்து தூங்குவதே சிறந்தது. இதனால் வலது மூக்கில் சுவாசம் சூரிய கலையில் ஓடும்(வலது நாசி வழியாக விடும் மூச்சு). இதில் எட்டு அங்குலம் மட்டுமே சுவாசம் வெளியே செல்வதால் நீண்ட ஆயுள் வளரும். உடலுக்குத் தேவையான வெப்பக் காற்று அதிகரித்து பித்த நீரை அதிகரிக்கச் செய்து உண்ட உணவும் எளிதில் சமிபாடடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்திற்கு சீரான ஒட்சிசன் கிடைத்து இதயமும் பலப்படும். வலது பக்கம் சரிந்து உறங்குவதால் இடது பக்க மூக்கின் வழியாக சந்திர கலை (இடது நாசி வழியாக விடும் மூச்சு) சுவாசம் ஓடும். இதனால் பன்னிரெண்டு அங்குல சுவாசம் வெளியே செல்லும் போது உடல் குளிர்ச்சி உண்டாவதுடன் உணவு சமிபாடாகாமல் சிக்கல்கள் ஏற்படலாம் என கூறப்படுகிறது.

நாம் அனைவரும் நல்ல தூக்க சுகாதாரத்தை பின்பற்ற வேண்டும். தூக்க சுகாதாரம் என்பது தூங்குவதற்கு முன் அல்லது தூங்கும் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகள். அவற்றில் அதிக உணவு உண்ணுதல்,தூங்குவதற்கு முன் தேநீர் அருந்துதல், புகை பிடித்தல், மது அருந்தல், உறங்க ஆயத்தமாவதற்கு முன் கைத்தொலைபேசி, டிவி, கணனி(ஸ்கிரீன் டைம் - Screen Time) என்பவற்றைத் தவிர்த்தல். மேலும் பகலில் குட்டித்தூக்கம் போடவிரும்பினால் அதனை அவர்களின் படுக்கையில் செய்யாதீர்கள். அன்றாட வேலையில் ஒரு நிலையான வழக்கத்தைப் பின்பற்றுங்கள். அதில் தூக்கம், எழுதுதல், உடற்பயிற்சி, நேரம் எல்லாமே நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும். இவை நல்ல தூக்க சுகாதாரமான பழக்கங்கள் ஆகும்.

இவ்வாறு தூங்கும் போது சிக்கல்களின்றி நல்ல ஆரோக்கியமான சிந்தனைகள் நினைவுகளை மனதில் கொண்டு உறங்குவதால் அமைதியான தூக்கம் எம்மை ஆட்கொள்ளும். ஆரோக்கியமான சிறந்த தூக்கத்தின் பயன்களைக் கொண்டாடுவதும், தூக்கப் பிரச்சினைகள் மற்றும் அதற்கான மருத்துவம், கல்வி, சமூக நோக்கு ஆகியவற்றை சமூகத்தின் கவனத்திற்கு கொண்டுவருவதும் தூக்க கோளாறுகளின் தடுப்பு மற்றும் அவற்றின் மேலான்மையை ஊக்குவிப்பதற்கென உலக தூக்க மருத்துவ சங்கம் ஆண்டு தோறும் உலக தூக்க நாள் (World Sleep Day) ஆண்டின் மார்ச் மாத இரண்டாவது முழுமையான வாரத்தில் வரும் வெள்ளிக்கிழமையை தெரிவுசெய்து பிரகடனப்படுத்தியுள்ளது. 2008 ஆம் ஆண்டு மார்ச் 14 ஆம் திகதி முதலாவது உலக தூக்க தினம் கொண்டாடப்படுவதுடன் அதற்கான குறிக்கோள், வாசகங்களையும் அமைத்து சமூக விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகின்றது. நல்ல தூக்கம் ஆரோக்கியமான முதுமை என்பதுடன் தூக்கம் நன்றாக இருந்தால் ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் பெருகும். இதனால் தரமான தூக்கம் நல்ல மன மகிழ்ச்சியான உலகினை உருவாக்கும்.

**நன்றி**

திருமதி. ராதிகா தவராஜா

ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையில் விழுமியப்பண்புகளும் நல்லிணக்கமும்

இன்றைய பூகோளமயமாதல் மற்றும் தொழில்நுட்ப அறிவு வளர்ச்சி காரணங்களால் இயந்திரமயமாக்கப்பட்ட நவீன உலகில் வாழும் மனிதனும் இயந்திரமாகிவிட்டான் என்பதே நிதர்சனமான உண்மை...

செல்வத்தைப் பெருக்குவதிலும் வளர்ப்பதிலுமே நாம் போட்டியிட்டு மனிதம் எனும் மாண்பு மிகு குணத்தை தொலைத்து நாகரிக வாழ்வு என்னும் முகமூடி அணிந்து இயந்திரமனிதனாகிவிட்டோம். இதனால் மனித உள்ளங்கள் பெருமை, சண்டை, வெறுப்பு, அகம்பாவம், குரோதம் ஆகிய சாக்கடைகளை சுமந்த வண்ணமே இருப்பதைக் காணமுடிகின்றன. இந்நிலமை தொடர்வதனாலே எமது நாடு மட்டுமன்றி முழு உலகும் சமூக ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துவதில் பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றது.

இவ்வாறான நிலைமையிலிருந்து மனித வாழ்வை மீட்பதற்கும் செம்மையான வகையில் வாழ்வதற்கும் விழுமியப்பண்பு மற்றும் சமய நல்லிணக்கம் என்பன முக்கியப் பங்கை வகிக்கின்றன. விழுமியம் என்பது தனி மனித வாம்விலும் சமூகத்திலும் இன்றியமையாத ஒன்றாகும். மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை விழுமியப் பண்புகள் தொடர்ந்து கொண்டிருக்கும். அந்த வகையில் அன்பு, கருணை, நேர்மை, ஒழுக்கம், பாசம் போன்ற விழுமியப் பண்புடைய மனிதனையே நல்ல மனிதன் என்போம். இவ்வாறான நல்ல மனிதனை உருவாக்குவதில் முதன்மையான பங்கு வகிப்பது பாடசாலையாகும். அதாவது கிரேக்க அறிஞர் பிளேட்டோவின் கருத்துப் படி "கல்வியால் கிடைக்கப் பெறும் நன்மை யாதெனில் நல்ல மனிதனை உருவாக்குவது மட்டுமல்லாமல் அவர்களை நல்ல முறையில் செயலாற்றவும் செய்கிறது. இதற்கமைய கல்வியினூடாக விழுமியப் பண்புகளை மாணவர்கள் மத்தியில் ஊட்ட பாடசாலை மட்டுமே இறைவனால் வழங்கப்பட்ட ஒரு பரிசு.

எமது மாணவ சமூகமே நாளைய எதிர்காலம் எனும் நோக்கில் பார்க்கும் போது பாடசாலை வாழ்வில் ஒரு மாணவனுக்கு ஊட்டப்படும் புத்தகக்கல்வியை மட்டுமின்றி விழுமியப் பண்புகளுமே நாளைய சமூகத்தை உருவாக்குகின்ற இன்றைய வித்து. அது பயனளிக்கக்கூடிய நல்ல மரமாகவும், இடையூறை ஏற்படுத்தக்கூடிய மரங்களாக வேரூன்றுவதும் பாடசாலை சமூகத்தின் கைகளிலே உள்ளது.

அன்றய மாணவ சமுதாயம் குருகுல கல்வியைக் கற்று குருவை மதித்து கற்கக்கூடியவர்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் காணப்பட்டனர். ஆனால் இன்றய நிலை அன்றைய நிலையிலிருந்து கேள்விக்குறியாகியுள்ளது. இதற்கான காரணங்களை பார்ப்போமானால் மாணவர்களின் பின் தங்கிய பின்புலன்கள் தொழில்நுட்ப மாற்றத்தின் விளைவால் ஏற்பட்ட நாகரிக மோகம், போதைவஸ்து பாவனை, சினிமாத்துறையின் வளர்ச்சி, பாலியல் துஷ்பிரயோகம் போன்றவற்றை முதன்மைப்படுத்தலாம். இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் மாணவர்களை நல்ல மனிதனாக மாற்றத் தேவையான விழுமியப் பண்புகளை ஊட்டும் பொறுப்புக்கு பாடசாலை சமூகம் மற்றும் ஆசிரியர்களே வகை கூற வேண்டியவகள். மனிதன் பிறந்த பின் முதன்முதலில் சந்திக்கக்கூடிய சமூகம் பாடசாலை சமூகம். பல்வேறு சூழ்நிலைகளில் இருந்து பாடசாலை வரும் மாணவர்கள் மத்தியில் விழுமியப் பண்புகளை ஊட்டுவது மட்டுமன்றி சமய நல்லிணக்கங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் மத்தியில் நல்ல மனிதனை உருவாக்குவதற்கு வழிவகுக்கும். ஒவ்வொரு சமயமும் தமக்கே உரிய தனித்துவ தன்மை கொண்டே காணப்படுகின்றது. ஒவவொரு சமயமும் நல்ல விடயங்களையே போதிக்கிறது. அந்த வகையில் இஸ்லாமிய சமூகம் "மிருகத் தன்மையில் இருந்து மனிதத் தன்மையைப் பெற்று புனிதத் தன்மை நோக்கிப் பயணம் செய்வதையே குறிக்கிறது. அதனூடான கோபத்தை அடக்குவோர் மனிதர்களிடையே மன்னிப்பவரே இறைவன் அருளும் அன்பு உண்டென அல்-குர் ஆன் வலியுறுத்துகிறது. அது மட்டுமன்றி "பிற மதத்தவரோடு ஸ்நேகமாக இருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் உதவி உபகாரங்கள் செய்து நீதமாக நடந்து கொள்ளுமாறும் வலியுறுத்திக் கூறுகின்றது.

"பாலைக் கடைந்தால் வெண்ணெய் பிறக்கும் மூக்கைப் பிசைந்தால் இரத்தம் பிறக்கும். கோபத்தை வலியுறுத்தினால் சண்டை தான் பிறக்கும்." என விவிலியம் கூறுகிறது. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்றார் பல ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த புலவர் பூங்குன்றனார். "அவலம் அறுப்பது சமயம்" என்றார் திருஞானசம்பந்தர்.

பல்வேறு சூழ்நிலைகளிலிருந்து பாடசாலை நோக்கி முதல் முதலில் வரும் மாணவச் சமூகம் முதல் முதலில் இனம், மொழி போன்ற பல்வேறு வேறுபாடுகளை பாடசாலையிலே காண்கிறது. அவ்வேறுபாடுகளை மாணவர்களுக்கு இனங்காட்டிய முதல் தளமாகிய பாடசாலையே அவ்வேறுபாட்டை மாணவர்மத்தியிலிருந்து வேரூன்றுவதற்கு முன் விழுமியப் பண்புகளோடு இணைந்த சமயப் போதனைகளை மாணவர்களுக்கு ஊற்றி அவர்களை ஆற்றுப்படுத்த வேண்டும். ஒவ்வொரு சமயத்தவரும் தமது சமயத்தின் கொள்கைகளையும் சரியாக புரிந்துகொள்ளாத காரணத்தினாலேயே சமயப்பிணக்குகள் முரண்பாடுகளை ஏற்படுத்தி சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்கின்றனர். ஆனால் எல்லா சமயங்களும் உலக ஒற்றுமையையும், சமத்துவம், சமாதானம், மற்றும் சகோதரத்துவம் என்பவற்றை குறிக்கோளாக வைத்துள்ளன. இதனை மாணவர்களுக்கு மத்தியில் ஏற்பதுத்துவதற்கு ஒவ்வொரு பாடசாலையிலும் மதரீதியான காலைக்கூட்டங்கள், ஆராதனைகள் ஒழுங்குபடுத்தப்படுவதுடன் அறநெறிப்பாடசாலைகள், மிஷனரிகள் மற்றும் விழுமியப் பண்புகளை போதிக்கும் இடங்களுக்கு மாணவர்களை அனுப்புவதற்கான ஊக்கங்களை ஏற்படுத்த வேண்டும்.

மாணவர்களிடையே விழுமியப் பண்புகள் மற்றும் சமய நல்லிணக்கத்தை வளர்ப்பதில் ஆசிரியர்களின் பங்கு போதிப்பதோடு மட்டுமன்றி அவற்றை தம் வாழ்வில் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்ந்துகாட்டுவதாகும். எனவே மாணவர்களும் அவர்களுக்கு சமூகத்தோடு ஏற்ற விழுமியப் பண்புகளையும் நல்லிணக்கங்களின் அவசியம் பற்றி விழிப்புணர்வை ஊட்டி நாட்டிற்கும், சமூகத்திற்கும் நற்பண்புகளை உருவாக்குவது பாடசாலையின் மிகப்பெரிய பொறுப்பு. மாணவர்களை வெறுமனே பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் புத்தகப் புழுவாக உருமாற்றும் நிலையமாக அல்லாது சிறந்த நற்பிரஜைகளை வெளியிடும் ஓர் சமூக அலகாக பாடசாலை அமைக்கப்பட வேண்டும். அத்துடன் மாணவர்களின் விழுமியப் பண்புகளில் அதிபர், ஆசிரியர்கள் மட்டுமன்றி பெற்றோர்களின் பங்களிப்பும் பாரியளவில் தேவைப்படுகிறது. இவ்வகை கூறவேண்டியவர்கள் மூலம் வன்முறையற்ற, விழுமியப் பண்புள்ள, சமூக நல்லிணக்கம் மிக்க சமுதாயத்தை உருவாக்குவோம்.

திருமதி. ஸக்கியா.ஜவாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறநானூற்றில் வெளிப்படுத்தப்படும் அறக்கருத்துகள

சங்ககால இலக்கியங்களுள் எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாக அமையும் புறநானூறு புறப்பொருள் பற்றிப் பேசுகின்றது. இது பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கையை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்றது. அதுமட்டுமன்றி அரசர்களுக்கு அறிவுரை கூறும் பாடல்களும் போற்றிப் பாடும் பாடல்களாகவும் கூட அமைவு பெற்றுள்ளன. புறநானூற்றுப் பாடல்கள் புறப்பொருட் துறைகளை சிறப்பாக விளக்குவதுடன் நிலையாமைக் கருத்துக்கள் தொடர்பாகவும் பேசுகின்றன. புறம் பற்றிப் பாடும் 400 பாடல்களைக் கொண்டதால் புறநானூறு எனப்படுகின்றது. ஏறத்தாழ 155 புலவர்களால் பாடப்பட்ட இவ்விலக்கியம் புறம் தொடர்பாகப் பேசும் பிரதானமான நூலாகும்.

தனிமனிதன் தன் கடமைகளைத் தவறாது செய்வது அறமாகும். மனிதனின் நல்லொழுக்கம் என்பது செயல், எண்ணம், ஆகிய இரண்டும் சேர்ந்ததாகும். பண்டைய தமிழ்ச் சான்றோர்கள் அறத்தை கொள்கையாகவோ, கோட்பாடாகவோ போற்றவில்லை. சமயமாகவும் கருதவில்லை. அறத்தை வாழ்க்கை நெறியாகவே போற்றினார்கள். வாழ்ந்தார்கள். மனிதன் தன் வாழ்க்கையின் பலவகை அனுபவங்களிருந்து அறிவு பெறுவதே சிறந்த வாழ்வியலாகும். அவ்வாழ்வியல் தூய்மையானதாக அமைய வேண்டுமெனில் மனிதன் தனக்கென ஒரு தனி நியதி அறத்தை மேற்கொண்டு வாழவேண்டும். அத்தகைய அறவாழ்வை எவ்வாறு அமைத்துக் கொள்வது என்பதனை, நமது சங்க இலக்கியப் பேழை என்று அழைக்கப்படும் புறநானுறு செம்மையுறச் செய்துள்ளது. நமது தமிழ் நாகரிகத்திற்கு ஒரு முலதாரம்

**பொதுவுடமைச் சிந்தனை**

பல நூற்றாண்டுக்கு முன் தோன்றியதான புறநானூற்று இலக்கியத்திலே அறக்கருத்தை வெளிப்படுத்தும் முகமாக பொதுவுடைமைச் சிந்தனைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் உரிய உண்மைகளையும் நெறிமுறைகளையும் நம்கு காட்டிக்கொண்டு நிற்கும் கலங்கரை விளக்கமாகக் காட்டி நிற்கின்றது கீழ்வரும் செய்யுள்

**“யாதும் ஊரே யாவரும் கேளிர்<br>
தீதும் நன்றும் பிறர்தர வாரா<br>
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன<br>
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்<br>
இனிதென மகிழ்ந்ததென்றும் இலமே முனிவின்<br>
இன்னா தென்றலு மிலமே மின்னொடு<br>
வானந் தண்டுளி தலைஇ யானது<br>
கல்பொரு திரங்கு மல்லற் பேரியற்று<br>
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்<br>
முறைவழிப் படூஉம் என்பது திறவேள்<br>
காட்சியிற் தெளிந்தன மாகலின் மாற்சியிற்<br>
பெரியாலை வியத்தலும் இலமே<br>
சிறியாரை யிகழ்தல் அதனினும் இலமே!”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போரிலே அறம்**

புறநானூற்றுப் பாடல்கள் பெரும்பாலும் போர்ச்சிந்தனைகளைச் சார்ந்தவையே. அந்தவகையில், போரிலே தன் தமையனையும், கணவனையும் அணித்தே இழந்தாள் ஒரு தாய். மற்றொரு நாளும் போர்ப்பறை(செருப்பறை) கேட்கிறாள். அப்போது தன் அருமை மகனை அழைத்து போர் தரும்படி போருக்கு அனுப்புகிறாள். அவ்வடிகள் வருமாறு,

**இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி**
**வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்**
**பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி**
**ஒருமக னல்ல(து) இல்லோள்**
**செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே!** (புறம் - 279)

இப்பாடலைப் பாடிய புலவர் அறத்தத்துவம் நன்குணர்ந்தவனாக இருக்கின்றான். அதே போல நல்ல மனோதத்துவமும் தெரிந்தவனாயிருக்கிறான். முன்னொரு நாள் தமையனையும் பின்னொரு நாள் தன் உயிரினும் இனிய கணவனையும் இழந்த ஒரு தாய்க்குத் தான் மற்றும் ஒரு நாள் போர்ப்பறை கேட்டதன் மனநிலை தெரியும். அதனை நன்குணர்ந்த புலவன் புறத்திலே அறத்தை வெளிப்படுத்த இன்றும் என்ற சொல்லை வைத்து தாயின் மனோ நிலையையும் பாடலைப் படிப்போரின் மனநிலையையும் விளங்கியுள்ள அதேவேளை புறத்திலே அறச்சிந்தனையையும் தோற்றுவித்துள்ளான்.

**ஒழுக்கம் போதிக்கும் அறம்**

புறநானூற்றுப் பாடல்கள் மக்களினுடைய அறியாமையைப் போக்கி அறிவைப் பெற்றுத் தரும் தொழில்களையே பெரும்பாலும் செய்துள்ளன. பெரும்பாலான பாடல்கள் மனிதரிடையே ஒழுக்கம் என்ற அறச்சிந்தனையையும் போதிப்பனவாக உள்ளன.

**"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்**
**அறிவிலை வணிகன் ஆயலன் பிறரும்**
**சான்றோர் சென்ற நெறியின்**
**ஆங்குப் பட்டன்(று) அவன்கை வண்மையே"** (புறம் - 134)

மேலுள்ள பாடலிலே பாடல் நயம் ஒருபுறமிருக்க மக்களில் பெரும்பாலானோர் செய்யும் அறியாத் தவறுகளை புலவன் அழகாகக் கண்டித்து அவனை அறத்தின் பால் செலுத்துகிறான் என்பதை அறியலாம். கொடிய தன்மையுடையோர் மறுமையில் கிடைக்க கூடிய பயனை எதிர்பார்த்தால் அது கொடுமை ஆகாது என்ற பெரும் உண்மையை கவிஞர் அழகாக இங்கே கூறியுள்ளார். மக்களுக்கு நல்லொழுக்கப் போதனைகளைக் கூறிய புலவன் நாட்டு மன்னனுக்கும் நல்லறம் போதிக்கும் பல சந்தர்ப்பங்களை புறநானூற்றுப் பாடல்களிலே அறியலாம். புலவனானவன் வெறுமனே அரசனை வாழ்த்தியபடி மன்னனிடம் பரிசில் பெறுவதை மட்டுமே நோக்காகக் கொல்லாது மன்னன் தவறிழைக்கும் வேளைகளிலும் பாராமுகமாக இருக்கும் நேரங்களிலும் அவனுக்கு உண்மையை எடுத்துக்கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை அறவழியில் செலுத்தும் திறன் கொண்டவனாக புறநானூற்றுப் புலவன் இருந்திருக்கிறான்.

அறக்கடவுளே நேரில் அரசராக உருவெடுத்து ஆட்சி செய்வதைப் போல, வளையாத கோள் போன்ற செங்கோலால் ஆராய்ந்து ஆட்சி செலுத்தும் நீதி கேட்பதாகவும் அவனை நல்வழிப்படுத்த ஆற்றல் படுத்துவதாகவும் பின்வரும் பாடல் அமைகின்றது.

"நாடெனப்படுவது நினதே யத்தை, ஆங்க
நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே
நினவ கூறுவ லெனவ கேண்மதி
அறம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதினெளி யோரீன்

டுறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே
.......................

மாரி பொய்யினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையிற் தோற்றினும்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்
அது நற்கறி ந்தனை யாயினீயும்

நொதும் லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பார மோம்பிக்
குடிபுறந் தருகுவை யாயினின்
அடிபுறந் தருகுவ ரடங்கள் தோரே"

**அரசியலில் அறம்**

தமிழர் அரசியலில் முக்கியமாய் திகழ்பவன் அரசன் தான். அரசன் இல்லாத நாட்டை பழந்தமிழர் கற்பனை செய்து பார்த்தும் இருக்கமாட்டார்கள். நாட்டை உடலாகவும் அரசனை அதன் உயிராகவும் எண்ணி அவனுக்குச் சிறப்புச் செய்திருந்தார்கள்.

அரசனானவன் அன்பு, அறிவு, ஆற்றல் என்பன உடையவனாயிருத்தல் வேண்டும். அறிவினாலேயே நாடு காவலுக்குரியன தொடர்ந்து முறை தவறாது காப்பாற்றுதலும். அன்பினால் குடிமக்கள் நலன் கருதி ஆவன செய்தலும் இரவலருக்கு ஈதலும், தன் பராக்கிரமத்தால் பகையரசரால் வரும் குற்றங்களைத் தடுத்தலும் போரில் வெற்றி பெறுதலும் மன்னனது கடமைகளாகவிருந்தன.

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால், யாயினும் என்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தர்குக் கடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீதி வழங்குதலில் அறம்**

அரசனானவன் நீதி வழங்குவதில் நடுநிலை பிறழாமல் இருக்க வேண்டியவன். அரசின் பெருமையெல்லாம் அறநெறியை அடிப்படையாகக் கொண்டது. பிறர் கூறுவதைக் கேட்டு ஆராயாமல் முடிவு செய்தல் தவறு. மன்னன் ஒரு போதும் பிறர் பழி கூறுவோர் மொழியை உண்மையென்று தெளிதல் கூடாது. தான் உண்மையாக ஒரு தீமையைக் கண்டால் அக்குற்றத்திற்கேற்ப தண்டனையை அளித்தலே முறையும் நீதியும் ஆகும்.

தன் சுற்றமென நினைக்காமல் பிறரெனவும் எண்ணாது நீதி வழங்க வேண்டும். அதனாலேயே தமிழ் மன்னர்கள் “அறங்கற வையம்” ஒன்றை நிறுவி குணநலச் சான்றோர்களை அவ்வையத்தில் இருத்தி நீதி வேண்டுவோருக்கு முறையாக நீதி வழங்கச் செய்தனர். பூதப் பாண்டியன் தன் பகைவனைத் தோல்வியுறச் செய்வதற்காகக் கூறும் வஞ்சினம் ஒன்றிலே,

> **அறநிலை திரியா வன்பி னவையத்துத்**
> **திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து**
> **மெலிகோல் செய்தேனாகும்**

என்று கூறிக்கொள்கிறான். இந்த அடிப்படையில் புறநானூற்று இலக்கியத்தில் வெளிப்பட்டு நிற்கும் அறக்கருத்துகளைக் காணலாம்.

திருமதி. தி. லோஹிதா
BA(Hous), M.A.in.Tamil
Diploma in Education(R)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பறையில் கற்றல் சூழலை முகாமைத்துவம் செய்வதற்கு ஆசிரியர் பயன்படுத்தும் நுட்பங்கள்.

"எங்கள் திறன் உலகை மாற்றியமைப்பதல்ல : எங்களை நாங்கள் மாற்றியமைப்பதில் தான் தங்கியிருக்கிறது. நாங்கள் உலகில் அடைய விரும்பும் மாற்றத்தை முதலில் நாங்களே அடைய வேண்டும்."

- மகாத்மா காந்தி -

"ஒரு வினைத்திறனுள்ள ஆசிரியரின் செயற்பாட்டில் முக்கியமானது வகுப்பறையில் ஒரு கற்றல் சூழ்நிலையை வருட ஆரம்பத்திலேயே ஏற்படுத்துவதேயாகும்"

- Mary Beth -

"பெருமளவிலான முகாமைத்துவ நுட்பங்கள் விரிவுபடுத்தப்படுவது வகுப்பறையிலும் வீட்டிலுமேயாகும்"

- Fred Jones -

வகுப்பறையில் கற்றல் சூழலை எவ்வாறு ஏற்படுத்த முடியும் என்ற கேள்விக்கு , ஆசிரியர் எப்போது வகுப்பறையில் பிரசன்னமாகியிருக்கிறாரோ அப்போது அவரால் வகுப்பறையில் கற்றல் சூழலை ஏற்படுத்த முடியுமெனக் கல்வியியலாளர்கள் கூறுகின்றனர். வகுப்பறைச் சூழலை ஒழுங்குபடுத்தல் என்பது ஆசிரியரின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கான ஒரு திறவுகோலாகும். இச் செயற்பாடானது ஆசிரியர்களுக்கு ஒரு சவாலாகவும் அமையும். வகுப்பறை ஒழுங்கமைப்பைக் கொண்டு அங்கு நடைபெறும் கற்றல் செயற்பாடுகளின் வினைத்திறனை ஓரளவு ஊகிக்க முடியும்.

மாணவர்களின் எதிர்பார்ப்பு, ஆசிரியர் என்பவர் தமது இலக்குகளை அடைய ஆசிரியர் வசதி செய்து கொடுப்பவராகவும் கற்றலுக்கு விருப்பத்தை ஏற்படுத்தக்கூடிய கற்பித்தல் - கற்றல் சாதனங்களுடன் ஆசிரியர் வகுப்பறைக்கு வர வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். அத்துடன் தாம் ஒவ்வொருவரும் சக மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் மதிக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும், தமது கருத்துக்கள், தேவைகள் மதிக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் காணப்படுகின்றது.

அதே போல ஆசிரியரியர்களிமும் எல்லா மாணவர்கள் மீதும் அவதானம் செலுத்தி கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும், கற்றலுக்கு உகந்த சூழலை ஏற்படுத்த வேண்டும், என்ற எதிர்பார்ப்பும் காணப்படுகின்றது, அத்துடன் மாணவர்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடியதாகவும், ஆர்வத்துடன் அவர்கள் கற்றலில் ஈடுபடக் கூடியதாக கலைத்திட்டம் அமையவேண்டுமென்ற எதிர்ப்பார்ப்பும் காணப்படுகின்றது.

இன்றைய கல்விச் சூழலில் பெரும்பாலான ஆசிரியர்களின் பிரச்சினையாக அமைவது மாணவர்களிடையே ஒழுக்க விழுமியங்களை ஏற்படுத்தி வகுப்பறைச் சூழலை மகிழ்ச்சிகரமாக பேணுவதாகும். அவ்வாறு மாணவர்களிடையே ஒழுக்க விழுமியங்களை ஏற்படுத்துவது பாடசாலையுடன் தொடர்புடைய அனைவரின் பொறுப்பும் கடமையுமாகும். அவற்றிற்கான சில நுட்பங்கள், அறிஞர்களின் அனுபவங்களை நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் ஹவாட் மில்லர் ( Howard Miller ) 12 படிநிலைகளை வருட ஆரம்பத்தில் மேற்கொள்வதன் மூலம் வகுப்பறையில் கற்றல் சூழலை முகாமைத்துவம் செய்யலாம் என்கின்றார்.

1. எதிர்பார்ப்புக்களை எழுத்து வடிவில் தயாரித்தல்.

2. எதிர்பார்ப்பில் உறுதியாக இருத்தல்.

3. சுய பொறுமையும், மாணவர்களுடனும் பொறுமை காத்தல்.

4. பெற்றோரின் உதவியைப் பெறுதல்.

5. அதிகம் கதைப்பதை தவிர்த்தல். மாணவரை செயற்பட வைத்தல்.

6. பாடவேளையை திட்டமிட்டு செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

7. சரியான நேரத்திற்கு வகுப்பறைக்கு செல்வதை உறுதி செய்தல். சரியான நேரத்தில் ஆசிரியர் வெளியேறுவதையும் உறுதி செய்தல்.

8. மாணவர் குழுக்களை திட்டமிட்டு அவதானித்தல்.

9. எல்லா மாணவர்களையும் செயற்பாடுகளில் ஈடுபட வைத்தல்.

10. மாணவரின் ஒழுக்கக் குறைகளை வகுப்பறையில் பொதுவாக கதைக்காமல் தனிப்பட்ட ரீதியில் அவர்களுடன் கதைத்தல் அல்லது அறிவுறுத்துதல்.

11. ஆசிரியர் சிறந்த புலக்காட்சியுடையவர், மனிதாபிமானம் உள்ளவர் போன்ற எண்ணங்கள் மாணவரிடம் எற்படக் கூடியவாறான நடத்தைகளை ஆசிரியர் மேற்கொள்ளல்.

12. எப்போது மாணவர்கள் உதவி கேட்பார்கள் என்பதை தெரிந்து வைத்திருத்தல். அல்லது உதவி செய்வதற்கு எப்போதும் ஆசிரியர் தயாராயிருத்தல்.

சில மாணவர்கள் தம்மை ஆசிரியர் கவனிக்க வேண்டும் என விரும்புவார்கள். இவ்வாறான மாணவர்கள் ஆசிரியரின் கவனத்தை தன்பக்கம் ஈர்ப்பதற்காக சிறு சிறு வேண்டத்தகாத செயல்களில் ஈடுபட்டு ஆசிரியரின் கவனத்தை ஈர்க்க முற்படுவர். ஆரம்பத்திலேயே இவ்வாறான மாணவர்களை அவதானித்து அவர்களது நடத்தைகளை மாற்றியமைக்க வேண்டும். சிறு விடயம் என்று இதனை தவிர்த்தால் காலக்கிரமத்தில் அவ்வாறான மாணவர்களால் முழு வகுப்பறைச் செயற்பாடுகளுக்கும் தடை ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் ஒருவர் தமது செயற்பாடுகளின் போது.....

1. கண் - கண் தொடர்பாடலை ஏற்படுத்தல்.

2. வகுப்பறையை சுற்றி அவதானித்து அமைதியற்ற மாணவர்களை அணுகி அதற்கான காரணத்தை அறிந்து வழிப்படுத்த வேண்டும்.

3. மாணவர் அவதானத்தை ஆசிரியர் பால் அல்லது செயற்பாடுகளின் பால் ஈர்த்தல்.

4. புதிய புதிய செயற்பாடுகளுடன் பாடத்தை ஆரம்பித்தல்.

5. நகைச்சுவை, சிந்தனைக் கிளரலை ஏற்படுத்தல்.

6. ஒவ்வொரு மாணவரின் செயற்பாட்டுக்கும் அவகாசம் வழங்குதல்.

7. மாணவர்களின் செயற்பாடுகளுக்கான இயலுமை, இயலாமைக்கான காரணத்தை அறிதல்.

8. வகுப்பறையில் மாணவர்கள் ஒழுங்குவிதிகளை மீறும்போது யார் செய்தார்கள் என்பதை விடுத்து எதற்காக செய்தார்கள் என்பதை அறிய முயலுதல்.

9. ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு மாணவர்களும் எல்லா ஆசிரியர்களாலும் அவதானிக்கப்படுகின்றார்கள் என்பதை உணரக்கூடிய செயற்பாதுகளில் ஈடுபடுதல்.

10. நவீன ஊடகங்களை பயன்படுத்தி கற்றலில் கவனத்தை ஈர்த்தல்.

மேற்கூறப்பட்ட செயற்பாடுகளை ஒழுங்காக வகுப்பறைகளிலும், பாடசாலை செயற்பாடுகளிலும் எல்லா ஆசிரியர்களும் மேற்கொள்வதன் மூலம் மாணவரை கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபடுத்தலாம்.

மாணவர்கள் விரும்பும் இடமாக வகுப்பறைச் சூழலை மாற்றியமைத்தல், உடலியல், உளவியல் தடைகளின்றி கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல், அத்துடன் புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, மற்றவர் கருத்திற்கு மதிப்பளித்தல், மற்றவர்களின் விருப்பு வெறுப்பு, கலை கலாசார பண்புகளுக்கு மதிப்பளித்தல், உடைமைகளைப் பாதுகாக்கும் பக்குவம் போன்ற விழுமியங்களை மாணவர்களிடம் ஏற்படுத்துதல் போன்றவற்றுடன் மாணவர்களுக்கு தண்டனை வழங்குவதற்குப் பதிலாக நல்லொழுக்கத்திற்கு மாணவர்களை வழிப்படுத்தினால் ஒரு நல்லாசிரியரால் வகுப்பறை கற்றல் கற்பித்தலை முகாமை செய்ய முடியும் என்பது உறுதி.

**" தரமான கல்விக்கு தரமான ஆசிரியர் "**

திருமதி. சகுந்தலா ஜெயகுமார்
ஆசிரியர்
தி/தி/பெருந்தெரு விக்நேஸ்வரா மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துவழிபாட்டில் காணப்படும் மருத்துவச்சிந்தனைகள்

நோயைஅறிதலும், நோய் முதலை அறிதலும் நோயைத்தணித்தலும் நீக்கலும் தடுத்தலும் அதுபற்றி ஆய்தலும் மருத்துவத்தின் பாற்படும். இந்துக்களின் மருத்துவம் காலம் காலமாக கட்டியெழுப்பப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட துறையாகும். இந்துக்களின் மருத்துவக்கலை வேதகாலத்தில் இருந்து ஆரம்பமாகிறது. இருக்கு வேதத்தில் "ஓவுதிசூக்தம்"–வாதம் பித்தம் கபம் ஆகிய மூன்றையும் "திரிதாது"எனக் குறிப்பிடுகிறது. சுக்கிலயசுர் வேதத்தில் குஷ்டம், இதய நோய், காச நோய் சித்தசுவாதீனம் போன்ற நோய்கள் பற்றியும் தீர்க்கும் முறைபற்றியும் கூறப்படுகிறது. அதர்வணவேதத்தில் மருத்துவசிந்தனைகள் அதிகமாகவுள்ளன,உ தாரணமாக பேசஜானிசூக்தம், ஆயுஷ்ஜானிசூக்தம் என்பனவாகும். அதர்வனவேதத்தில் சூரியனின் அகஞ்சிவப்புக் கதிர்க்ளுக்கு மஞ்சட் காமாலை நோயைகுணப்படுத்தும் சக்திஉண்டு என்பது பற்றியும், நோய்க் கிருமிகள் பற்றியும் குருதிச் சுற்றோட்டம், குஷ்ட ரோகம், விஷ முறிவு என்பதுபற்றியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இதிகாசங்களில், வான்மீகியின் இராமாயணத்தில் சஞ்சீவிமலையில் இருந்த மூலிகைகளின் வகைகள் இவை குணப்படுத்தும் நோய்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க நூல்களில் பதிற்றுப்பத்து, பாலைக்கலி என்பவற்றில் மருத்துவனின் இயல்பு, அறுவைசிகிச்சைமுறை என்பன கூறப்பட்டுள்ளன. சங்கமருவியகாலத்தில் திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்ச மூலம் முதலியஅரியமருத்துவம் பற்றியும் திருக்குறளில் பொருட்பால் இரண்டாம் பகுதி 95 ஆம் அதிகாரத்தில் "மருந்து" எனப் பெயரிடப்பட்டுள்ளது. அதில் மருத்துவவிளக்கம், நோயைக் கண்டறியும் முறையும் குறிப்பிடப்பட்டுள்ளது. பல்லவர் காலத்தில் அரசர்கள் மருத்துவர்களக்கு மானியங்களாகவழங்கிய நிலம் "மருத்துவப்பேறு" எனக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் மருத்துவ மூலிகை பயிரிடுவோர் பற்றியும் வெப்பு நோய் தீர்த்தமை, விழமுறிவுசெய்தமை போன்ற அற்புதங்களை செய்த சமயகுரவர்கள் பற்றியும் குறிப்பிடுகின்றது. சோழர் காலத்தில் மன்னர்கள் மருத்துவர்களை பேணியதுடன் மருத்துவமனைகளும் அமைத்து மானியங்களும் வழங்கியுள்ளனர். சோழர்காலப் பேரிலக்கியங்களில் அதாவதுசிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய நூல்களில் மருத்துவம் பற்றி கூறப்பட்டுள்ளது.

அத்துடன் வேர்களையும் பச்சிலைகளையும் பயன்படுத்தும் தமிழர்களுக்கே உரியசித்தமருத்துவம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. விஜயநகரநாயக்கர் காலத்தில. இந்துமருத்துவப் பாரம்பரியம் தனித்துவமானவளர்ச்சியைப் பெற்றது. இக்காலத்தில் ஆதீனங்கள் ஊடாகமருத்துவசேவைகள் பரப்பப்பட்டன. 18ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் சந்திரவைத்தியமுறையை இந்தியசந்திரவைத்தியரிடம் விரும்பிகற்றுள்ளனர்.

இந்துவழிபாட்டுமுறைகளில் காணப்படும் மருத்துவசிந்தனைகள் அதிகமுண்டு. பிள்ளையார் வழிபாட்டில் தோப்புக்கரணம் போடுதல். நெற்றியில் குட்டிக் கும்பிடுதல் என்பன யோசாசனமருத்துவம் என்பவற்றுடன் குட்டிக் கும்பிடுவதால் நரம்புமையங்கள் தூண்டப்பட்டு நினைவாற்றல் அதிகரிக்கும். தோப்புக்கரணம், அட்டாங்க, பஞ்சாங்கவழிபாடு, தலயாத்திரை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஊர்வலம் செய்தல், தெய்வம் வீற்றிருக்கும் மலைகளுக்குஏறிச் செல்லல், என்பவற்றால் ஒருவரின் நாரி, இடுப்பு, முழங்கால் தசைகள் பலமடைகின்றன. அத்துடன் இரத்தசுரப்பிக்களின் அடைப்புக்கள் நீக்கப்பட்டுகுருதிச்சுற்றோட்டம் ஒழுங்கமைப்படுகிறது. ேலும் நீரிழிவுநோய், வாத நோய் குணமாகும் வாய்ப்பும் உள்ளது.

இந்துவழிபாட்டில் பயன்படுத்தும் அருகு, துளசி, வில்வம் போன்ற பத்திரங்கள் மருத்துவகுணங்களைக் கொண்டுள்ளன. யோகாசனமுறைகள், பிரணாயாமம், சூரியநமஸ்காரம், விரதநியமங்கள் என்பனஉடல் நலம் காக்கும் செயற்பாடுகளாகும். விபூதிஅணிதல் சைவநெறி முறையாகும். அதனைகுளித்தபின் அணிவதால் உடலில் உள்ள ஈரத்தன்மையை உலர்த்தப்படுகிறது. விபூதியை உடலில் 16 இடங்களில் தரிக்கவேண்டும் எனசைவம் வலியுறுத்துகிறது. இந்த 16 இடங்களும் இன்றுள்ள அக்குபங்சர் வைத்தியமுறையில் உடலில் இனங்காணப்பட்ட இடங்களாகக் கூறப்படுவதும் இந்துக்களின் புராதன மருத்துவ அறிவிற்கு தக்கசான்றாகும்.

இந்துக்களே! இறைவழிபாட்டை தவறாது செய்யுங்கள்.

உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக்குங்கள்.

ஆக்கம்

திருமதி J.P.திருமகள்

இந்து நாகரிக ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவழிபாட்டின் பயன்கள்

திருவழிபாட்டில் நாம் இறைவனைமாட்சிப் படுத்துகின்றோம். அதனால் மீட்பையும் பெற்றுக்கொள்கின்றோம். திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் அதாவது திருப்பலியிலும், அருட்சாதனங்களிலும் நாம் அடிக்கடிபங்குகொண்டுள்ளோம். அதனால் எமக்குஎன்ன பயன்? என்றுகேட்டால் சிறுவர், சிறுமியர் மட்டுமல்ல பெரியவர்களும் கூட பதில் கூற முடியாமல் மிகவும் சிரமப்படுகின்றனர்.

நம் மக்களில் பலர் "நமதுதிருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் வெறும் சடங்குகளாக உள்ளன. அவை வெற்றுச் சடங்குகளாக மாறிவிட்டன. நம் வாழ்வைத் தொடாத அன்றாட சம்பிரதாயங்களாகத் தோற்றம் அளிக்கின்றன."என்று குறைபட்டுக் கொள்கின்றனர். இதற்கு முக்கிய காரணம் நமது திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் எம்மைத் தொடுவதில்லை, ஒரு நல்ல இறையனுபவமாய் இருப்பதில்லை, நம் அன்றாடவாழ்வில் பிறரன்பு, தாழ்ச்சி, விட்டுக்கொடுத்தல், மன்னிப்பு, பகிர்வு, தாராளகுணம் போன்றநற்பண்புகள் மிளிர்வதில்லை என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

இன்றைய சூழ்நிலையில் பெரும்பாலானமக்கள் திருவழிபாட்டின் இயல்பையும், சிறப்பையும், அதன் முக்கியத்துவத்தையும் அதில் பொருளுள்ளவகையில் பங்கேற்கும் முறைகளையும் அறியாமல் இருப்பதால் அன்றாடவாழ்வில் எந்தமாற்றத்தையும் காணமுடிவதில்லை. திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் கிறிஸ்து உடனிருப்பதால் அங்குவழிபடவரும் மனிதனை அவர் சந்திக்கின்றார். அங்கு ஒரு "இறை–மனித"சந்திப்புநிகழ்கின்றது. தன்னைப் படைத்து, பாதுகாத்து, பராமரிக்கும் இறைவனைஅவன் அங்குசந்திக்கின்றான். இவ்வாறுஒவ்வொருதிருவழிபாட்டுக் கொண்டாட்டத்தின் போதும் அதுதிருப்பலியாய் இருந்தாலும் சரி அல்லது மற்ற அருள சாதனங்களில் ஏதுவாய் இருந்தாலும் சரி மனிதன் கடவுளை அங்கு சந்திக்கின்றான்.

எனவே திருவழிபாட்டுச் செயல்களில் கிறிஸ்து எப்போதும் உடனிருக்கின்றார் என்பதை உணர்ந்துகிறிஸ்து வழியாக அவரோடு ஒன்றித்து தந்தையாம் இறைவனை வழிபட திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் மிகவும் இன்றியமையாதவை ஆகின்றன. இதனால் கிறிஸ்து வழியாகத் தந்தையாம் இறைவனை அடைவதும், அவரோடு அன்புறவில் நிலைப்பதும் கிறிஸ்தவ வாழ்வு ஆகும்.

திருவழிபாட்டு நிகழ்ச்சிகளில் இறைமக்கள் மகிழ்ச்சியுடனும், நன்றியுடனும் கலந்துகொள்வது அவசியம் ஏனெனில் "தூய்மை மிகு நற்கருணைக் கொண்டாட்டத்தைத் தனது அடிப்படையாகவும். மையமாகவும் கொண்டிராத எந்தக் கிறிஸ்தவச் சமூகமும் வளர்ச்சி பெறமுடியாது. ஏனெனில் சமூக உணர்வை உருவாக்கும் எல்லாப் பயிற்சியும் இதிலிருந்துதான் தொடங்கவேண்டும்." என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் மிகத் தெளிவாகக் கூறுகின்றது.

சுருங்கக் கூறின் திருவழிபாட்டைப் பயன்படுத்திக் கொள்வதில் நாம் அக்கறையும் அதைச் சிறப்புறக் கொண்டாடுவதில் ஆர்வமும் கொள்ளவேண்டும்.

ஆக்கம்

திருமதி.சுபாஜினி மகேஸ்வரன்

(கத்தோலிக்கத் திருமறை ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் வெற்றி உன்னிடமே.

எதற்கும் வியக்காதே
வியப்பு உன்னை நிறுத்தும் வேகத்தடை
மிகப்பெரிய சாதனைகள் நிகழ்த்தப்படுவது
சிறு சிறு முயற்சிகளால் தான்!

பெரியதாக யோசி... சிறியதாக தொடங்கு
ஒரே நாளில் யாராலும் வளர்ந்து விட முடியாது.

ஆல விருட்சத்தின் விதையை சுமந்து செல்வது
சிட்டுக்குருவியின் சிறு சொண்டு தான்...!

உள்ள உறுதி கொள்
மனத்தூய்மை பூண்
நீள் துயில் தவிர்
விடாமுயற்சி தொடர்
காத்திரு
உனக்கான வெற்றி உன்னிடமே வந்து சேரும்...!

கவலையை நினைத்து கண்ணீர் சிந்துவதை விட
இலட்சியத்தை நினைத்து இரத்தம் சிந்துவதே மேல்!
உன் இலட்சியக் கொள்கையில் உறுதியாய் இரு,
உலகாளும் எண்ணமானாலும்
துவளாது தொடு!

நேற்று வரை திசை மாறி வீசிய காற்று
நாளை உன்பக்கம் வீசக்கூடும்.

திகதிகள் மட்டும் கிழிக்கும் எவரும்
அறிவதில்லை
அடுத்த நொடியில் அவர்களுக்கான
ஆச்சரிய வெற்றிகளை...!

உன் பிழையை நீயெ ஏற்றுக் கொள்ளும் அதுவே
உன் வளர் முதிர்ச்சியின் அளவுகாட்டி...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடங்கலை விஞ்சு
நேரத்தை மிஞ்சு
நேர்மைக்கு அஞ்சு
தப்பென்றால் கெஞ்சு
கடமையைக் கொஞ்சு
பொறாமை அக்கினிக் குஞ்சு
இனி தடைகள் யாவும்
உனக்குக் பஞ்சு...!

நீ உண்மையாய் உள்ளவரை
விமர்சனங்கள், வினாக்களுக்கு
விருப்போடு உன் விடையளி
உறுதியாய் ஓடு
உன் வெற்றியைத் தேடு

இறைவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல
உன்னைப் போல் சாதிக்கத் துடிக்கும்
முயற்சியாளனை மட்டுமே

நீ யார் தெரியுமா?
பிறக்கும் போதே கோடிப் பேரோடு
கருவிலே முந்திக் கொண்டவன்

இன்று அயராது போராடு
நாளை உன் வெற்றியை கொண்டாடு...!
"உன் வெற்றி உன்னிடமே...!"
கவி கேட்ட அனைவருக்கும்
என் சிரம் தாழ்ந்த நன்றிகள்

ஆக்கம்
திருமதி. D. சுணில்
ஆரம்பக்கல்வி ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழும் கணிதமும்

காலத்தால் முற்பட்டது எமது செம்மொழியாம் தமிழ் மொழி. தமிழ் மொழியில் மொழி மட்டுமல்லாது வாழ்வியல், ஜோதிடம், அறிவியல், கலை, தொழிநுட்பம் என பல்வேறு துறை சார்ந்த நூல்கள் எழுதப்பட்டு இருக்கின்றன. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் ஆராயப்பட்டுள்ளன. கணிதம் சம்மந்தமாக "கணக்கதிகாரம்" என்பதில் மனித வாழ்வியலுடன் தொடர்புபட்ட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

அவற்றுள் பலாப்பழம் ஒன்றினுள் காணப்படும் பலாச்சுளைகளின் எண்ணிக்கை, பூசணிக்காய் ஒன்றினுள் காணப்படும் பூசணி விதையின் எண்ணிக்கை போன்றனற்றை தலைப்பில் கூறி பாடலடிகளாக கணக்கதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. எனினும் இதில் எந்தளவு உண்மைத்தன்மை உள்ளது என்பதைக் கண்டறிவது கடினமாகவே உள்ளது.

எனினும் வட்டம் ஒன்றின் சுற்றளவு காணும் முறையை 'கானர்' எனும் தமிழ்ப் புலவர் பாடல் மூலம் இவ்வாறு கூறுகிறார்.

"விட்டமதனை விரைவா யிரட்டித்து
மட்டு நான்ம வதினில் மாறியே - எட்டதினில்
ஏற்றியே செப்பிடி வேறும் வட்டத்தளவும்
தோற்றுமெனப் பூங் கொடி நீ சொல்."

சொல் விளக்கம் :

இரட்டித்து - 2 ஆல் பெருக்கி
நான்மா - 1/5

நிறுவல் :

விட்டமதனை விரைவாய் இரட்டித்து = d x 2
மட்டு நான்மா அதனில் மாறி = 2d x 1/5
எட்டு அதனில் ஏற்றி = 2d x 1/5 x 8
ஏற்றும் விட்டத்தளவு (சுற்றளவு)

பைதகரஸ் தேற்றமென்பது கணிதத்தில் மிகவும் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். இத்தேற்றத்தை எழுதுவதற்கு 1500 ஆண்டுகளுக்கு முன்னதாகவே "கோதையளார்" எனும் புலவர் முக்கோணவியல் தத்துவத்தை ஒரு பாடல் மூலம் விளக்கியுள்ளார்.

"ஓடிய நீளம் தன்னை ஓரெட்டு கூறாக்கி
கூறதில் ஒன்றைத் தள்ளி
குன்றத்தில் பாதி சேர்த்தால்
நீறிய கர்ணந் தானே"

பொருள் : முக்கோண கர்ணம், கண்டுபிடித்த (செம்பக்கம்)
நீளத்தை எட்டாய் வகுத்துக் கிடைப்பதை
நீளத்தில் கழித்து செங்குத்து உயரத்தில்
பாதியை இற்றோடு சேர்த்ததாக கர்ணம் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவல் : நீளம் - 4
உயரம் - 3
எட்டில் ஒரு பாகம் நீளம்/8 = 0.5
அதனை நீளத்தில் கழித்தால் 4 - 0.5 = 3.5
உயரத்தில் பாதி சேர்க்க (3/2 = 1.5)
= 3.5 + 1.5
கர்ணம் = 5
(செம்பக்கம்)

இவ்வாறு எமது தமிழில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கணிதத்தின் பல்வேறு தேற்றங்கள் சிறுவர்கள் பாடலடிகளில் உள்ளன. எனினும் நாம் கிரேககத்தில் இருந்து வந்த சூத்திரங்களையும் நிறுவல்களையமே தற்போது பயன்படுத்திக் கொண்டு இருக்கின்றோம். எனினும் எமது தமிழ் மொழி ஆண்டாண்டு காலம் பழைமையான பல்வேறு துறை சார்ந்த தொழிநுட்பம் சார்ந்த நூல்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை தமிழராகிய நாம் இறுமாப்புடன் கூறிக்கொள்ள முடியும்.

திருமதி. விஜயந்தி தவராசா
ஆசிரியர் - கணிதம்
Dip in Edu

## கணிதம்

எனக்கு கணிதம் கற்க பிடிக்கும்
அது கற்பனை உலகின் தொடக்கம்
புதிய புதிய நுணுக்கங்கள் அதை
கற்றால் மனம் பறக்கும்
புதுப்புது கேள்விகள் சரம் தொடுக்கும்
புரிந்து படித்தால் பதில் கிடைக்கும்
பல பல பயிற்சிகள் படையெடுக்கும்
துணிந்து நின்றால் பயன் கிடைக்கும்
அறிவியல் உலகை செழுமையாக்கிய
அற்புத மாமலை கணிதம்
சிந்திக்க இயலா சிக்கல்களுக்கும்
தீர்வளிப்பது கணிதம்
எட்டு கால் முதல் எட்டு கோள் வரை
எங்கும் இருப்பது கணிதம்
கணிதம் கற்றால் கவலையில்லை
கணிதம் போல் வளம் இல்லை
ஆதிகால மனிதனின் அழகிய தேடல் கணிதம்
அன்றும் இன்றும் என்றும் அடிப்படை தேவை கணிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Change The World

Education is the tool for life
It is the key for success
It is your everlasting property
And the pillaer of your personality

Education provides Wisdom and Ethics
To be good citizens
No matter the person is poor or rich
It should be a privilege to everyone

Learn! Learn! Learn!
No end for Learning
Create your wonderful ideas
And change the world.

Miss.Kumararasa sathusini
Gr: 11B
T/T Peruntheru V.M.V

# Running Out Of Time

Life is Complicated
There will always be problems
Stress is s distraction
From what's really important ,
Don't wait for things to get better ,
Count your blessings ,
Learn to be happy right now
Other wise you might run out of time .

By : N. Kishayini
Grade : 11 B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏணி - சிறுகதை

நான் கற்பிக்கும் பாடசாலை நகர்ப்புறத்தில் அமைந்துள்ளது. இங்கு நான் பிரபல ஆசிரியராக நான் கடமையாற்றுகிறேன். நான் எனது பாடசாலையையும், மாணவர்களையும் மிகவும் நேசிக்கின்றேன். அப்போது பத்தாம் வகுப்பிற்கு வகுப்பாசிரியராக இருந்தேன். எனது வகுப்பு மாணவர்களுடன் நான் மிகவும் நட்புடன் பழகுவதே வழக்கம். என் மாணவர்களும் என் மீது அன்பாக இருந்தார்கள். அவர்களுக்கு பிடித்த ஆசிரியராக நான் இருந்தேன். அன்று திங்கட்கிழமை. வாரத்தின் முதல் நாள்.

முதலாம் பாடவேளை மாணவர்களுக்கு நான் தமிழ் பாடத்தை கற்பித்துக்கொண்டிருக்கும் வேளையில் "ஐயா உள்ளே வரலாமா?" என்று கேட்டவாறு உள்ளே நுழைந்தான் சேகர். அவன் அருகில் மிகவும் மெலிந்த தோற்றம் கொண்ட நெடு நெடுவென பனைமரம் போல் வளர்ந்திருந்த ஒரு மாணவன் நின்றுகொண்டிருந்தான். சேகர், "சேர் இவர் உங்கட வகுப்பிற்கு புதுசா வந்திருக்கிறார். மேடம் இங்க விட்டுட்டு வர சொன்னாங்க" என்றான். நானும் மாணவனை உள்ளே வர அனுமதித்தேன். அவனும் உள்ளே வந்து அமர்ந்தான். அப்போது நான் அவனை வகுப்பிற்கு தன்னை அறிமுகப்படுத்துமாறு கூற, அவனும் தான் கண்ணன் என்றும் தான் தந்தையின் இடமாற்றம் காரணமாகவே இங்கு வந்ததாகவும் கூறி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். அவனை அமரச் சொல்லிவிட்டு மீண்டும் பாடம் நடத்தத் தொடங்கினேன்.

நான் பாடம் கற்பிக்கும் நேரங்களில் இடையிடையே அவனது முகத்தை கவனித்தேன். அவன் பாடத்தில் சிறிதும் கவனமில்லாமல் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான். அது எனக்கு மிகவும் கோபத்தை ஏற்படுத்தியது. எனினும் அன்று அவனது முதல் நாள் என்ற காரணத்தினால் அமைதியாக இருந்தேன். தொடர்ந்து வந்த நாட்களிலும் அவன் பாடத்தில் கவனம் இன்றியே இருந்தான். வீட்டுவேலையும் செய்வதாகத் தெரியவில்லை. நாட்கள் நகர்ந்தன.

அன்று மாணவர்களை எழுப்பி பாடம் தொடர்பாக வினாக்களை வினவினேன். மாணவர்களும் திறமையாக பதிலளித்தார்கள். அது போன்று அவனிடம் வினவிய போது அவன் தலை குனிந்த படி பதிலேதும் சொல்லாமல் நின்று கொண்டிருந்தான். எனக்கு மிகவும் கோபம் வந்தது. நானும் அவனை கோபமாக "நேற்றுத் தானே இப்பாடத்தைப் படிப்பித்தேன்" என்று கூறி அவனைத் திட்டினேன். இவன் அமைதியாக நின்று கொண்டிருந்தான்

அவனுடைய மனதில் இருந்த சோகமும், குழப்பமும் முகத்தில் பிரதிபலித்தது. அன்று இடைவேளையின் போது அவனை அழைத்து "ஏன் படிப்பில் கவனமின்றி இருக்கிறாய்?" என விசாரித்தேன். அவனது அம்மா சிறிது காலத்தின் முன் இறந்ததாகவும், தந்தை வேலை நிமித்தம் தன்னை தனிமையில் விட்டுச் செல்வதாகவும், இதனால் தனக்குப் படிப்பதில் நாட்டமில்லாமல் போனதாகவும் அவன் கூறினான். இது எனது மனதிலும் சோகத்தை ஏற்படுத்தியது.

"இதெல்லாம் நீ தலையில் ஏற்றாமல் வகுப்பில் உள்ள எல்லோருடனும் சேர்ந்து பழகி வீட்டு வேலைகளை தினமும் செய்து படிப்பிலும் உரிய வேலைகளிலும் கவனத்தை செலுத்தினால் தான் வாழ்வில் பட்டங்களைப் பெற்று சிறந்த தொழிலினைப் பெற முடியும்." என்றேன். இவ்வாறு எனது வார்த்தைகளைக் கேட்டதன் மூலம் அவனுக்கு ஒரு தெளிவு பிறந்தது. அன்றிலிருந்து என்னாலான உதவிகளையும் பயிற்சிகளையும் அவனுக்கு வழங்கினேன். அவன் பரீட்சையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைப் போட்டிகளிலும் பரிசுகளைப் பெற்றேன் என என்னிடம் கூறி மிகவும் மகிழ்வுற்றான்.

அவன் என்னிடம் படித்து நல்ல பெறுபேற்றையும் பெற்று பல்கலைக்கழகம் சென்ற பின்னும் அவனுக்கு உறுதுணையாக இருந்தேன். இன்று அவன் பெரிய நிலையில் இருந்தாலும் அவன் என்னை மறக்காது நான் அவனுக்காக செய்தவற்றை அவனே நினைவூட்டுவான். அவற்றை நினைத்துப் பார்க்க நெஞ்சம் பெருமிதமடைகிறது. திடீரென பழைய நினைவுகளிலிருந்து மனைவியின் குரல் மீட்டெடுத்தது. மனைவி தேநீர்க் கோப்பையுடன் அருகில் நின்றுகொண்டிருந்தாள். "கையில் பேப்பர வச்சுக்கொண்டு வாசிக்காம என்ன யோசிக்கிறிங்க" என்றாள். நான் பத்திரிகையில் வந்திருந்த கண்ணனின் படத்தை அவளிடம் காட்டி "இவன் என்னட்ட படிச்ச பிள்ள இன்டைக்கு பெரிய இடத்தில இருக்கிறான். ஒரு போட்டியில என்ர ஆசிரியர் தான் என்ர நல்ல நிலமைக்கு காரணம் என்று என்ர பெயர் சொல்லியிருக்கிறான்" என்று அந்த செய்தியை காட்டினேன் அதைப் பார்த்துவிட்டு அவளும் ஆனந்தமடைந்தாள்.

ஆக்கம் - ர.லுக்ஷ்மியா
தி/பெருந்தெரு விக்னேஸ்வர ம.வி
தரம் - 11 B

## கெட்டிக்காரன் ஜோக்ஸ்

**விழிக்கும் நேரம்**

"இரவில் தூங்கிய பின் நீ எப்பொழுது விழிப்பாய்?"
"சூரியன் முதல் கதிர்கள் யன்னல் வழியே என் மீது படும் போது விழித்துக்கொள்வேன்"
"விடியற்காலையில் விழிக்கும் நல்ல பழக்கம் உன்னிடம் உள்ளது"
"நான் தங்கியிருக்கும் அறை மேற்கே பார்த்த படி உள்ளது"

**நன்றி தெரிவிக்கும் வழி**

"டாக்டர் என் உடம்பு இப்ப ரொம்ப நல்லாயிடுச்சி என் நன்றியை எப்படி தெரிவிக்கிறதென்று தெரியல்ல"
"நிறைவழி இருக்குது பணமாகத் தெரியப்படுத்தலாம் செக்காகத் தெரியப்படுத்தலாம்"

**படிக்காத முறை**

"நான் கொட்டலுக்கு நம்ம மணியோடச் சாப்பிடப் போக மாட்டேன்"
ஏன்?
"கொட்டலில் விலைப்பட்டியலைப் படிக்கும் போது அதில் வலது புறத்திலிருந்து இடது புறமாகப் படிக்கிறான்"

**முன்யோசனை**

"இன்று விடுமுறை சுவரில் ஆணி அடித்து எப்படியாவது படம் மாட்டி விட வேண்டும்" என்றான் கணவன்

அதற்கு மனைவி "சுத்தியல் சமையலறை மூலையில் உள்ளது ஆணி மேசை ராயரில் உள்ளது. மருந்து பாண்டேஜ் எல்லாம் அலுமாரி மேல் தட்டில் உள்ளது".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Child Labour

Child labour is a term you might have heard about in news or movies. It is like expecting kids to perform responsibilities like working and fending for themselves. It refers to a crime where children are forced to work from a very early age. The average age for a child to be appropriate to work is considered fifteen years and more. There are certain policies which have put restrictions and limitations on children working. Children falling below this age limit won't be allowed to indulge in any type of work forcefully. Why is that so? Because child labour takes away the kids opportunity of having a normal childhood, a proper education, and physical and mental.well being in some countries. It is illegal but still it's a far way from being completely eradieated.Child labour happens due to a number of reasons. While some are specific in particular areas and regions. When we look at what is causing child labour, we will be able to fight it better. Firstly, it happens in countries that have poverty and unemployement. When the families don't have enough earning, they put the children of the family to work so they can have enough money to survive. Similarly, if the adults of the family are unemployed. the younger ones have to work in their place moreover. when people do not have access to the education they will ultimately put their children to work. the uneducated only care about a short term result which is why they put children to work so they can survive their present. Futhermore, themoney- saving attitude of various industries is a major cause of child labour. they hire children because they pay them lesser for the same work done by adults. As children they work more than adults and also at fewer wages they prefer children. They can easily influence and manipulate them. They only see their profit and that is why they engage children in factories. If we wish to eradicate child labour. we need to formulate some very effective solutions which will save our childreb. It will also enhance the future of any country dealing with these social issues. In short, the government and people must come together. Employment opportunities must be given to people in abundance so they their kids to work. The children are the future of our country; we cannot expect them to maintain the economic conditions of their families instead of having a normal childhood.

By : S. Sathana
GR : 07
2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிர்கள்

### மாற்றமே இல்லாத பேச்சு

வழி போக்கன் ஒருவன், எதிரே வந்த ஒருவரிடம் "உம் வீட்டில் குதிரைகள் உள்ளனவா?" என்று கேட்டான்

'உள்ளன என்றார். அவர்

'எத்தனை குதிரைகள் உள்ளன என்றார்?

"என் வீட்டில் உள்ள விலங்குகளில் இரண்டைத் தவிர எல்லாமே குதிரைகள்" என்றார் அவர்

எண்ணிக்கையைத் தெளிவாகச் சொல்லாமல் குழப்பமாகச் சொல்கிறாரே. மற்ற விலங்குகளின் எண்ணிக்கையைக் கேட்போம். குதிரையின் எண்ணிக்கையைத் தெரிந்து கொள்ளலாம் என்று நினைத்தான் அவன்.

"உம் வீட்டில் எத்தனை மாடுகள் உள்ளன?"என்று கேட்டான்.

"என் வீட்டில் உள்ள விலங்குகளில் இரண்டைத் தவிர எல்லாமே மாடுகள்" என்றார் அவர்

மீண்டும் அதே பதிலைச் சொல்லிக் குழப்புகிறாரே. ஆடுகளின் எண்ணிக்கையைக் கேட்போம். அதை வைத்துக் குதிரை, மாடுகளின் எண்ணிக்கையைத் தெரிந்து கொள்ளலாம் என்று நினைத்தான் அவன்.

"உம் வீட்டில் எத்தனை ஆடுகள் உள்ளன?"என்று கேட்டான்.

இப்போது அவர் "என் வீட்டில் உள்ள விலங்குகளில் இரண்டைதவிர எல்லாமே ஆடுகள்தான்" என்றார்.

திரும்ப திரும்ப ஒரே பதிலைச் சொல்கிறாரே என்று குழப்பம் அடைந்தான் அவன்.

எத்தனை குதிரைகள்? எத்தனை மாடுகள்? எத்தனை ஆடுகள் அவரிடம் இருந்தன. நீங்களாவது சரியான விடை சொல்லி அவன் குழப்பத்தைத் தெளிவியுங்கள்.

**விடை**

**உழவனிடம் ஒரு குதிரை, ஒரு மாடு, ஒரு ஆடு இருந்தன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடை பிடிப்பது யார்?

சிறிய குடும்பம் அது. அந்த குடும்பத்தில் அப்பா, அம்மா, மகன், மகள் இருந்தார்கள்.

மகனுக்கும் மகளுக்கும் திருமணம் ஆனது. மருமகனும் மருமகளும் அவர்களுடன் ஒரே வீட்டில் வாழ்ந்து வந்தார்கள்.

கடுமையாக மழை பெய்து கொண்டிருந்தது. அவர்கள் ஆறு பேரும் திருமணம் ஒன்றிற்குச் செல்ல வேண்டி இருந்தது. அந்த வீட்டில் மூன்று குடைகளே இருந்தன.

தந்தையும் மகனும் ஒரு குடையை எடுத்துக் கொண்டார்கள்.

தாயும் மகளும் ஒரு குடையை எடுத்துக்கொண்டார்கள்.

இரண்டு மைத்துனர்களும் ஒரு குடையை எடுத்துக்கொண்டார்கள்.

அவர்கள் ஒவ்வொருவரும் "நான் தான் குடையைப்பிடித்து வருவேன். அடுத்தவர் உடன் வர வேண்டும்" என்றார்கள்.

யாரும் இன்னொருவருக்கு விட்டுத்தர தயாராக இல்லை.

அவர்களில் யார் குடை பிடிக்க வேண்டும்? யார் உடன் வர வேண்டும்.

**விடை**

**உயமானவர் குடை பிடிக்க வேண்டும்**
**குள்ளமானவர்கள் உடன் வர வேண்டும்.**

நா. மினுஷிகா
தரம் - 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புக்களும் கோட்பாடுகளும்

01) கலிலியோ கலிலி -இத்தாலி
நவீன விஞ்ஞானத்தின் தந்தை
தொலைக்காட்டியை கண்டறிந்தவர்
ஒளிக்கு வேகம் உண்டு என்பதை முதலில் நிறுவினார்
மருத்துவ உலகிற்குரிய உஸ்னமானியை கண்டுபிடித்தார்
நீர்நிலைத் தராசை கண்டுபிடித்தார்

02) ஐசாக் நியூட்டன்
நுண்துகள் கொள்கை -ஒளி மிகவும் நுண்ணியதுகள்களினால் ஆனது
சூரிய ஒளியில் 7 நிறங்கள் உண்டு என்பதை காட்டினார்
தொலைக்காட்டியை உருவாக்கினார்

03) லூயி பாஸ்டர் - போலந்து
பாஸ்டர் முறை - நொதித்தல் சார்ந்த ஆய்வில் ஈடுபட்டவர்
பொருட்களை கெடா வண்ணம் வைத்திருப்பதற்கான வழிமுறைகளை கண்டுபிடித்தவர் இதுவே பாஸ்ரர் முறை எனப்படும்
விசர் நாய் கடியால் பாதிக்கப்பட்டவர்களை குணப்படுத்த கூடிய விசர் நாய் கடி மருந்தினை கண்டுபிடித்தவர்

04) கெப்லர்
நீள்வளைய விதி - -கோள்கள் நீள் வட்டப்பாதையில் சுற்றி வருகின்றன
பரப்பு விதி -- கோள்கள் சூரியனை சுற்றிவரும் போது ஓட்டவேகம் அதிகரித்து செல்கின்றது
இசைவு விதி - -கோள் சூரியனை சுற்றிவர எடுக்கும் நேரம் அதன் தூரத்தில் தங்கியுள்ளது

05) இலாவோசியர் -பிரான்ஸ்
ஒட்சிசனே தகனத்துக்கு உகந்தது எனக் கூறியவர்.
திணிவு காப்பு கொள்கை - சடப் பொருட்களை அழிக்க முடியாது அமைப்பு வடிவத்தில் மாத்திரமே மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.
வைரமும் நிலக்கரியும் ஒரே இரசாயன அமைப்பு உடையது என்பதை நிருபித்தார்.

06) மேரி கியூரி
ரேடியம் எனும் உலோகத்தை கண்டுபிடித்தவர்
இரசாயன ஆய்வுக்காக நோபல் பரிசு இருதடவை பெற்ற முதல் பெண்மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07) அலெக்சாண்டர் பிளமிங்
பென்சிலின் மருந்தினை கண்டுபிடித்தவர்
மனிதனின் கண்ணீரில் கிருமிகளை அழிக்க வல்ல ''லைசோம்''எனும் பதார்த்தம் உண்டென கண்டுபிடித்தார்

08) ஆக்கிமிடிஸ் - கிரேக்கம்
நெம்புகோல் பொறித் தொகுதியினை கண்டு பிடித்தவர்
ஒரு பொருள் நீரில் மூழ்கும் போது அதன் நிறை குறைவடைகின்றது இக் குறைவு அதனால் இடப்பெயர்ச்சி செய்யப்பட்ட நீரின் நிறைக்கு சமனாகும் பையின் பெறுமானத்தை மிகச் சரியாக நிர்ணயித்தார்.
நுண்கணித முறையினை சரியாக கையாண்டவர்.

09) இரதபோட்
அணுக்கொள்கையை வெளியிட்டவர்
அணுவின் கட்டமைப்பு ஞாயிற்றுத் தொகுதியின் கட்டமைப்பு சமன் என்றார்
அணுக்களில் அல்பாக்கதிர் பீற்றா கதிர் போன்றவற்றை கண்டுபிடித்தார்
இரசாயனவியல் ஆய்வுக்காக நோபல் பரிசு பெற்றார்

10) மைக்கல் பரடே
பொட்டாசியத்தினை முதன்முதலில் கண்டுபிடித்தவர்
காந்த சக்தியினை கொண்டு மின்சாரத்தினை உருவாக்கும் டைனமோவினை கண்டு பிடித்தார் தங்க முலாம் வெள்ளி முலாம் பூசும் முறையினை கண்டு பிடித்தவர்.

M. ஜக்ஷனன்
தரம் 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சபை (UNO)

1945ம் ஆண்டு 10ம் மாதம் 24ம் திகதி இவ் ஐக்கிய நாடுகள் சபை ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

**ஐக்கிய நாடுகள் சபையின் 6 பிரதான அமைப்புக்கள் .**

பொதுச்சபை
பாதுகாப்புச் சபை
பொருளாதார சமூகசபை
சர்வதேச நீதி மன்றம்
செயலாளர் நாயகத்தின் பணிமனை (செயலகம்)
நம்பிக்கை பொறுப்புச்சபை

**ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள நிரந்தர அங்கத்துவ நாடுகள்**

ஐக்கிய அமெரிக்கா
சீனா
பிரான்ஸ்
பிரித்தானியா
ரஷ்யா

**ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை பயன்படுத்தும் மொழிகள்**

ஆங்கிலம்
பிரெஞ்சு
சீனம்
அராபி
ரஷ்யன்
ஸ்பானிஷ்
இலங்கை

**ஐக்கிய நாடுகள் சபையில் 1955.12.14 உறுப்புரிமை பெற்றது**

வி.சாதனா
10A(2023)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுத் தகவல்கள்

உலகில் தோன்றிய முதல் விளையாட்டு -ஓட்டப்பந்தயம்

உலகின் மிகப் பழமையான விளையாட்டு -நீச்சல்

மனிதன் விளையாடிய முதல் விளையாட்டு -வில்வித்தை

இரவில் மட்டும் நடக்கும் பந்தயம் -நாய்பந்தயம்

மல்யுத்த சண்டையின் அதிகபட்ச நேரம் -12 நிமிடங்கள்

மூளையைப் புதுப்பிக்கும் ஆற்றலுடைய விளையாட்டுக்கள் -பட்மின்ரன், டெனிஸ்

இடக்கையால் விளையாட தடையுள்ள விளையாட்டு போலோ

கனவான்களின் விளையாட்டு என சிறப்பிக்கப்படும் விளையாட்டு -கிரிக்கட்

கிரேக்கர்களின் ஒலிம்பிக் விளையாட்டின் வீரக் கடவுள் -சீயஸ்

கராத்தே விளையாட்டின் தாயகம் -சீனா

குறைந்த வயதில் குத்துச்சண்டை பட்டம் வென்றவர் -மைக்டைசன்

இலங்கையில் விளையாட தடை செய்யப்பட்டுள்ள விளையாட்டு -போலோ

முப்பது செக்கன்களுக்குள் முடிவடையும் விளையாட்டு -சூமோ

பணக்கார விளையாட்டு என சிறப்பிக்கப்படுவது -கோல்.்.ப்

ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டு -காளைச் சண்டை

ஜெ.யதுர்சன்
தரம்-09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உள்ளம் கவர்ந்த அதிபர்

பெருந்தெரு விக்நேஸ்வரா தேடிப்பெற்ற தவப்புதல்வி எம் அதிபர் வத்ஸலா கிருபாகரன் அம்மணி என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த அதிபரின் தலைமையின் கீழ் நான் ஒரு மாணவத்தலைவியாக கல்வி கற்கும் பேறு கிடைத்தது பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன்.

எமது பாடசாலையில் அதிபருக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்வதைக்காட்டிலும் அதிக நேரம் பாடசாலையின் மேல் மாடி , கீழ் மாடி என நடந்து வகுப்பறைகளைப் பார்வையிடுவதும், மாணவர்களிற்கு கற்பிப்பதும் என் மனதைவிட்டு நீங்காது, ஆரம்பப்பிரிவு மாணவர்கள் முதல் சிரேஷ்ட பிரிவு மாணவர்கள் வரை தங்களது உள்ளக்கிடக்கைகளை மனந்திறந்து பேசுவதற்கு தோழி போன்றும் தாய் போன்றும் செயற்படுவதை ஒவ்வொரு மாணவரும் அனுபவித்து வருகின்றோம்.

எமது பாடசாலையின் 200 வது ஆண்டை நோக்கிய செயற்றிட்டங்களில் ஒன்றான பெண் மாணவர்களிற்கான புதிய சீருடையை அணிவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தி தந்துள்ளார். இவர் இதன் மூலம் எமது ஆளுமை மேலும் விருத்தியடைந்துள்ளதை உணர்கின்றோம் கம்பீர நடையும், எண்ணங்களில் வேகமும், நேர்கொண்ட பார்வையும், நல்ல வினைத்திறனும் பெற்றோரை வசீகரிக்கும் பேச்சாற்றலும் இதற்கு மேலாக நிறைந்த தாயன்பும் கொண்டவர் எம் அதிபர்.

அனைத்து ஆசிரியர்களும் எமது அதிபரின் கீழ் மிகவும் திறமையான முறையில் செயல்பட வழிவகுத்துள்ளார். இதனால் கல்வியும் ஒழுக்கமும் மேலோங்கிக் காணப்படுகிறது. கண்டிப்பும் அதேவேளை எம்மீது மிகுந்த கவனமும் கொண்ட எம் அதிபர் நீடூழி காலம் வாழ்ந்து இன்னும் பல உயர்வுகளை அடைய இந்த இளையவளின் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

சிரேஸ்ட மாணவ தலைவி
சிவரூபன் சரித்ரா
தரம் 12 கலைப்பிரிவு(2024)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமயமாக்கல்

தொலைத்தொடர்பு, போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், அரசியல், பண்பாடு, ஆகிய துறைகளின் முன்னேற்றங்களினால் உந்தப்பட்டு உலக சமூகங்களுக்கிடையேயான அதிகரிக்கும் தொடர்பையும் அதனால் ஏற்படுத்தப்பட்டு வரும் ஒருவரில் ஒருவர் தங்கிவாழ் நிலையையும் உலகமயமாதல் எனலாம். உலகமய சூழலில் ஒரு சமூகத்தின் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு நிலைமைகளும் நிகழ்வுகளும் மற்றைய சமூகங்களில் கூடிய விகித தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. உலகமயமாதல் வரலாற்றில் ஒரு தொடர் நிகழ்வுதான், ஆனால் இன்றைய சூழல் உலகமயமாதலைக் கோடிட்டுக் காட்டுகிறது.

உலகமயமாக்கல் என்பது சமூகம் மற்றும் அதன் தேவைகள் காரணமாக பல ஆண்டுகளாக வெடித்த ஒரு விளைவால் உலகம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட நிலையான பொருளாதார, சமூக, தொழில்நுட்ப, அரசியல் மற்றும் குறிப்பாக கலாசாரத் துறையிலிருந்து. நிச்சயமாக, இது ஒரு சாதகமாகத் தோன்றுகிறது, இதன் மூலம் அடையப்பட்ட சாதனைகள், வெவ்வேறு நாடுகளுக்கு இடையிலான சந்தைகளின் ஒன்றிணைவு மற்றும் எந்தவொரு தனிநபரின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் புவியியல் விரிவாக்கம் போன்றவை.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சியும், தகவல் தொடர்பில் ஏற்படுட்ள்ள அபரிதமான முன்னேற்றமும் உலகை சுருக்கிக்கொண்டுள்ள சூழலில், ஏகாதிபத்தியங்களின் பொருளாதார நலனுக்காக புகுத்தப்பட்ட உலகமயமாக்கல் எனும் கொள்கையால் அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாசாரங்களில் ஒற்றைத்தன்மை ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

.உலகமயமாக்கல் என்பது நன்கு நிறுவப்பட்ட நிகழ்வு. நீண்ட காலமாக, உலகளாவிய பொருளாதாரம் பெருகிய முறையில் பின்னிப்பிணைந்துள்ளது. இருப்பினும், உலகமயமாக்கல் செயல்முறை பல காரணிகளால் சமீபத்திய தசாப்தங்களில் தீவிரமடைந்துள்ளது. இந்த காரணிகள் பின்வருமாறு:

- போக்குவரத்து மேம்பாடு உலகளாவிய பயணத்தை எளிதாக்குகிறது,
- சிறந்த தொழில்நுட்பம் மற்றும் இணைய வசதிகள் தகவல் தொடர்பு வசதியை ஏற்படுத்தின
- உலகின் பல்வேறு பகுதிகளில் நுகர்வுகளின் வளர்ச்சி கட்டண தடைகளை குறைப்பதன் மூலம் உலகளாவிய வர்த்தகத்தை மேம்படுத்துதல்.
- உழைப்பின் அதிகரித்த மற்றும் மேம்பட்ட இயக்கம் WTO, GATT போன்ற உலகளாவிய வர்த்தக அமைப்புகளின் எழுச்சி,
- புதிய வர்த்தகத்திற்கான வாயில்களைத் திறந்துள்ளது.

உலகமயமாக்கல் நாடுகளுக்கு குறைந்த விலையில் இயற்கை வளங்கள் மற்றும் உழைப்பை அணுக அனுமதிக்கிறது. இதன் விளைவாக, சர்வதேச அளவில் சந்தைப்படுத்தக்கூடிய பொருட்களை குறைந்த செலவில் செய்ய முடிகிறது. பூகோளமயமாக்கல் பல்வேறு வழிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூகோளத்திற்கு பயனளிக்கிறது. உலகளாவிய போட்டியானது, பண்டங்கள் சேவை விலையை கட்டுக்குள் வைத்திருக்கும்போது படைப்பாற்றல் மற்றும் புதுமைகளை வளர்க்கிறது. புதிய சந்தைகளுக்கான அணுகல் மற்றும் தேர்வு செய்வதற்கான பல்வேறு தேர்வுகள் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் காரணமாக வளரும் நாடுகள் பொருளாதார வெற்றியை அடைவதற்கும், அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கும் சிறந்த வாய்ப்பு உள்ளது. பொது இலக்குகளில் ஒத்துழைக்க அரசாங்கங்கள் மிகவும் தயாராக உள்ளன, ஏனெனில் அவை போட்டித்திறன், தொடர்பு மற்றும் ஒருங்கிணைந்த மேம்பட்ட திறன் மற்றும் சவால்களைப் பற்றிய உலகளாவிய புரிதல் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. வளரும் நாடுகள் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் வரும் பல வளர்ந்து வரும் வலிகளை கடந்து செல்லாமல் சமீபத்திய தொழில்நுட்பத்தின் பலன்களை அறுவடை செய்யலாம்..

பூகோளமயமாக்கல் ஒரு நாட்டில் உள்ள மக்களுக்கு வேலைகளை வழங்கும் அதே வேளையில், அது மற்றொரு நாட்டிலிருந்து வேலைகளை நீக்கி, பலரை வேலையில்லாமல் ஆக்குகிறது. உலகளவில் நோய் பரவுவதற்கான அதிக நிகழ்தகவு உள்ளது, அத்துடன் பூர்வீகமற்ற சூழலில் அழிவை ஏற்படுத்தும் உயிரினங்களின் படையெடுப்பு பல்வேறு கலாசாரங்களைச் சேர்ந்த மக்கள் தொடர்பு கொள்ளும்போது கலாசார அடையாளத்தை இழப்பது முக்கிய கவலையாக உள்ளது உலகளாவிய சூழ்நிலையை எளிதாக்குகிறது. மந்தநிலையில் குறைந்தபட்ச சர்வதேச ஒழுங்குமுறை உள்ளது, இது மனித மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு கடுமையான மாற்றங்களைக் கொண்டிருக்கக்கூடும் என்பதால் இது சிக்கலானது..

விக்னேஸ்வரன் கஜாணனன்

13 வர்த்தகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்

01) நவீன விஞ்ஞானத்தின் தந்தை என அழைக்கப்படுவது யார்? அரிஸ்டோட்டில்

02) புவியின் உபகோல் எது? சந்திரன்

03) குருதிச்சுற்றோட்டத்தை கண்டுபிடித்தவர் யார்? வில்லியம் விரார்வே

04) புவியின் மேற்பரப்பிற்கு அண்மையில் அமைந்துள்ள வளிமண்டல படை?
மாறன் மண்டலம்

05) குருதியின் நான்கு வகைகளையும் குறிப்பிடுக?
சார்லஸ்-லைன்ட் சைனர் - A,B,AB,O - பொதுவாங்கி-AB, பொதுவழங்கி-O

